# பாரதிதாசனின்
# கலையும் கருத்தும்

தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21

பாரதிதாசனின்

# கலையும் கருத்தும்

பதிப்பாசிரியர்கள்


முனைவர் தி.நடராசன்
முனைவர் தூ.சேதுபாண்டியன்
முனைவர் ம.திருமலை
முனைவர் மு.மணிவேல்



தமிழியற்புலம்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை-21.

## பதிப்பு விவரங்கள்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **பாரதிதாசனின் கலையும், கருத்தும்** |
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் தி. நடராசன்<br>முனைவர் தூ.சேதுபாண்டியன்<br>முனைவர் ம.திருமலை<br>முனைவர் மு.மணிவேல் |
| பொருள் | : | பாரதிதாசன் படைப்புக்கள் பற்றிய திறனாய்வு |
| முதற்பதிப்பு | : | ஏப்பிரல் 2001 |
| பக்கங்கள் | : | 107 + iv |
| விலை | : | ரூ. 40.00 |
| வெளியிடுவோர் | : | **தமிழியற்புலம்<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம்<br>மதுரை-21.** |
| அச்சிட்டோர் | : | சந்தோஷ் பாரதி சிஸ்டம்ஸ் & கிராபிக்ஸ்<br>428, மீனாக்ஷி நிலையம், வெல்லிங்டன் ரோடு<br>நாகமலை, மதுரை – 625 019.<br>போன் : 858093, செல் : 98430–58093. |

# பதிப்புரை

"பாரதிதாசனின் கலையும் கருத்தும்" என்ற தலைப்பிலமைந்த இச்சிறு நூல், பாரதிதாசன் பற்றிய ஆய்வுகளுள் மேலும் ஒரு மைல்கல். பாரதிதாசனின் படைப்புக்கள், அவரது பிற ஆளுமை வெளிப்பாடுகள் குறித்த எட்டு ஆய்வுக்கட்டுரைகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கிய உலகில் மகாகவி பாரதியார் தொடங்கி வைத்த புனைவியல் கவிதை நெறிப்போக்கை வளர்த்தெடுத்த பெருமைக்குரியவர் பாரதிதாசன். தமிழ் இலக்கியத்தில் இன்று காணப்படுகின்ற வளர்ச்சி நிலைகளுக்கு அடிப்படையாக அமைந்தவர்கள் பாரதியும், பாரதிதாசனும். "பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள்" என்ற நீள்வரிசைக் கவிஞர்களின் மரபு இன்று தமிழ்க் கவிதையுலகில் உண்டு. பாரதிதாசனால் வளர்த்தெடுக்கப்பட்ட புனைவியல் கவிதை நெறியை இக்கவிஞர்கள் இன்றளவும் வளப்படுத்தி வருகின்றனர்.

பெருஞ்சிறப்பிற்குரிய கவிஞர் பாரதிதாசனின் பெண்ணியச் சிந்தனைகள், பொருளியற் சிந்தனைகள், சமூகச் சிந்தனைகள், அரசியல் சிந்தனைகள், அவரது கவிதைக்கலை, திரையுலகச் செயற்பாடுகள் முதலிய பல கூறுகளை இந்நூலின் கட்டுரைகள் ஆராய்கின்றன. தக்க வல்லுநர்கள் படைத்தளிக்கும் இக்கட்டுரைகள் வாசகர் சிந்தனைக்கு விருந்து.

இந்நூல், அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமல்ல; புள்ளியிட்டெழுதிய புதுக்கோலம். இதனைத் தமிழ் ஆய்வுலகிற்குக் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம்.

**பதிப்பாசிரியர்கள்.**

# உள்ளே....


| | | | |
|---|---|---|---|
| 1. | புதுக்கருத்தைச் சொல்க<br>மன்னர்மன்னன் | .... | 1 |
| 2. | பாரதிதாசன் – பாட்டும் பறவையும்<br>தி. முருகுசுந்தரம் | .... | 15 |
| 3. | பாரதிதாசன் படைப்புக்களில் மார்க்சிய காந்தியக் கலப்புப் பொருளியல் கொள்கை<br>அக்னிபுத்திரன் | .... | 28 |
| 4. | பெண்ணிய நோக்கில் பாரதிதாசன் படைப்புக்கள்<br>ஜே. பாத்திமா | .... | 39 |
| 5. | பாவேந்தரும் தமிழ்சினிமாவும்<br>ஆர்.கே. அழகேசன் | .... | 48 |
| 6. | பாரதிதாசன் படைப்புக்களில் நிலவு<br>ச. கண்மணி | .... | 61 |
| 7. | பாரதிதாசனும் பாட்டாளிமக்களும்<br>பெ. சுபாசு சந்திரபோசு | .... | 75 |
| 8. | பாரதிதாசன் கதைக்காவியங்களில் அரசியல் சமத்துவம்<br>மு. அருணாசலம் | .... | 82 |

# 1. புதுக்கருத்தைச் சொல்க!

மன்னர்மன்னன்

'கலை' என்பதைக் "கவிதைக் கலை" யாகக் கொண்டு, அதன் கருத்து என்னவாக இருக்கவேண்டும் என்பதைப் பாவேந்தரின் பார்வை வழி நின்று விளக்க எண்ணுகிறேன்.

பாவேந்தரின் பார்வையில், கவிதை கவிதைக்காகவே, கலை கலைக்காகவே எனும் கருத்து ஒப்புக்கொள்ளப்படவில்லை. அவை மக்களுக்காகவே என்றுதான் பாவேந்தர் கருதியிருக்கிறார்.

**"இருக்கும் நிலை மாற்ற**
**ஒரு புரட்சி மனப்பான்மை**
**ஏற்படுத்தல்**
**பிறர்க்குழைக்கும் எழுத்தாளர் கடனாம்" என்பார் பாவேந்தர்.**

**"பொதுமக்கள் நலம் நாடிப்**
**புதுக்கருத்தைச் சொல்க"**– எனத் தம் கவிதைக் கோட்பாட்டை வரையறுத்துக் கொண்டவர் பாவேந்தர்.

"புதுக்கருத்தைச் சொல்க" என்பது மூன்று வகைத்தாகப் பிரித்து எண்ணப்படலாம்

1. தாமே புதுக் கருத்தைச் சொல்வது,
2. மற்றொருவர் கருத்துக்கு அரணாகவோ முரணாகவோ சொல்வது,
3. முன்னோர் மொழிந்த நூற்கருத்தை விரித்துரைப்பது அல்லது மறுத்துரைப்பது.

இம்மூன்று வகைத்தாய் எக்கருத்தைச் சொன்னாலும், அக் கருத்து, பொதுமக்கள் நலம் நாடியாக இருக்கும் நிலை மாற்றும் புரட்சிக்கு வித்தூன்றுவதாக அமைதல் வேண்டும். இந்தக் கோட்பாடுகளைப் பாவேந்தரின் படைப்புகளிலிருந்தும் வாழ்க்கையினின்றும் கண்டறிவது இந்த உரையின் நோக்கமாகும். இருக்கும் நிலை மாற்ற ஒரு புரட்சி இச்சொற்றொடரில் 'புரட்சி' என்பதற்குப் பொருள் விளக்கம் கிடைக்கிறது. மேலும் இச் சொற்றொடரே ஒரு புதுக் கருத்தாகவும் அமைகிறது.

'முன்னோர் சொன்னது' என்று மேற்கோள் காட்டியே பழமைச் சேற்றில் அழுந்தியபடி, நடைமுறை மாற்றங்களை ஏற்க மறுக்கின்றவர்களை நோக்கிப் பாடுவார்.

**பழைய நூற்கள் இப்படிப் பகர்ந்தன**
**என்பதால் எதையும் நம்பிவிடாதே**
**உண்மை என்று நீ ஒப்பிவிடாதே**

பெருநாளாகப் பின்பற்றப்படுகிறது
வழக்கமாக இருந்துவருவது
என்பதால் எதையும் நம்பிவிடாதே
உண்மை என்று நீ ஒப்பிவிடாதே
பெரும்பான்மையினர் பின்பற்றுகின்றனர்
இருப்பவர் பலரும் ஏற்றுக் கொண்டனர்
என்பதால் எதையும் நீ நம்பிவிடாதே

ஒருவர் சொன்னதை உடன் ஆய்ந்துபார்
அதனை அறிவினாற் சீர்தூக்கிப்பார்
அறிவினை உணர்வினால் ஆய்ந்து சரி எனில்
அதனால் உனக்கும் அனைவருக்கும்
நன்மை உண்டெனில் நம்பவேண்டும்
அதையே அயராது பின்பற்றி ஒழுகு!

இக்கவிதை வரிகளில் இறுதியில் "இவைகள் புத்தர் பெருமான் உவந்து மாணவர்க்கு உரைத்தவை", என்பதாக அமைந்துள்ளது. "முன்னோர் மொழிந்ததை இவரும் வழிமொழிந்து சொன்னவை புதுக்கருத்து என்றிவர் ஏற்றுக்கொண்டமை காட்டும் கவிதை வரிகள், இவரின் புதுக்கருத்துக்கொள்கைக்கு அரண் செய்வனவாகவே அமைந்துள்ளமை கருத்தக்கவை.

அதாவது, புத்தர் சொன்னவற்றைப் புதுக்கருத்தாய் எடுத்துச் சொல்லும் வகைப்பட்டதாகும்.

பாவேந்தர் சொன்ன புதுக்கருத்து ஒன்றை நாம் பார்ப்பதற்கு முன்னமேயே இதே புத்தர் கருத்ததை எடுத்துச் சொன்னதை நான் குறிப்பிட்டதற்குக் காரணம் ஒன்றுண்டு.

முன்னோர் சொன்னதை முற்றிலும் நம்பிவிடாதே என்பதை முதலிற் சுட்டிய பாவேந்தர், 'ஒருவர் சொன்னதை உடன் ஆய்ந்துபார்'. அதனை அறிவினாற் சீர்தூக்கிப்பார். அறிவினை உணர்வினால் ஆய்ந்து சரி எனில் அதனால் உனக்கும் அனைவருக்கும் நன்மை உண்டெனில் நம்பவேண்டும். அதையே பின்பற்றி ஒழுகு தம்பி! என்றும் முடிவுரை சொன்னதற்குத் தொடர்புடையதான ஒரு கவிதையை இனி நாம் காணப் போகிறோம்.

இன்றைய பாகிஸ்தான் நாட்டுப் பகுதியில் உள்ள குவெட்டா எனும் ஊர்ப்பகுதியில் நில நடுக்கம் ஏற்பட்டு மிகப்பெரும் நாசத்தை உண்டாக்கிற்று. 1935ஆம் ஆண்டில் ஏற்பட்ட இந்த இயற்கைச் சீற்றம் அறுபதாயிரம் பேரின் உயிரைக்குடித்தது, ஊரை உலுக்கிற்று.

பானை வெடிக்கையிலே -அதில்
பருக்கை தப்புவதோ?

என்று மனமுருகி அந்தப் பெருந்துயரைச் சுட்டுகிறார் பாவேந்தர்

எண்ணச் சகிக்கவில்லை-நகர்
எங்கும் சுடுகாடாம்!
கண்டவர் செத்திருப்பார்-அவர்
அன்பினில் செத்திருப்பார்
எண்டிசை கேட்டிருக்கும்-இதை
ஏக்கம் அடைந்திருக்கும்

நிலநடுக்கத்தை அறிந்து ஆற்றாது பாடி வந்தவரின் மனதில் மனிதனின் நிலையாமை குறித்த பழைய நினைவு தோன்றுகிறது!

சாவது நிச்சயமாம்-நான்
சாவது நிச்சயமாம் என்ற
சத்திய வார்த்தையினை
கூவுதம்பி கூவு-இந்தக்
குவலயம் கேட்கக் கூவு!

முன்னோர் நெறிப்படியான சிந்தனையோட்டம் வந்து விட்டதைச் சொல்லி முடித்துவிட்டு,

அந்தத் தெளிவினிலே-உனக்
காண்மை உதித்துவிடும்

என்ற புதுக்கருத்தைச் சொல்கிறார். பிறவி எடுத்துவிட்ட மனிதன் எதோ ஒரு நாளில் சாகவேண்டியவன் என்ற முடிவிலிருந்து தெளிவு பிறக்கிறதாம். தெளிவினின்று இவனுக்கோர் ஆண்மை பிறக்குமாம். அதன் விளைவு?

பாடுகிறார் : அந்தத் தெளிவினிலே-உனக்
காண்மை உதித்துவிடும்
சொந்த உலகினிலே-என்றும்
தொல்லை விளைத்துவரும்

எந்த மனிதனையும் நீ
ஏறிக் கலக்கிடுவாய்
சந்ததம் இன்பத்திலே-புதிய
சாரும் வகை புரிவாய்.
மக்களுக்கிங் குழைப்பாய்-இங்கு
வாழ்ந்திடும் நாள்களெல்லாம்
தக்கன செய்வதற்கே-மனம்
சலித்தல் விட்டொழிப்பாய்
அக்கினி மத்தியிலும்-நீ
அஞ்சுதல் நீக்கிடுவாய்!
புக்க மனிதரெலாம்-ஒற்றைப்
போகமுற உழைப்பாய்!

குவெட்டாவில் நடந்த நிலநடுக்கத்திலிருந்து நாம் பெறும் பாடமாகப் பாவேந்தர் சொன்னதைத் தொகுத்துப் பார்ப்போம்.

மனிதப்பிறவிக்கு எந்த நேரத்திலும் சாவு நேரலாம் என்கிற உண்மையினை மனத்தில் தேக்கித் தெளிந்து அதனின்று எழுச்சியுற்றுச் செயல்படவேண்டும்.

பிறர் நலனுக்கு ஊறு செய்வானை மோதி மிதித்துவிடு! சலிப்பை விரட்டு! அதாவது பொது நலத் தொண்டினை உடனே ஆற்றிடத் தொடங்கு! இந்தப் பாடல் எழுதிப் பதின்மூன்று ஆண்டுக்குப்பின், இதற்கு விளக்கம் அளிப்பது போன்றதோர் நிகழ்ச்சி நடைபெற்றது. பெரும்புலவர் ஒருவரின் நூல் ஒன்றைப்பற்றி உள்ளூர்ப் புலவர் ஒருவர் பாவேந்தரிடம் கருத்துரைத்துப் பேசினார். " நூறாண்டு வாழ்வது எப்படி ?" என்பதான கருத்துடைய அந்த நூலைப்பற்றிப் பாவேந்தர்,

**"அதென்ன நூறாண்டு வரையறை"**
**நூற்றிருபது ஆண்டு இருக்கக்கூடாதா**

என்று கேட்க, 'ஒரு, நூற்றாண்டுக் கணக்கு தான்' என்றார் புலவர்

**"சரி ஒரு மனிதன் ஏன் நூறு ஆண்டுகள் வாழவேண்டும்?**
**சாவைத் தள்ளிப்போடும் முயற்சியா?**
**அது நம் கையில் இல்லை. சாவு எப்போதும் நிகழலாம்.**
**நெருநல் உளன் ஒருவன்-இன்றில்லை என்னும்**
**பெருமை யுடைத்திவ் வுலகு –** என்பார் வள்ளுவப்பெருந்தகை.

இந்த உண்மையை உறுதியாக நம்புகிறவன், தான் ஆற்றுகின்ற பொதுநலத் தொண்டை உடனே ஆற்றிமுடிக்க முந்தவேண்டும்.

பொதுநலத்தில் அக்கறை உடையவராயிருந்தாலும், தன் கருத்துப்படியான தொண்டினை உடனுக்குடன் செய்துமுடிப்பதிலே முனைப்புக் காட்ட வேண்டும். 'யாக்கை நீர்க்குமிழி' என்பதன் பொருள் இப்படி அமையவேண்டும். சாவை ஒத்திப்போட முயல்வதைவிடப் பொதுநலத் தொண்டை ஆற்றுவதில் கருத்தூன்றுவதே மாந்தனுக்கு இலக்கணம்!

இதைக்கேட்ட புதுவைப் புலவர் திணறிப்போனார். சின்னாட்களில் நூலாசிரியரான பெரும்புலவர் மறைந்துபோன செய்தியுடன் வந்தார் புலவர். "பார்த்தாயா? நல்ல நூல்கள் எழுதுவதை விட்டுவிட்டுச் சாவை ஒத்திப்போட முயன்றவர் தன் மனிதத்தொண்டினை ஆற்ற முடியாமற் போய்விட்டது!" பாவேந்தர் இவ்வாறு சொன்னது முன்னோர் மொழிந்த கருத்துக்கு புதியவிளக்கமாகிறது. குடும்பவிளக்கு விருந்தோம்பல் பகுதியில்,

மாவரசர்

**"சாதல்**
**வருங்கால் சிரிப்பான்**
**பொதுவுக்கே வாழ்வான்!**

பெருமக்கள் வாழ்த்தும்
பெறுவான்"

என்று கூறுவது பாவரசர் கண்ட புது நெறிக்கு விளக்கம் என்றும் கூறத்தகும்!

பொதுநலன் கருதி உழைக்கின்றவனைச் சட்டங்கள் வழிமறிக்கின்றன. சமுதாயக் கட்டுப்பாடுகள் தடைக்கற்களாய் அமைகின்றன. இந்த நிலையில், என்ன செய்வான்? என்ன செய்ய வேண்டும்? 'தடைக்கற்கள் உண்டென்றாலும் தடந்தோள்கள் உண்டு' என்கிற அழகிய வரியைக் கூறியபடியே சட்டத்தை மீறிச் சென்று விடமுடியுமா? பாவேந்தரின் வாழ்க்கையிலிருந்தே முதலில் ஒரு விளக்கம் பெறலாம்.

சென்னையிலிருந்து தொடர்வண்டியில் புதுச்சேரி செல்பவர்கட்கு வசதியாக, ஓர் இணைப்புப் பெட்டி சேர்ப்பார்கள். அந்த ஒரு வண்டியை விட்டு விட்டால், வேறு வண்டிகளில் இந்த வசதி இல்லை. இணைப்புப் பெட்டியில் ஏறிவிட்டால், விழுப்புரத்தில் அதனைத் கழற்றிப்புதுச்சேரி வண்டியில் இணைத்துவிடுவார்கள். இந்த வசதியில்லாத வண்டியில் ஏறினால் விழுப்புரம் சந்திப்பில் இறங்கிப் புதுச்சேரி வண்டிக்கு மாறிக் கொள்ளவேண்டும்.

சற்றே காலந்தாழ்ந்து வந்ததால் இணைப்புப் பெட்டியில்லாத மற்றோர் வண்டியில் பாவேந்தரும் நானும் ஏறிக்கொண்டோம். நெரிசல் இல்லை. அவர், தம் வழக்கப்படிச் சிறார்கள் போல், சன்னல் ஓரமாய் உட்கார்ந்துகொண்டார். நான், சுமைகள் வைக்கும் மேல்தட்டில் படுத்துக்கொண்டேன். விழுப்புரத்தில் இறங்கி மாறவேண்டும் என்பதால் நேரத்தைக் கணக்கிட்டு மனதில் குறித்துக்கொண்டு படுத்துவிட்டேன். வண்டி ஓடிக்கொண்டிருந்தது, நேரமும்! திடுமென விழித்து, "விழுப்புரம் வந்து விட்டிருக்குமே" என்றெழுந்து மணியைப்பார்த்தேன். நான் நினைத்தபடி நேரமாகியிருந்தது. கீழே குனிந்து விழுப்புரம் வந்திருக்குமே என்றேன், "செங்கல்பட்டே இன்னும் வரலியே! என்றார். எனக்கும் தூக்கம், மீண்டும் படுத்து விட்டேன். அரைமணிநேரம் கழிந்திருக்கும், 'நெல்லிக்குப்பம்!' என்று கூவும் ஒலி கேட்டது. நான் கீழே குதித்து "விழுப்புரத்தைத் தாண்டிவிட்டது வண்டி!" என்றேன். தூக்கத்திலிருந்தார் போலும், பதறிய பாவேந்தர், "இப்ப என்ன செய்வது? என்றார்" வண்டி கடலூரில் நிற்கும்—அங்கே இறங்கிப் போய்விடலாம்" என்றேன்.

"அதெப்படி?

"நம்மிடம் பயணச்சீட்டு இருக்கிறது, புதுச்சேரிவரைக்கும்! இங்கே கடலூரில் இறங்கினால் விழுப்புரத்திலிருந்து கடலூர் வரைக்கும் உரிய கட்டணம் செலுத்திவிட்டால் போகிறது!" என்றேன்.

மீண்டும் "அதெப்படி?" இதற்குள் வண்டி கடலூர் நிலையத்திற்கு வந்து விட்டது.

நிலைய மேடைப் பகுதியில் இறங்கி நிலைய வாயில் வழியில் போகாமல், மற்றொரு புறம் இறங்கி நடந்துவிடலாம்.

இறங்கச் சொன்னபோது, "இது தப்பில்ல ?" என்றார். கைப்பெட்டியை ஒரு கையில் பிடித்த படி மற்றொரு கையால் அவரைப் பற்றிக் கொண்டு இறங்கினேன். தயங்கியபடி என்னைப் பின்தொடர்ந்தார். தண்டவாளம் கடந்து, வேலியில்லாப் பக்கம் நடந்து, பேருந்து நிலையம் வந்து பேருந்தில் அமர்ந்தோம். அப்போதும்.

"இது தப்பில்லே ?" என்றார்.

பெரும்பாலானவர் இந்த வழியில்தான் வருகிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டினேன். புதுச்சேரியில் எங்கள் வீடு வந்த பின்னர்தான் எனக்குள் ஒரு தெம்பு வந்தது. பயனச்சீட்டு இருக்கிறது, அதனைக் காட்டி மேற்கொண்டு கட்டணமோ கூடுதலாகத் தண்டத் தொகையோ செலுத்திவிட்டால்—குற்றமில்லை என்பது என்கருத்து.

ஆனால் பாவேந்தர், 'குறுக்குவழி செல்வது குற்றம்'

என நினைத்தார் போலும். சில காலம் கடந்தது. தேவிகுளம்—பீர்மேடு பகுதிகளைத் தமிழ் நாட்டெல்லையிலிருந்து பிரித்துக் கேரளத்துடன் இணைக்கும் திட்டம் வந்தது!

இதற்குப் பெருமளவில் தமிழ் நாட்டில் எதிர்ப்பிருந்தது. போராட்டம் வெடித்தது. புதுவையில் பாவேந்தர் தலைமையில் அனைத்துக் கட்சியினர் போராட்டம் ஏற்பாடாகிக் கடையடைப்பு நடைபெற்றது. ஆளுங்கட்சியினரின் அடாவடி, அடக்குமுறை, காவல்துறை முறைகேடுகள் நடந்தும் முழுக் கடையடைப்பு—வேலை நிறுத்தம் நடந்தது. கடைத்தெருவில் பாவேந்தர் வீறுநடைபோட, அவர் பின்னால் பல்லாயிரவர் அணிவகுத்து வந்தனர். ஒரேயோர் உணவுவிடுதி மட்டும் திறந்திருந்ததைக் கண்டு உள்ளே நுழைந்தார் பாவேந்தர். உரிமையாளர் இவரின் இளமைக்கால நண்பர் தான். ஆனால் அவர் பிடிவாதமாகத் தன் கருத்தைச் சொல்லிக் கடையை மூட மறுத்தார்.

வெகுண்டெழுந்த பாவேந்தர், கடுமையாகப் பேசினார். "கடையை நீ மூட மறுத்தால் நான் மூடச் செய்வேன்" என்று கூறினார் பாவேந்தர். ஊர்வலம் நடத்தக் காவல் துறையின் இசைவு இல்லை என்பதை காவல் கண்காணிப்பாளர் ஒருவர் கூற,

"இன்று கடையைத் திறக்கப் பொதுமக்களின் அனுமதி இல்லை" என்று உரத்த குரலில் கூறினார் பாவேந்தர். மக்கள்திரள் கண்டு கடையை மூடி விட்டார் விடுதி உரிமையாளர்.

இரண்டு நாள் கடந்து இதைப்பற்றிய உரையாடல் நடந்தபோது நான் கேட்டேன். "தொடர் வண்டியிலிருந்து மறுபக்கம் இறங்கத் தயங்கிய நீங்கள், ஒரு கடையை மூடச்செய்ய அச்சுறுதினீர்களே—ஊரைக்கூட்டிச் சென்றீர்களே ? எப்படி ?" மிகத் தணிந்த குரலில். "அது தன்னலம்—சட்டத்தை மீற நான் தயங்கினேன். இது பொதுநலம். சட்டத்தை மீறத்துணிந்தேன்" என்றார். இருக்கும் நிலைமாற்ற ஒருபுரட்சி மனப்பான்மை ஏற்படுத்திய புதுக்கருத்து அல்லவா இது ?

தன்னலத்துக்காகச் சட்டத்தை மீறுவதும், விதிகளைப் புறக்கணிப்பதும் புரட்சி அன்று. பொதுநலம் கருதிச் சட்டத்தை மீறிச் செயல்படுவது குற்றமன்று என்கிற புதுக்கருத்தை நாம் பாவேந்தரிடமிருந்து கற்கிறோம். படைப்புகளிலும் இந்தக் கருத்தின் பதிவுகளை நாம் காணமுடிகிறது.

"பில்கணீயம்" என்ற வடமொழி நூலைத் தழுவியது" என்ற குறிப்புடன், எழுந்த "புரட்சிக்கவி" சிறுகாப்பியம் மூல நூலின் கதைத்தலைவன் வடமொழிக்கவிஞன் பில்கணன், தன் நாட்டு இளவரசியின் மீது காதல் கொண்டான். அரசன் இந்தக் காதலை ஏற்கவில்லை. கவிஞனின் தலையைக் கொய்திட ஆணை பிறப்பிக்கிறான். இளவரசியுடன் உறவுகொண்ட இன்பத்தினை நினைந்து நினைந்து ஏக்கமும் துக்கமும் வெளிப்படுத்துகிறான் கவிஞன்.

இந்தக் கதைக்கருவைக் கொண்டு, உருவான 'புரட்சிக்கவி' சிறுகாப்பியத்தில், கவிஞன் உதாரன் தான் சாவதற்கு அஞ்சவில்லை. ஆனால், இதற்குக் காரணமாயிருந்த தமிழ் மீது பழிவந்து சேரலாகாதே என்று கருத்தை எடுத்துக் கூறினான்.

உதாரன் சொல்வான்.

**தமிழறிந்ததால் வேந்தன் எனை அழைத்தான்**
**தமிழ்க்கவியென்றெனை அவளும் காதலித்தாள்**
**அழிவதற்குக் காரணமாயிருந்ததென்று சமுதாயம் நினைத்திடுமோ?**
**அய்யகோ என் தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்பதுண்டோ?**
**உமை ஒன்று வேண்டுகின்றேன்-மாசில்லாத உயர் தமிழை உயிர்**
-என்று போற்றுங்கள்

பழம் பாடல் ஒன்றன் மூலக்கருத்தைப் பயன்படுத்தித் தமது தமிழ் உணர்வை வலியுறுத்துகின்றார் பாவேந்தர்.

இளவரசிக்குப் பாட்டியற்றும் திறன் கற்பிக்க வந்த தமிழ்க்கவிஞன், அவன் குற்றமன்று. இளவரசி அமுதவல்லி இவன் பாடற்புலமையைக்கண்டும், இவ்விருவரிடையே அரசன் திரைபோட்டும், ஒருவர்க்கொருவர் நெருங்கிவிடாமல் இருக்கச் சூழ்ச்சித் திரைவிரித்து வைத்ததையும் அறிந்தே இளவரசிதன் தந்தையான அரசனிடமே மோதுகின்றாள். சட்டத்தை இயற்றிய அரசனே தீர்ப்பு அளிப்பது ஆகாது என்றும் குற்றம் சாட்டுகின்றாள்.

"இலை உனக்கதிகாரம்" என்று இடித்துரைக்கிறாள் அமுதவல்லி. புரட்சிக்கவி சிறுகாப்பியத்திலே கவிஞன்—இளவரசியிடையே மலரும் காதலின் மூலமாகப் பாவேந்தர் வலியுறுத்துவன சமநீதி—தமிழ் உணர்வு ஆகிய புதிய இரு கருப்பொருள் என்பதை அறிய முடிகிறது.

முன்னோர் காலத்தில் மொழிந்ததன் உட்கருத்தைத் தம் கொள்கைவழி நமக்கு விளக்கும் திறன் கண்டுகொள்ளமுடிகிறது. பாவேந்தரின் "அழகின் சிரிப்பு" நூல் பெயரளவில்—மேலோட்டமாகப் பார்க்கையில் இயற்கையின் எழில் பாடும்

நூலாக நமக்குத் தோன்றுகிறது. ஆனால் கருத்தூன்றிப் படிக்கப்படிக்கத் தமது புதுக்கருத்தை யெல்லாம் "அழகின் சிரிப்பு" மூலம் நமக்கு அள்ளித்தருவதை அறியலாம். நகர்ப்புறத்தின் பெருமைகளையும் சிறுமைகளையும் கண்டு நமக்கு உணர்த்திய பாவேந்தர்,

சிற்றூரை நோக்கி நம்மை இட்டுச் செல்கின்றார். ஒதுக்குப்புறமான சேரிப்பகுதிக்குள் நுழைகிறார். பட்டணத்தில் மிக அதிகவிலையில் கிடைக்கக்கூடிய பண்டங்கள் சிற்றூரில் மிக மலிவாகக் கிடைக்கும் என்ற ஆசையின் காரணமாகத்தான் சிற்றூர்ப்புறத்துக்குப் பலரும் வருவர். இதனைச் சிற்றூர் மக்களும் அறிந்துவைத்திருக்கிறார்கள். எதிர்வருகிறாள் பெண் ஒருத்தி

இளையவள், முதியவள்போல்
இருந்தனள் ஒருத்தி, என்னை
வளைத்தனள், கோழிமுட்டை
வாங்கவா வந்தீர், என்றாள்
விளையாட்டாய்ச் "சேரிமுட்டை"
வேகாதே என்றேன். கேட்டுப்
புளித்தனள். எனினும் என்சொல்
'பொய்' என்று மறுக்கவில்லை

"என்றேனும் முட்டை உண்ட
துண்டோ நீ" என்று கேட்டேன்
ஒன்றேனும் உண்டதில்லை,
தின்றேனேல்புளித்த கூழில்
சேர்த்திடும் உப்புக்கான
ஒன்றரைக் காசுக்கென்றான்
உயிர் விற்றால் ஒப்பார்"-என்றாள்

நகரத்து மக்கள் துய்க்கும் பொருள் எல்லாமே, சிற்றூர் மக்களின் உழைப்பினால் வந்தவிளைச்சல் தான் அந்த விளைச்சலின் பயன் எதையும் சிற்றூர் மக்கள் துய்ப்பதில்லை. உழவன், தான் விளைத்த பயிரைப் பயன்படுத்தி உண்பதில்லை. நெசவாளி தான் உருவாக்கிய துணியை உடுத்துவதில்லை.

தன் விளைச்சலைப் பிறர்க்கு விற்பதால் கிடைக்கும் கூலியை அல்லது சிறிய காசைத் துய்ப்பதற்கும் பொருளியல் இடந்தராது.

இது பொருளியல் நிகரமைப்பு இல்லாத கோளாறு. முட்டை ஒன்றைத் தின்றுவிடில் தன் வயிற்றுப் பாட்டுக்கு உதவும் கூழில் கரைக்க உப்பு வாங்கவும் காசு இராது. இந்தக் கணக்கில் சிக்கித் தவிக்கும் சிற்றூர்ப் புறத்து உழைப்பாளிப் பெண்ணை நோக்கிச் சேரி முட்டை வேகாதே! என்று சொன்னது நகர மக்களின் திமிர் என்றுதானே சொல்ல வேண்டும். ?

சமுதாயப் பிற்போக்குச் சூழலை—பொருளியல் ஏற்றத் தாழ்ச்சிக் கொடுமையைச் சித்திரிக்கும் இப்பாடல் போன்றே அழகின் சிரிப்பு நூலில்,

புறாக்கள் வேறிருந்தருந்தும் கட்டில்லை. கீழ்மேல் என்னும் வழக்கமில்லை என்பன போன்ற பாடத்தை மனிதர்க்கும் எடுத்துக்காட்டுவதை அறிகிறோம். புறாக்களின் இல்வாழ்க்கை நெறிகளும் இந்தப்பாடலில் உணர்த்தப் பெற்றுள்ளன.

அழகோவியமாகச் சித்திரிக்காமல் அறிவுவிளக்கமாக அழகின் சிரிப்பு வெளியிடும் புதுக்கருத்துக்கள், இருள், ஆல், தமிழ், வான், கிளி ஆகிய தலைப்புடைய பாடல்களிலும் நமக்குக் கிடைக்கின்றன.

"தமிழியக்கம்" – தமிழ்மொழி வளர்ச்சிக்கான பணிகளை வரையறுத்துக் கூறும் நூல். தமிழைப் போற்றிப் புகழ்ந்துகொண்டிருந்தால் மட்டுமே நம் கடமை முடிந்துவிட்டதாக எண்ண முடியாது என்ற முடிவான கொள்கையை வலியுறுத்த வந்த பாவேந்தர் தமது தொடக்க காலத்தில் பரவி மகிழ்ந்த

'கேட்கும் ஒலிகளெல்லாம் கேசவா கேசவா' என்ற பாடல் வரிகளை நினைவூட்டும் வகையில், இயற்கையும் புள்ளினங்களும் விலங்கினங்களும் ஏற்படுத்தும் ஓசைக்கே அரும்பொருள் காணுகிறார்.

**காக்கை 'கா' என்றுதனைக்**
**காப்பாற்றச் சொல்லும்! ஒரு**
**கருமுகில்தான்**
**நோக்கியே கடமடா**
**என்றே தன் கடனுரைக்கும்**
**நுண்கண் கிள்ளை**
**வாய்க்கும் வகை 'அக்கா' என்**
**றழைத்ததனால் வஞ்சத்துப்**
**பூனை 'ஞாம் ஞாம்'**
**காக்கின்றோம் எனச் சொல்லக்**
**கழுதை அதை 'ஏ' என்று**
**கடிந்து கூவும்**
**கூ எனவே வையத்தின்**
**பேர் உரைத்துகுயில் கூவும்**
**வாழ், வாழ் என்று**
**நாவினிக்க நாய் வாழ்த்தும்**
**நற்சேவல் "கோ" என்று**
**வேற்தன் பேரைப்**

**பாவிசைத்தாற் போலிசைக்க**
**வருங்காற்றோ "ஆம்" என்று**
**பழிச்சும்! இங்கு**
**யாவினுமே தமிழல்லால்**
**இயற்கை தரும் மொழி வேறொன்**
**றில்லை அன்றோ?**

பார்க்கும் எவற்றிலும் பரமன் காட்சியளிப்பதாகவும், கேட்கும் ஒலியெல்லாம் இறைபோற்றி இசைப்பதாகவும் பேசப்பட்டு வந்த காலத்தை மாற்றித் தமிழ் மொழி ஏற்றத்துக்காகவே தம் கருத்தை முழங்கியிருக்கும் பாங்கு, காணத்தக்கது. தாமே எண்ணிப் பார்த்து இயற்றிய கருத்து இவ்வாறு இருக்க, இஃதே போன்ற பாரதிகாலத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்று, சமுதாய விழிப்பு உணர்ச்சி சார்ந்த புதுக்கருத்தை நான் சொல்லியாக வேண்டும்.

தம் நண்பர்களோடு உரையாடல் நடத்திக்கொண்டிருக்கிறார் பாரதியார். நால் வருணப்பகுப்பு பற்றிய வாதம் எழுகிறது. பிரம்மாவின் உடற்பகுதி நான்கிலிருந்து உதித்தனர் நால் வருணத்தார் என்கிறார் ஓர் அன்பர். பாரதி கேட்கிறார், பஞ்சமன் எங்கிருந்து உதித்தான் ? என்று கேட்டுவிட்டு, அவன் தான் தன் தகப்பனுக்குப் பிறந்தவன் என்றும் விளக்குகிறார்.

இது நையாண்டியாகச் சொன்னதன்று. நாம் சமுதாயச் சீர்கேட்டுக்கு அடிப்படையான நால்வருணப் பாகுபாட்டுக்குப் பாரதி வைத்த வேட்டு என்றே சொல்லலாம்.

இப்படிப்பட்ட கருத்துவளர்ச்சியின் முதிர்ச்சியால்தான் பாரதிப் பாட்டுவழி வந்த பாவேந்தர், தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கை முரசாகப் பொலிந்தார் என்பதும் நாம் உணரத்தக்கது. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில், உழைப்பாளர்களின் உரிமைக் குரலை முழக்கியவர்,

இசையமுது முதல் தொகுதியில் உள்ள காதல் பகுதியில் இடம் பெறும் 15 பாடல்களும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கை பற்றியே பாடியிருப்பது, மேல்தட்டு மக்களுக்கே உரியது 'காதல் இன்பம்' என்கிற பழைய சிந்தனையை உடைத்தெறிந்து, அன்றாடம் காய்ச்சிகளிடையே நிலவும் பரிவு, அன்பு, காதல் போன்ற உணர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுவதன் மூலம் ஒரு புதிய உலகுக்கே நம்மை இட்டுச் சென்றிருக்கிறார்.

படைப்பாற்றல் மிக்க பாவேந்தர் தம் உள்ளத்தெழுந்த கருத்தூற்றைக் கனலாகவும், புனலாகவும் நமக்கு வழங்கியிருப்பதைப் போன்றே தம் வாழ்க்கை நிகழ்வுகளிலும் தமக்கே உரிய தனிப்பாங்கில் கருத்தை வழங்கியிருப்பதற்குச் சான்றாகச் சிலவற்றை உங்கள் முன் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

சட்ட மன்றத் தேர்தலில் காங்கிரஸ் பேரியக்கத்துக்கு எதிராக உருவான மக்கள் முன்னணி சார்பில் வேட்பாளராகப் போட்டியிட்டார் பாவேந்தர். இந்த அணிக்கெனத் தேர்தல் சின்னம் ஒதுக்கப்படவேண்டும். இதற்கான கூட்டத்தில் போய் அமர்ந்திருந்தார். நுகத்தடியில் பூட்டிய காளை மாட்டுச் சின்னம் காங்கிரசுக்கு.

சைக்கிள், சிங்கம், பூ, அகல்விளக்கு, ரயில், யானை இப்படியாகச் சின்னங்கள் பட்டியலிடப்பட்டன. 'மக்கள் முன்னணி' சார்பில் வந்த ஒருவர் சைக்கிள் நமக்குக் கேட்கலாம் என்றார். ஒப்பவில்லை பாவேந்தர்.

சிங்கம்?

அதையும் ஏற்க வில்லை. மற்றவையும் தள்ளப்பட்டன இவர் 'யானைச் சின்னம்' வேண்டும் என்றார். இவர் கட்சியினரோ அது ஏங்க? விளம்பரங்கள் வரைய முடியாத சின்னம் என்றனர்.

பாவேந்தர் விளக்கம் இப்படி அமைந்தது

தெருவில் ஊர்வலம் விடும்போது சைக்கிள் ஊர்வலம் என்றால் எப்போதும் போகும் சைக்கிள் வருகிறது என்று மக்கள் எண்ணி விடுவர். 'பூ'வை எடுத்துக் கொண்டு போனால் யாரும் பார்க்க இயலாது. அகல்விளக்கு – பகலில் கொண்டுபோனால் சிரிப்பார்கள். 'ரயில்' – தெருவில் வர முடியாது. 'சிங்கம்' – கூண்டில்தான் கொண்டு வர வேண்டும். "இப்போதே கூண்டில் அடங்கி விட்டது" என்பார்கள்.

யானை – ஒரே ஓர் யானை, கழுத்தில் மணிஓசையுடன் தெருவில் வந்தால்–

தேரும் திருவிழாவுமாக மக்கள் கூட்டம் அலைமோதும் என்றார்.

அதே ஏற்கப்பட்டது, எங்கள் சொந்தச் செலவில், யானை ஒன்றைத் திருக்கோயிலூர் கோவிலிலிருந்து அழைத்துவந்து எல்லாத் தொகுதிகளிலும் நடமாடவிட்டோம். "யானையே" வென்றது! பாவேந்தரின் புதுக் கருத்தே வென்றது.

சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட நிதிக் குழுவில் பாவேந்தர் உறுப்பினரானார். குழுவின் கூட்டம் கூடியது முதலமைச்சர் குபேர், செலவினங்களை முன்மொழிந்தபோது, "நம்புதுவை மாநிலத்திலேயே முதுபெரும் மருத்துவரான சுகுமாரன் இப்போது, மருத்துவத்துறை இயக்குனராகச் செம்மையாகப் பணிபுரிகிறார். பணி ஓய்வுக்குப்பின் இருமுறை நீடிப்பும் தரப்பட்டிருக்கிறது. அவரின் திறமையால்தான் மருத்துவமனைகள் மிக நன்றாகச் செயல்படுகின்றன. எனவே அவருக்கு மற்றொரு பதவி நீடிப்பு வழங்கினால் மருத்துவத்துறையின் செயல்பாடு நன்கமையும்" என்றார் குபேர்.

பாவேந்தர் வினா : சுகுமாருக்கு வயது 60க்கு மேலாகிவிட்டது, உடல் நலமும் சீராக இல்லை. இந்த நிலையில் அவருக்கு பதவி நீடிப்புத் தரவேண்டுமா?

குபேர் சொன்னார்: அய்யோ அவர் இல்லாவிட்டால் மருத்துவத்துறையே சரியாக இயங்காதே

பாவேந்தர்: சரி குபேர், அப்படிப்பட்ட சுகுமாரன் இறந்து விட்டால் இழுத்து மூடிவிடுவார்களா சுகாதாரத்துறையை?

பதறிப்போனார் குபேர், "அதற்கில்லை அவர் என் நண்பர் என்னிடம் இந்த உதவியைக் கேட்டார்"

இதைக்கேட்ட பாவேந்தர், "அப்படிச் சொல்லு, உதவி என்று கேட்டுப் பெறலாம். ஆனால் அவர் இல்லாவிட்டால் எதுவுமே நடக்காது என்பதை நான்

ஏற்கமுடியாது. ஏனென்றால் அந்தப் பதவி இவரோடு பிறந்ததுமல்ல. அவர் சாகாமல் என்றென்றும் வாழ்வார் என்பதும் இல்லை".

நீடிப்பு வழங்கப்பட்டது.

அரசு இயந்திரத்தில் இப்படிச்சில கோணல்மாணல்கள் நடக்கும் போதெல்லாம், தமக்கே உரிய சிந்தனை வழியில் கருத்துக் கூறிப் புதுமை சேர்த்தார் பாவேந்தர். எவருக்கும், எதற்கும், எப்போதும் அஞ்சாமல் கருத்துக் கூறுபவர் என நாம் போற்றும் பாவேந்தர், மதுரைப் பகுதியிலிருந்து வந்த இளைஞர் ஒருவருக்கு வழங்கிய அறிவுரை புதுக்கருத்தாகவும் – பாவேந்தரின் துணிச்சலுக்கு விளக்கமாகவும் அமைந்தது.

மூன்று நான்கு பெட்டிகளில் தம் எழுத்துப் படிகளைச் சுமந்து கொண்டு பாவேந்தரின் முன் வந்துநின்றார் மதுரை இளைஞர் ஒருவர்.

பாவேந்தரிடம் தமது படைப்புகளையெல்லாம் காட்டி ஆதரவு கேட்டார்.

என்ன வேலை செய்துகிட்டிருக்கே ? என்று இவர் வினவ,

"கவிதைகள் எழுதறேன்" என்றார் இளைஞர்.

"நீ உருப்படமாட்டே" என்றார் பாவேந்தர். இளைஞர் பதறிப்போனார்.

எழுதி எடுத்துக்கொண்டு ஊர் ஊராய்ச் சென்று எவரிடமெல்லாமோ படித்துக் காட்டி ஆதரவு கேட்பதைச் சற்றே ஒதுக்கிவிட்டு, சொந்தமாக உன் வாழ்க்கைக்காக ஒரு வெற்றிலை பாக்குக் கடை வைத்தாவது வருவாய் தேடிக் கொள்!

உன் வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு வருவாய் தேவை. அதற்கான வழியைத் தேடிக் கொண்டால்தான், உன் படைப்புகளில் துணிச்சலாக நீ சொல்ல விரும்பும் கருத்தை வெளிப்படையாய்ச் சொல்லமுடியும். இல்லாவிடில், எவரிடம் நீ கையேந்தி நிற்கிறாயோ அவரின் கருத்தையொட்டியே நீ கவிதை எழுத வேண்டிய கட்டாயம் ஏற்படும்.

"என்னைப் பார்"

தமிழாசிரியப் பணி புரிந்து கொண்டே, என் எழுத்துப் பணியைச் செய்கிறேன். எனவே யாருடைய கொள்கையையும் என்னுடையதாக ஏற்கவேண்டிய கட்டாயம் வரவில்லை. துணிச்சலாகக் கருத்தைச் சொல்ல முடிகிறது. துதிபாட வேண்டிய சூழல் இல்லாததால்! கவிதையே தொழிலாக இருக்க முடிவதில்லை." தொடக்க நிலைப் படைப்பாளிக்கு அவர் வழங்கிய அறிவுரை தம் பட்டறிவின்பாற் பெற்ற புதுக்கருத்து அன்றோ ?

காலங்காலமாகத் திருக்குறளுக்கு உரைகள் சொல்லப்பட்டு வந்தாலும் அவை அறிவியல் சார்ந்த அய்யங்களைத் தீர்ப்பனவாக இல்லை. மேலும் திருவள்ளுவரின் நெறிக்குப்புறம்பான கருத்துகளும் உரைகாரர்களால்

சொல்லப்படுவதை உணர்ந்த பாவேந்தர், நீண்ட பல ஆண்டுகள் ஓர்ந்து, தமது தமிழ் இலக்கிய இலக்கணப் புலமையால் புதிய கருத்துகளை வழங்கியிருக்கிறார்.

**தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று.**

இதற்குப் பரிமேலழகர் உரை கூறுகிறது.

**மக்களாய்ப் பிறக்கின்**
**புகழுக் கேதுவாகிய**
**குணத்தொடு பிறக்க-**
**அக்குணமில்லாதவர்**
**மக்களாய் பிறத்தலின்**
**விலங்காய்ப் பிறத்தல் நன்று.**

இதற்கு உரையாகப் பாவேந்தர்

**தோன்று இல்-**
**நல்லதென்று தோன்றிய துறையில்**
**புகழோடு தோன்றுக**
**புகழோடு தோற்றமளிக்க**
**அஃதிலால்**
**புகழுக்குரிய செயல் செய்யாதவர்கள்**
**தோன்றலின்**
**அத்துறையிற் புகுதலினும்**
**தோன்றாமை நன்று**
**புகாதிருந்து விடுதலே நன்று** – என்று விளக்கமளித்தார்.

இந்தக் குறள் ஊழ் அதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது என்பதையும், புதல்வரைப் பெறுதல் அதிகாரத்தில் அன்று என்பனையும் கவனிக்க வேண்டும். மற்றொன்றும் எண்ணிப் பார்க்க வேண்டும். மக்கட்பிறவியாய்த் தோன்றுவது, பிறக்கின்ற அந்த மகவின் விருப்பமோ செயலோ அன்று; தாயும் தந்தையும் துய்க்கின்ற இன்பத்தின் விளைச்சல் கருஉயிர்த்தல் ஆகும். இந்த இயற்கையைப் பெற்றோர் அறுதியிட முடிவதில்லை. இந்தக் குழந்தை பிறந்து புகழ் ஈட்ட வேண்டும் என்ற 'விதி' ஏற்படுத்திப் பெறுவது இயற்கையன்று.

கூலவாணிகரின் மகன் சுப்புரத்தினம், தமிழ்ப் பெருங்கவிஞராகப் புகழ் பெற்றார் என்பது அந்தக் குழந்தை தன் பெற்றோர் வழிகாட்டுதலிலும் ஆசிரியர் பயிற்சியினாலும் தேர்ந்தெடுத்துக்கொண்ட துறை கவிதை புனைவது, அறிவியலார் கூறுவதும் வளர்ப்புச் சூழல் ஒரு குழந்தையின் எதிர்காலத்தை உருவாக்கும் என்பர். EMILE என்ற நூலின் பெரும்பான்மை கருத்துகளும் JEAN JACQUES ROUSSEAU தெரிவிக்கிறான்.

புகழ்பெற முடியாது என்பதால் "தோன்றாமை நன்று" என்று அந்தக் குழந்தை, மறுத்து விடுதல் என்பதும் இயற்கைக்கு மாறானது என்பதால், தோன்றுகின்ற துறையில் புகழோடு விளங்க வேண்டும் என்கிற கருத்து பொருத்தமாகிறது.

தந்தை பெரியார் அவர்களின் தந்தை வேங்கடப்ப நாயகர், தன் மகன் நாட்டின் பகுத்தறிவுப் பகலவனாக வேண்டும் என்றெண்ணியா தோற்றுவித்தார்? சவப்பெட்டி செய்பவனின் மகனும், செருப்புத் தொழிலாளியும் உலக மாமேதைகள் எனில், அவர்களின் பெற்றோர் விருப்பம் அப்படி இருந்து தோற்றுவித்தார்கள் என்று கூறமுடியாது.

பாவேந்தரின் கருத்து புதுக்கருத்து. முன்னோர்க்கும் முன்னோரான வள்ளுவப் பெருந்தகையின் நெறியைப் பாவேந்தர் விரித்துரைத்துப் புதுக் கருத்தைச் சொன்னார். உரைக்காரர்களின் உட்கிடக்கையை மறுத்து உண்மைக் கருத்தை உலகுக்கு அளித்தார் பாவேந்தர்.

மூன்று வகையினுள் அடங்கத்தக்கதாகப் புதுக்கருத்தைச் சொல்லிப் புதிய உலகினுக்கு நம்மை இட்டுச் செல்லும் பாவேந்தர் படைப்புகள் பார்மிக்கோங்கிப் பரவும் வகை செய்தல் நம் கடனாம்.

# 2. பாரதிதாசன் - பாட்டும் பறவையும்

- முருகு சுந்தரம்

பறவைகள்-
அழகின் மேய்ச்சல்!
இயற்கையின் இடப்பெயர்ச்சி!
பறக்கும் கவிதை!

பறவைகளைப் பாடாத புலவரில்லை. சங்கப் புலவர்களும், காப்பியப் புலவர்களும் பாடினர், பிரபந்தப் புலவர்கள் தமது கற்பனையில் பறவைகளுக்குச் சிறப்பிடம் கொடுத்துப் பாடினர், தூதுப் பிரபந்தங்களில் கிள்ளையும் குயிலும் காப்பியத் தலைவர்களுக்கு ஒப்பாகப் பாராட்டப் பெற்றன. காமவேளின் தசாங்கங்களில் கிள்ளை வாகனமாகவும், குயில் எக்காளமாகவும் இடம் பெற்றுள்ளன. கிள்ளை பேசும் பறவை, குயிலும் வானம்பாடியும் பாடும் பறவைகள், மயில் ஆடும் பறவை.

வானம்பாடி இரவில் பாடும்; குயில் இளவேனில் பருவத்தில் மாலையிலும் விடியற்காலையிலும் பாடும். மேலை நாடுகளில் கக்கூ, நைட்டிங்கேல், லார்க் என்ற பாட்டுப் பறவைகள், இலக்கியங்களில் பரவலாகப் பேசப்படுகின்றன.

மில்டன் தனது கவிதைகளில் நைட்டிங்கேலைப் பற்றிக் குறிப்பிடும் போது "உன் வாயிலிருந்து அமுத தாரை வழிந்தால், பகல் தன் கண்களை மூடிக் கொள்கிறது" என்று குறிப்பிடுகிறான்.

உலகப் பெருங்கவிஞன் ஷேக்ஸ்பியரின் காதற்காவியமான ரோமியோ ஜூலியத்தில் நைட்டிங்கேலும், லார்க் என்ற பறவையும் ஓரிடத்தில் குறிப்பிடப்படுகின்றன. ரோமியோ ஒருநாள் இரவில் கள்ளத்தனமாகத் தன் காதலியைச் சந்திக்கிறான். இரவு அவர்களுக்கு வேகமாகக் கழிகிறது. கிழக்கு வெளுக்கிறது, பறவைகளின் ஒலியைக் கேட்டு, அவசரமாகத் தன் காதலியிடம் விடைபெறுகிறான், ரோமியோ. அப்போது ஜூலியட் [1] "அன்பே! தன் குரலால் உங்கள் காதைக் கிழிப்பது, விடியலில் பாடும் லார்க் அன்று; இரவில் பாடும் நைட்டிங்கேல்!" என்று சொல்லி அவனைத் தடுக்கிறாள். எனவே நைட்டிங்கேல் இரவிலும், லார்க் விடியலிலும் பாடும் பறவைகள் என்பது தெரிகிறது. கக்கூ மாலை நேரத்தில் பாடும் பறவை.

தமிழ் இலக்கியங்களில் குயிலும், மயிலும் கிள்ளையும் இடம் பெற்ற அளவு வானம்பாடி இடம் பெறவில்லை. வானம்பாடியைப் பற்றிப் பாரதிதாசன் தான் பாடியுள்ளார். சிட்டுக்குருவியைப் பற்றிப் பாரதி, பாரதிதாசன் இருவருமே பாடியிருக்கின்றனர். காதலரைப் பிரிக்கும் வன்னெஞ்சப் பறவையாகக் கோழி சங்கப் பாடலிலும், பிற்காலப் புலவர்கள் பாடலிலும் இடம் பெற்றுள்ளது. புறாவைப் பற்றி, இறவாத பாடல்களை எழுதிக் குவித்திருக்கிறார் பாரதிதாசன்.

**கவிஞனும், இயற்கையும் :**

இயற்கையை [2]"அழியாத மண்ணின் கவிதை" என்று கீட்சு பாடுகிறான். இதிலிருந்து கவிஞனுக்கும், இயற்கைக்கும் உள்ள நெருக்கம் புலனாகிறது. கவிஞன் உள்ளம் இயற்கையோடு எளிதில் ஒட்டிக் கொள்கிறது. அதில் கரைந்தும் விடுகிறது. சாதாரண மக்களின் கண்களுக்குப் புலப்படாத விந்தைகள் கவிஞன் கண்ணெதிரே அணிவகுத்து நிற்கின்றன.

கவிஞன் கையில் எழுதுகோலைத் தூக்கியதும், இயற்கைக் கருவூலம் அவன் எதிரில் தானாகத் திறந்து கொள்கிறது. இயற்கைக்காட்சிகள், அவனுடைய கற்பனையில் குளிக்கத் திறந்த மேனியோடு போட்டி போட்டு நிற்கின்றன. கனவு மயக்கத்தில் கவிஞன் இருந்தாலும், அவனைத் தட்டி எழுப்புகின்றன, இதைத் தான் பாரதிதாசன் கீழ்க்கண்டவாறு பாடுகிறார்.

**ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட**
**என்னை எழுதென்று சொன்னதுவான்!**
**ஓடையும் தாமரைப்பூக்களும் தங்களின்**
**ஓவியந் தீட்டுக என்றுரைக்கும்!**
**காடும் கழனியும் கார்முகிலும் வந்து**
**கண்ணைக் கவர்ந்திட எத்தனிக்கும்**
**சோலைக்குளிர்தரு தென்றல் வரும் பசுந்**
**தோகை மயில் வரும் அன்னம் வரும்**
**மாலைப் பொழுதினில் மேற்றிசையில் விழும்**
**மாணிக்கப் பரிதி காட்சி தரும்.**

காலைச் செங்கதிர் கண் விழித்ததும் உழவன் கலப்பையை எடுத்துக் கொண்டு வயற்காட்டுக்குப் புறப்படுகிறான். பால்காரி கூடையைச் சும்மாட்டில் ஏற்றி, இடையசைத்து நகரத்தை நோக்கி நடக்கிறாள். தளர்ந்த பெரியவர் தாடையில் போட்டுக் கொண்டு கதிரவனைத் தொழக் கைகூப்புகிறார். ஆனால் கவிஞன் மட்டுமே,

**எழுந்தது செங்கதிர் தான்**
**கடல் மிசை! அடடா எங்கும்**
**விழுந்தது தங்கத் தூற்றல்** – என்று

துள்ளிக் குதிக்கிறான்; கதிரவனின் சுடு வெயிலுக்கஞ்சி; நாம் குளிர் நிழலைத் தாவுகிறோம், ஆனால்;

**"வெயிலைப் போல் அழகான**
**பதார்த்தம் இல்லை"** – என்று பாரதியால் தான் கூற முடிகிறது. இயற்கை கவிஞனின் ஐம்புலன்களையும் தன் பால் கவர்ந்து இழுப்பதற்குக் காரணம் இயற்கையோடு பிரிக்க முடியாதபடி ஒன்றியிருக்கும் அழகுதான். அழகை

நிலையான பேரின்பமாகக் கவிஞர்கள் கருதுகின்றனர். எங்கு அழகு தன் சிறகை விரிக்கிறதோ, அங்கெல்லாம் கவிஞன் பறந்து செல்கிறான்.

**காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்!**
**கடற்பரப்பில், ஒளிப்புனலில் கண்டேன்! அந்தச்**
**சோலையிலே மலர்களிலே, தளிர்கள் தம்மில்**
**தொட்ட இடம் எலாம் கண்ணில் தட்டுப் பட்டாள்!**
**மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற**
**மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள்; ஆலஞ்**
**சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்**
**தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்** – என்று

பாரதிதாசன் பாடுவதற்கு இயற்கை குவித்து வைத்த அழகே காரணம், "நல்லழகு வசப்பட்டால், துன்பம் இல்லை" என்பது அவர் கருத்து.

பாரதிதாசன் உள்ளம் இயற்கையில் எவ்வாறு கரைகிறது என்பதை அருகில் இருந்து பார்க்கும் வாய்ப்பு ஒரு முறை எனக்கு ஏற்பட்டது. பாரதிதாசன் சென்னை இராமன் தெருவில் குடியிருந்த போது, ஒருநாள் முன்னிரவில், அவரோடு முற்றத்தில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தேன். திடீரென்று அவர் பேச்சு நின்றது. "எங்கிருந்து வருகிறது இந்தக் கடிமணம்?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார். உடனே நான் மணம் வந்த திசை நோக்கிச் சென்றேன். அவர் வீட்டு வேலியில் "நைட் குவீன்" என்ற செடி கொத்துக் கொத்தாகப் பூத்திருந்தது. ஒரு கொத்தை ஒடித்து வந்த அவர் கையில் கொடுத்து விட்டு நான் உறங்கச் சென்று விட்டேன். அம்மலர்க் கொத்தை நீண்ட நேரம் மூக்கில் வைத்து முகர்ந்து கொண்டிருந்தார். காலையில் எழுந்ததும் நான் கவிஞரின் படுக்கையறைக்குள் சென்றேன். அவர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர் படுக்கைக்கு அருகில் ஒரு தாள் கிடந்தது. எடுத்துப் பார்த்தேன். "இரவின் இளவரசி" என்ற தலைப்பில் ஒரு கட்டளைக் கலித்துறை அதில் எழுதப்பட்டிருந்தது.

**கரவில் இருந்தொரு மங்கையென்**
**மூக்கில் கடிமணத்தை**
**வரவிடு கின்றாள்; வரவில்லை**
**என்னெதிர், வாயிதழைத்**
**தரவில்லை உண்ணவும், என்றேன் என்**
**தோழனும் தையலவள்**
**இரவின் இளவரசிப் பெயர்ப்**
**பூவென் றியம்பினனே.**

## அழகோவியம்

கவிஞன் ஒரு இயற்கைக் காட்சியைக் காணும் போது, அதன் அழகில் ஈடுபடுகிறான்; பின்னர் அந்த அழகில் தன்னையிழந்து மெய்மறக்கிறான். அந்த

அழகுக் காட்சிகள் அவன் உள்ளத்தில் ஓவியங்களாகப் பதிகின்றன. தன் உள்ளத்தில் பதிந்த ஓவியக் காட்சிகளுக்கு உயிர் கொடுத்து நிலைபேறுடைய படிமங்களாக (Image) ஆக்கி உலக மக்களின் நெஞ்சத்தில் நிறுத்துகிறான். கவிதையைப் படிக்கும் போதெல்லாம், இந்த அழகோவியங்கள் திரைப்படங்களாக நம் நெஞ்சத்தில் ஓடுகின்றன. பாரதிதாசன் தனது கவிதையில் அடுக்கடுக்காக ஓவியம் தீட்டுவதில் வல்லவர். மயிலின் தோகையில் எத்தனை ஓவியங்கள்!

**உனது தோகை புனையாச் சித்திரம்**
**ஒளி சேர் நவமணிக் களஞ்சியம் அதுவாம்!**
**ஆயிரம் ஆயிரம் அம் பொற் காசுகள்**
**ஆயிரம் ஆயிரம் அம்பிறை நிலவுகள்**
**மரகத உருக்கின் வண்ணத் தடாகம்**

தாமரை இலைத் தண்ணீர்த் துளிகளைக் கண்ணாடியில் தீட்டப்பட்ட ஓவியமாகவே வடித்துக் காட்டுகிறார் பாரதிதாசன்.

**கண்ணாடித் தரையின் மீது**
**கண்கவர் பச்சைத்தட்டில்**
**எண்ணாத ஒளிமுத் துக்கள்**
**இறைந்தது போல், குளத்துத்**
**தண்ணீரிலே படர்ந்த**
**தாமரை இலையும் மேலே**
**தெண்ணீரின் துளியும் கண்டேன்**
**உவப்போடு வீடு சேர்ந்தேன்**

புறாவுக்கு ஒழுக்கமான ஓர் உணவுப்பழக்கம் உண்டு. முண்டியடித்து முட்டி மோதும் பழக்கம் அவசர வாழ்க்கை வாழும் மனிதருக்குத்தான் உண்டு. பாரதிதாசனைக் கவர்ந்த இவ்வொழுக்கம் அழகான ஓவியமாகிறது.

**இட்டதோர் தாம ரைப்பூ**
**இதழ் விரிந் திருத்தல் போலே**
**வட்டமாய்ப் புறாக்கள் கூடி**
**இரையுண்ணும்...**

புறாக்கூண்டை மூடுவது கூட, ஓவியத்தைத் திரையிட்டு மூடுவதாகத் தான் அவருக்குப் படுகிறது.

**கூட்டினை வேலன் வந்து**
**சாத்தினான், குழைத்து வண்ணம்**
**தீட்டிய ஓவியத்தைத்**
**திரையிட்டு மறைத்தல் போலே!**

**வண்ணங்கள்**

கவிஞர்களின் கட்புலனுக்கு வண்ணங்கள் எப்போதும் பெருவிருந்தாக அமைவதுண்டு. இயற்கை தன் உடலில் பூசியிருக்கும் வண்ணக் கலவைகளையும், வண்ண வேறுபாடுகளையும் அவர்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள். அவற்றை மெருகு குலையாமல் கவிதையிலும் தீட்டி விடுகிறார்கள். ஆங்கிலக் கவிஞர்களுள் கீட்சை வண்ணக்கவிஞன் (Poet of Colour) என்று சிறப்பாகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவனுக்கு இரத்தச்சிவப்பு (Crimson) மிகவும் பிடித்தமான வண்ணம், இந்த வண்ணத்தை வைத்துக் கொண்டு கவிதையில் அவன் சித்து விளையாட்டு நிகழ்த்துகிறான். கோப்பையில் நுரைத்துத் ததும்பும் மதுவைச் "சிவந்தமது" என்று அவன் குறிப்பிடவில்லை. "நாணம் ததும்பும் மது" (the blushful Hippocrene) என்று குறிப்பிடுகிறான். பெண் நாணும் போது அவள் கன்னத்தில் படர்வது இரத்தச் சிவப்பன்றோ ?

பாரதிதாசனுக்கும் வண்ணங்களில் அளவற்ற ஈடுபாடு உண்டு. இயற்கையில் படிந்துள்ள வண்ண வேறுபாடுகளை எப்படியெல்லாம் பதிவு செய்ய முடியுமோ அப்படியெல்லாம் பாட்டில் பதிவு செய்கிறார்.

கவிதையில் வண்ண மாயங்களைப் பதிப்பதில் பாரதிதாசனுக்கு ஒப்பாக வேறு எந்தக் கவிஞரையும் குறிப்பிட முடியாது. கவிதை ஆற்றலோடு, ஓவிய நுட்பமும் கைவரப் பெற்றவர் அவர் என்று சொல்லலாம்.

குயிலை, பொதுவாகக் கருங்குயில் என்போம். ஆனால் குயில் கருப்பில்லை, அதன் கறுத்த மேனியில் இலேசாகத் தங்க முலாம் பூசியது போல் இருக்கும். இந்தமாயம் பாரதிதாசனின் கூர்த்த கட்புலனுக்குத் தான் தட்டுப்பட்டது.

***செங்கதிர் சீர்க்கையால்***
***பொன்னள்ளிப் பூசிய***
***கங்குல் நிகர்த்த***
***கருங்குயிலே கூவாயோ*** – என்று

பாடிய பாரதிதாசன், அந்தி வானத்தின் செங்கதிர்ப் பூச்சைக் குயிலின் நிறத்தோடு ஒப்பிட்டு எப்படி மகிழ்ந்திருக்கிறார் என்பது புலனாகும்.

வீட்டில் புறா வளர்க்கும் பழக்கம் பாரதிதாசனுக்குண்டு, புறாக்கள் முற்றத்தில் கூடி இரையுண்ணும் அழகை அருகில் அமர்ந்து நீண்ட நேரம் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருப்பார். புறாக்களின் வண்ணங்கள் அவருக்கு அத்துபடி. அவ்வண்ணங்களை அடுத்தடுத்த படிமங்களில் அழகாகத் தீட்டுகிறார்.

***இருநிலா இணைந்து பாடி***
***இரையுண்ணும்; செவ்விதழ்கள்***
***விரியாத தாமரை போல்***
***ஒரிணை! மெல்லியர்கள்***
***கருங்கொண்டை, கட்டி ஈயம்!***

**காயாம்பூக் கொத்து! மேலும்**
**ஒருபக்கம் இருவாழைப்பூ!**
**உயிருள்ள அழகின் மேய்ச்சல்!**

இப்பாடலில் வண்ணத்தையும், வடிவத்தையும் ஒருங்கே பதிவு செய்திருக்கும் நயம் போற்றற்குரியது.

**நாடகக்காட்சி**

இயற்கையின் படைப்புக்களான பறவைகளை, உயிரோவியங்களாகத் தீட்டிக் காட்டிய பாரதிதாசன், சில நாடகக் காட்சிகளையும், கவிதையில் வடிக்கிறார். நாடகம் என்பது உணர்ச்சி மோதல்களின் வெளிப்பாடு. மாந்தரிடத்தில் காணப்படும் காதல், வீரம், அவலம், தாயன்பு, பகைமை சீற்றம், போர்க்குணம் ஆகிய இயல்பூக்கங்கள் (Instincts) பறவைகளுக்கும் உண்டு. இவ்வுணர்ச்சிகள் பொங்கி வழியும் போது நாடகக்காட்சிகளாக அமைகின்றன. அக்காட்சிகளில் நடிக்கும் பறவைகளின் மெய்ப்பாடுகளையும், துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் பாரதிதாசன். புறாக்கள் காதலிப்பது போல் மனிதர்கள் கூடக் காதலிக்க முடியுமா ? என்று ஐயம் ஏற்படும்படி ஒரு காதல் நாடகம்.

**தலை தாழ்த்திக் குடுகு டென்று**
**தனைச் சுற்றும் ஆண்பு றாவைக்**
**கொலை பாய்ச்சும் கண்ணால், பெண்ணோ**
**குறுக்கிற் சென்றே திரும்பித்**
**தலைநாட்டித் தரையைக் காட்டி,**
**"இங்கு வா" என அழைக்கும்;**
**மலைகாட்டி அழைத்தா லுந்தான்**
**மறுப்பாரோ மையல் உற்றார்.**

தாயார் குழந்தைகளுக்கு உணவூட்டுவதை நாம் நாள்தோறும் காண்கிறோம். அப்போது தாய்க்கும், குழந்தைக்கும் இடையில் நடைபெறும் அன்பு நாடகம் உள்ளத்தை நெகிழ்விக்கும் தன்மையது. அதுபோன்ற ஒரு நாடகக் காட்சியைக் கவிஞர் சிறப்பாக நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

**தாய் இரை தின்ற பின்பு**
  **தன் குஞ் சைக் கூட்டிற்கண்டு**
**வாயினைத் திறக்கும்; குஞ்சு**
  **தாய் வாய்க்குள் வைக்கும் மூக்கைத்**
**தாய் அருந் தியதைக் கக்கித்**
  **தன் குஞ்சின் குடல் நிரப்பும்;**
**ஒய்ந்ததும் தந்தை ஊட்டும்!**
  **அன்புக் கோர் எடுத்துக் காட்டாம்**

குழந்தைக்குத் தாய் மட்டுமே நம் வீடுகளில் கொஞ்சிக் கொஞ்சி உணவூட்டுவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் குஞ்சுகளுக்குத் தாயும்,

தந்தையும் மாறி மாறி உணவூட்டும் அன்புப் பரிமாற்றத்தைப் பறவைகளிடம் தானே காண முடிகிறது? காய்ச்சிய பசும்பாலையோ, சுவை நீரையோ, இளநீரையோ அருந்தும் போது அவற்றின் சுவையில் நாம் ஆழ்ந்து விடுகிறோம். அப்போது முகம் மலர்கிறது; நாக்கு சப்புக் கொட்டுகிறது; குடித்து முடித்தவுடன் முகத்தில் ஒரு நிறைவு ஏற்படுகிறது; கைக்குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டு புத்துணர்ச்சியோடு நடைபோடுகிறோம். இவைகள் யாவும் அப்போது நம்மிடத்தில் தோன்றும் மெய்ப்பாடுகள். புறா நீர் அருந்தித் தன் வேட்கையைத் தணித்துக் கொள்ளும் போது, அதனிடத்தில் தோன்றும் மெய்ப்பாடுகளைப் பாரதிதாசன் இனிய நாடகமாக்கிக் காட்டுகிறார்.

**அகன்ற வாய்ச்சட்டி ஒன்றின்**
**விளிம்பினில் அடி பொருந்தப்**
**புகும் தலை; நீர்வாய் மொண்டு**
**நிமிர்ந்திடும்; பொன் இமைகள்**
**நகும்; மணிவிழி நாற்பாங்கும்**
**நாட்டிடும்; கீழ் இறங்கி**
**மகிழ்ச்சியாய் உலவி, வைய**
**மன்னர்க்கு நடைகற் பிக்கும்.**

நாடகத்தில் காணப்படும் "கம்பீர ராஜநடை" இங்கும் இடம் பெறுகிறது.

நாடகம் என்றால் அதில் நாட்டியம் இருக்க வேண்டுமன்றோ? ஆடல் மகளான மயில் ஆடுகிறாள். எப்படி? தன் பக்கவாத்தியங்களோடு அந்நாட்டியத்தை வியப்பார்வத்தோடு பாராட்டுகிறார் பாரதிதாசன்.

**அழகிய மயிலே அழகிய மயிலே!**
**அஞ்சுகம் கொஞ்ச, அமுத கீதம்**
**கருங்குயி லிருந்து விருந்து செய்யக்**
**கடிமலர் வண்டுகள் நெடிது பாடத்,**
**தென்றல் உலவச் சிலிர்க்கும் சோலையில்**
**அடியெடுத் தூன்றி அங்கம் புளகித்து**
**ஆடுகின்றாய் அழகிய மயிலே!**

ஆடற்கலைக்குப் பாவமும், அடைவும் முக்கியம். அந்நாட்டியப் பண்புகளை மயிற்புறாவிடம் கண்டு மகிழ்கிறார் பாரதிதாசன்.

**மயிற்புறா படம் விரிக்கும்;**
**மார்பினை முன் உயர்த்தும்;**
**நயப்புறு கழுத்தை வாங்கி**
**நன்றாக நிமிர்ந்து, காலைப்**
**பயிற்றிடும், ஆடல் நூலின்**
**படி, தூக்கி அடைவு போடும்;**
**மயிற்புறா வெண் சங்கு ஒக்கும்;**
**வால் தந்த விசிறி ஒக்கும்.**

**புனைவியல்**

பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய புதிய இலக்கியக் கொள்கை புனைவியல் கோட்பாடு. இக்கோட்பாட்டாளர்கள் சமுதாயம், அரசியல் பொருளியல் ஆகியவற்றுள் குடி கொண்டிருந்த பழைய மரபுகளை எதிர்க்கத் தொடங்கினர்; மாற்றிவிடத் துடித்தனர். பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட ரூசோவின் புதிய கோட்பாடுகள் மனிதனின் தனித்தன்மையையும், ஆற்றலையும் சிறப்பித்துப் பேசின. சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை என்ற மும்முனைக்கொள்கை ஐரோப்பாவில் வேகமாகப் பரவியது. இவற்றின் அடிப்படையில் தோன்றிப் பலவாகிக் கிளைத்த சிந்தனைகளின் தாக்கமே இலக்கியத்தில் புனைவியலைத் தோற்றுவித்தது.

தமிழகத்தில் புனைவியலை முதன்முதலாகச் சோதித்துப் பார்த்தவன் பாரதி. அதைப் பரப்பியவர் பாரதிதாசன், இப்படித்தான் பாட வேண்டுமென்றிருந்த செக்குமாட்டுத்தனத்தை ஒழித்து எதையும் பாடலாம், எப்படியும் பாடலாம் என்ற நிலையை இருவரும் தமிழுக்குக் கொண்டு வந்தனர். கவிதையில் இவர்களுடைய தன்னுணர்ச்சிப் பார்வை விரிந்தது. பழைய செய்யுட்களின் கடினத்தைக் குறைத்து இசையோடு கூடிய வழக்கு மொழியில் பாடத்தொடங்கினர். தமிழுக்குப் புதிய வரவுகள் கிடைத்தன.

பறவைகளைப் பற்றிப் பாரதிதாசன் புனைவியல் பாடல்கள் பல பாடியிருக்கிறார். அதில் வானம்பாடி குறிப்பிடத்தக்கது. பாரதிதாசன் பாடிய வானம்பாடிப் பாடலுக்கும், ஆங்கிலக்கவிஞன் வொர்ட்ஸ் வொர்த் பாடிய கக்கூ (cuckoo) என்ற பாடலுக்கும் ஒரு பொதுத்தன்மை இருக்கக் காணலாம்.

சிறு குன்றுகள் சூழ்ந்த ஸ்காத்லாந்து ஏரிக்கரையில் படுத்த வண்ணம், இயற்கை அழகை மாலை நேரத்தில் சுவைப்பது வொர்ட்ஸ் வொர்த்தின் விடுமுறைக் காலப் பொழுதுபோக்கு. அவ்வாறு படுத்திருக்கும் போது உள்ளத்தை உருக்கும் ஒரு தேனிசை வானவெளியில் வட்டமிடுவதைக் கேட்டான். ஆனால் அந்த இசை எங்கிருந்து வருகிறது என்று அவனுக்குத் தெரியவில்லை. அந்த இசையை எழுப்புவது யார் என்றும் அவன் கண்ணுக்குப் புலனாகவில்லை. அந்த இசை ஒரு குன்றிலிருந்து மற்றொரு குன்றிற்கும், ஓர் இளமரக் காட்டிலிருந்து மற்றோர் இளமரக் காட்டிற்கும் சுற்றிச் சுற்றி வந்தது. அந்த இசைப் பயணத்தைப் பொருத்தமான சொற்றொடர் ஒன்றால் குறிப்பிடுகிறான் வொர்ட்ஸ்வொர்த்[3] wandering voice– என்பதே அச்சொற்றொடர்.

வோர்ட்ஸ் வொர்த்துக்கு ஏற்பட்ட அதே மயக்கம் வானம்பாடியின் இன்னிசையைக் கேட்ட பாரதிதாசனுக்கும் ஏற்பட்டிருக்கிறது. பாடலைக் கேளுங்கள்.

**வானந்தான் பாடிற்றா? வானிலவு பாடிற்றா?**
**தேனை அருந்திச் சிறுதும்பி மேலேறி**
**நல்லிசை நல்கிற்றா? நடுங்கும் இடிக்குரலும்**

**மெல்லிசை பயின்று மிக இனிமை தந்ததுவோ?**
**வானூர்தி மேலிருந்து வல்ல தமிழிசைஞன்**
**தானூதும் வேய்ங்குழலா? யாழா? தனியொருத்தி**
**வையத்து மக்கள் மகிழக்குரல் எடுத்துப்**
**பெய்த அமுதா?**

என்று அடுக்கிக்கொண்டே போகிறார். வொர்ட்ஸ்வொர்த் காடு, மேடெல்லாம் தேடித் திரிந்தும் கக்கூவைப் பார்க்க முடியவில்லை. ஆனால் வானம்பாடி கண்ணுக்கெட்டாத தூரத்தில் பாரதிதாசனுக்குக் காட்சி வழங்கியது.

**"உன்றன் மணிச் சிறகும் சின்னக் கருவிழியும்**
**என்றன் விழிகட்கே எட்டா உயரத்தில்**
**பாடிக் கொண்டே இருப்பாய்"** – என்று

பாடுகிறார் கவிஞர். கீட்சு நைட்டிங்கேலின் இனிய குரலுக்குப் போதை தரும் பொருள்களான மதுவையும், கவிதையையும் ஒப்பிடுகிறான். கொஞ்சங் கொஞ்சமாக உயிரைக் கொள்ளை கொள்ளும் 'ஹெம்லாக்' என்னும் நஞ்சையும் ஒப்பிடுகிறான். ஆனால் பாரதிதாசன் வானம்பாடியின் குரலை "ஏந்தும் வான் வெள்ளத்தில் கலக்கும் இன்பவெள்ளம்" என்று குறிப்பிடுகிறார். விண்ணையும், மண்ணையும் இன்ப வெள்ளத்தில் நனைக்கும் வானம்பாடியோடு பேசவேண்டும் என்ற ஆவல் கவிஞருக்கு ஏற்படுகிறது, பேசவும் செய்கிறார். வானம்பாடியிடம் கவிஞர் பேசும் கடைசி இரண்டு வரிகளும் இப்பாடலின் உயிர்நாடியாக அமைகின்றன.

**அசையா மகிழ்ச்சி, அடைகநீ உன்றன்**
**இசை மழையால் இன்புறுவோம் யாம்** – என்று

பாடலை முடிக்கிறார்.[4] கீட்சு, நைட்டிங்கேலின் பாடல் அமரத்தன்மை (immortality) வாய்ந்தது என்றும், மக்கள் வாழ்க்கை துன்பமும் சாவும் நிறைந்தது என்றும் பாடுகிறான். இங்கும் பாரதிதாசன் வானம்பாடியின் மகிழ்ச்சியை, "அசையா மகிழ்ச்சி" என்று குறிப்பிட்டு அதன் நிலை பேற்றை நம் உள்ளத்தில் நினைவு படுத்துகிறார். இத்தொடர் மூலம் மனிதனின் மகிழ்ச்சி "அசையும் மகிழ்ச்சி" என்பதைச் சொல்லாமல் சொல்கிறார்.

வானம்பாடியின் பாடலைக் கேட்ட போது ஏற்படும் இன்பம் கலந்த வியப்பு, குயிலின் பாடலைக் கேட்ட போதும் பாரதிதாசனுக்கு ஏற்படுகிறது.

**ஆக்காத நல்லமுதா! அடடா நான் என்சொல்வேன்**
**விட்டுவிட் டொளிக்குமொரு மின் வெட்டுப் போல் நறவின்**
**சொட்டுச் சொட் டொன்றாகச் சுவையேறிற் றென்காதில்** -

என்று பாடுகிறார். இவ்வளவு சுவையான குரலை வெளிப்படுத்தும் அக்குயிலின் அலகையும், வாயையும் பாராட்ட வேண்டும் என்று விரும்புகிறார்.

**கரு நெய்தல் காட்டரும்பு போலும் குவிந்த**
**இரண்டலகு தம்மில், பிரிந்து குரல் எடுக்க**
**வாயிற் செவ்வல்லி மலர்கண்டு நான் வியந்தேன் -**

என்று பாராட்டி மகிழ்கிறார், குயிலின் அலகுக்குச் சாமணத்தையும் உவமை கூறுகிறார்.

வறிஞனாக இருப்பவன் வள்ளலாக இருக்க முடியாது. ஆனால் குயில் அதற்கு விதிவிலக்கு என்று கருதுகிறார். சொந்த வீடு கூட இல்லாத ஏழைக் குயிலிடம் குடி கொண்டிருக்கும் இந்த உயர்ந்த பண்பைப் பாராட்டுகிறார், பாரதிதாசன்.

**சேய்மையிலோர் சோலைக்குச் செல்லும் குயிலினிடம்**
**தூய்மைமிகு பண்பொன்று கேட்பீர்; சுவையைப்**
**படியளக்கும் வையத்தார் உண்ணும் படியே**
**குடியிருப்பொன் றில்லாக் குயில்**

அழகின் சிரிப்பு என்ற பாவேந்தரின் நூலைக் கண்ணுற்ற செக் நாட்டுத் தமிழறிஞர் காமில் சொலபில் இந்நூலின் தலைப்பே ஒரு கவிதை (The title itself is a poetry) என்று குறிப்பிட்டார். அழகின் சிரிப்பில் உள்ள புறாக்களைப் பற்றிய பாடல் ஒரு கற்பனைக் களஞ்சியம். ஒற்றுமையுடன் வட்டமாக கூடியிருந்து இரையுண்ணும் புறாக்களின் வாழ்வில்

**வெட்டில்லை, குத்து மில்லை**
**வேறுவே றிருந்த ருந்தும்**
**கட்டில்லை; கீழ்மேல் என்னும்**
**கண்மூடி வழக்க மில்லை -**

என்று குறிப்பிடும் போது, மக்கள் வாழ்வில் வெட்டுண்டு, குத்துண்டு, சாதிவேறுபாடுண்டு, பொருளாதார ஏற்றத்தாழ்வும், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வருண பேதமும் உண்டு என்பதைக் கவிஞர் வருத்தத்தோடு ஒத்துக் கொள்கிறார்.

புறாக்களிடம் காணப்படும் இல்லற ஒழுங்கைச் சுட்டிக் காட்டுவதன் மூலம், மக்களிடம் காணப்படும் குறைகளைக் கண்டிக்கிறார்.

**ஒரு பெட்டை தன் ஆண் அன்றி**
**வேறொன்றுக் குடன்படாதாம்**
**ஒரு பெட்டை மத்தாப் பைப்போல்**
**ஒளிபுரிந்திட நின்றாலும்**
**திரும்பியும் பார்ப்பதில்லை**
**வேறொரு சேவல்! தம்மில்**
**ஒரு புறா இறந்திட்டால் தான்**
**ஒன்று மற்றொன்றை நாடும்.**

நம்மிடத்தில் நிலவும் பலதார மணத்தையும், சின்ன வீட்டுப் பழக்கத்தையும் இப்பாடலில் நயமாகக் கண்டிக்கிறார், பாரதிதாசன்.

**விட்டு விடுதலையாகி நிற்பாய் - இந்தச்**
**சிட்டுக் குருவியைப் போலே** – என்று

பாடினான் பாரதி. சிட்டுக்குருவி பாரதிக்கு விடுதலையின் சின்னம். பாரதிதாசன் விடுதலை உணர்ச்சியைச் "சுதந்திரம் என்ற பாடலில் பச்சைக்கிளியை வைத்துப் பாருக்கு உணர்த்துகிறார். தித்திக்கும் பழமும், மதுரப்பருப்பும் உண்டு, "பொன்னே மணியே!" என்ற போற்றுதலுக்கு மயங்கித் தச்சன் கூடே சதமாக வாழ்கிறது ஒரு பச்சைக்கிளி. அந்த வசதியான வாழ்க்கை அதற்குப் பழகிப் போய்விட்டது என்றாலும் வானவீதியில் வந்து திரிந்து, தென்னங்கீற்றுப் பொன்னூசல் ஆடிச் சோலை பயின்று சாலையில் மேய்ந்து விண்ணையும், மண்ணையும் வசமாக்கித் திரியும் மற்ற கிள்ளைகளைப் பார்த்து அவற்றைப் போல் தானும் பறக்க நினைக்கிறது. இந்த ஏக்கத்தை "அக்கா, அக்கா" என்று விளித்து வெளிப்படுத்துகிறது. ஆனால் அக்கூண்டுக்கிளியைப் பார்த்து, "விடுதலை என்பது கடைத்தெருவில் விற்கும் சுக்கைப்போல், மிளகைப் போல் அவ்வளவு எளிதில் கிடைக்கக்கூடியதன்று; அது போராடிப் பெறக்கூடியது" என்பதை விளக்குகிறார் கவிஞர். அந்நியர் ஆட்சியில் அவர்கள் வழங்கும் வசதி வாய்ப்புக்களை நுகர்ந்து கொண்டு, அடிமை வாழ்வு வாழ்பவர்களையும் அவர்கள் உள்ளத்தின் ஆழத்தில் பதுங்கியிருக்கும் அச்சம் கலந்த விடுதலை வேட்கைகளையும் பாரதிதாசன் இப்பாடலில் நுட்பமாகச் சித்திரிக்கிறார்.

கலாப மயிலின் நீண்ட கழுத்தைப் பார்த்ததும் பாரதிதாசனுடைய கற்பனை சிறகடித்துப் பறக்கிறது. அம்மயிலை அருகழைத்து, "நீயும் பெண்களும் நிகர் என்று சொல்கிறார்கள்; உண்மை தான், என்றாலும் அவர்களுடைய கழுத்து உன்னுடைய கழுத்துக்கு ஒப்பாகுமா? "இயற்கை அன்னை உனக்கு அழகிய நீண்ட கழுத்தையும், பெண்களுக்குக் குட்டைக் கழுத்தையும் ஏன் கொடுத்தாள்?" என்று கேட்கிறார். மயில் பேசாமல் நிற்கிறது, கவிஞரே அதற்கு விடையும் கூறுகிறார்.

**அயலான் வீட்டில் அறையில் நடப்பதை**
**எட்டிப் பார்க்கா திருப்ப தற்கே**
**இயற்கை அன்னை, இப் பெண்களுக்கெல்லாம்**
**குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ**
**கறையொன்றில்லாக் கலாப மயிலே,**
**நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள் -**

என்று கூறுகிறார். அடுத்தவர் நடப்பில் விரும்பி மூக்கை நீட்டும் பழக்கம், பெண்ணினத்தின் மீது படிந்துள்ள கறையாகக் கவிஞர் நினைத்தார் போலும், என்றாலும் பெண்கள் என்ன கூறுவார்களோ என்ற அச்சம் அவருக்கில்லாமல் இல்லை. மயிலை அருகில் அழைத்து "நான் சொன்னதைப் பெண்களிடம் சொல்லிவிடாதே; அவர்கள் என்னை ஏசுவார்கள்" என்று மெதுவாக அதன்

காதருகில் ஓதுகிறார். நல்லவேளை! கவிஞர் இதைக் கலாபமயிலான ஆண் மயிலிடம் தான் கூறினார். இதையே பெண் மயிலிடம் கூறியிருந்தால், கட்டாயம் அது கவிஞரைக் கொத்தியிருக்கும்.

கோழிச் சேவல் காதலர்க்கு எதிரி, அது நேரந்தெரியாமல் கூவி, அவர்களுக்குத் தொல்லை கொடுக்கும் இயல்பினது. சங்கப்புலவர் முதல் பலர், தமது பாடலில் கோழியைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றியிருக்கின்றனர். ஆனால் பாரதிதாசன் சட்டமன்றத்துக்கே சென்று விட்டார்.

**சட்டமன்றம் கோழி வளர்ப்பதைத் தடைசெய்யுமா**
**தொட்டார் கைதொட்டுத் தொடருமுன் - பட்டப்**
**பகலாயிற் றென்று பறையடிக்கும் சற்றும்**
**அகலார் அகலும் படிக்கு.**

## பறவையும், தமிழும்

பாரதிதாசனுக்குப் படுக்கையறையிலும் தமிழ் நினைப்புத்தான், சரக்கொன்றை தொங்கலிட்ட பந்தலின் கீழ், தனிச்சிங்கக்கால் நான்கு தாங்கும் கட்டிலின் மீது அருகில் படுத்திருக்கும் குடும்ப விளக்கிடம்,

**இழந்தபழம் புகழ் மீள வேண்டும்; நாட்டில்**
**எல்லாரும் தமிழர்களாய் வாழ வேண்டும்;**
**வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்**
**மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும் – என்று**

தமிழ்க் காதலைப் பற்றித் தானே பேசிக் கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவர் பறவைகளைப் பற்றிப் பாடும் போது தமிழை மறந்து விடுவாரா? பறவை பிடிக்கும் வேடன் பேசும் தமிழ்ச்சொற்கள் கவிஞரை இன்பத்தில் சாய்க்கின்றன. அவனை உளம் மகிழ்ந்து வாழ்த்துகிறார்.

**முகத்திலே கொடுவாள் மீசை**
**வேடன் என் எதிரில் வந்தான்**
**அகப்பட்ட பறவை காட்ட,**
**அவற்றின் பேர் கேட்டேன்! வேடன்**
**வகைப்பட்ட பரத்து வாசன்**
**என்பதை வலியன் என்றான்;**
**சகோதரத்தைச் செம்போத் தென்றான்!**
**தமிழா நீ வாழ்க என்றேன்.**

அடிக்குறிப்புக்கள் :

1. Jul : wilt thou be gone?
it is not yet day;
It was the nightingale
and not the lark,
That pierc'd the fearful
hollow of thine ear

- Romeo and Juliet Act III, Scene V.

2. The Poetry of earth is never dead

- Sleep and Poetry - John Keats

3. O Cuckoo, shall I call thee bird
or but a wandering voice ?

- To the Cuckoo, Wordsworth

4. Thou was not born for death immortal bird.

- Nightingale, John Keats.

# 3. பாரதிதாசன் படைப்புகளில் மார்க்சிய காந்தியக் கலப்புப் பொருளியல் கொள்கை

- அக்னி புத்திரன்

## முன்னுரை

புதுவையில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் (ஏப்ரல் 29.1891) உதித்து 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம் முதலே இருண்ட தமிழகத்தில் கவிதை ஏர் ஓட்டி மக்கள் மத்தியில் மண்டிக் கிடந்த களைகளைக் களைந்தெறிய சூரிய வெப்பத்திற்கு இணையான வீரிய வார்த்தைகளால் கவிதைகளை வடித்தெடுத்து அவைகளை மூலை முடுக்கில் உள்ளோர் எல்லாம் முத்தம் கொடுத்து எத்திக்கும் கிடைக்காத செல்வமாய் ஏந்தச் செய்தவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

இத்தகைய வித்தகரின் இலக்கியப் படைப்புக்கள் ஏராளம் என்றாலும் அத்தனைகளிலும் எத்தனையோ பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன என்றாலும், கவிஞரின் படைப்புகளில் மார்க்சிய காந்திய கலப்பு பொருளியல் கொள்கையும் இருக்கத்தான் செய்கின்றன என்பது பற்றியே இக்கட்டுரை ஆராய்கின்றது.

பாரதிதாசனின் வாழ்வில் மார்க்சிய காந்திய தாக்குறவுகள்

கனகசுப்புரத்தினம் – பாரதிதாசனாக மாறிப் பின்னர் புரட்சிக்கவிஞராக மாறித் தமிழிலக்கிய வரலாற்றில் இவருக்கு முன்னும் பின்னும் புரட்சி என்ற வார்த்தைக்குச் சொந்தக்காரர்கள் யாருமே கிடையாது என்று டாக்டர் மா.செல்வராசன் தம் ஆய்வில் சுட்டிக் காட்டியுள்ளார்.[1]

இத்தகைய முறையில் கவிஞர் பாரதிதாசனைப் புரட்சிக் கவிஞராக மாற்றிய தாக்குரவுகளாகப் பாரதிதாசனின் புரட்சிக்கு அடிப்படையானவைகளாகப் பல கருத்துகள் நிலவுகின்றன.

பாரதிதாசன் எண்ணத்தில் புரட்சிச்சிந்தனைகள் உருவாவதற்கு உரிய அடிப்படைக் காரணங்கள் பற்றி டாக்டர் மு.வ அவர்கள், பாரதிதாசன் புரட்சிக் கவிஞராக மாறியதற்குச் சமுதாயமும் இலக்கியமும் அடிப்படையாக இருந்திருக்கின்றன எனலாம். பகுத்தறிவு இயக்கம் சிலருக்குச் சமுதாயப் பார்வை நல்கியது. இதே பகுத்தறிவு இவருடைய இலக்கியப்பயிற்சியைப் பட்டை தீட்டிற்று. பிரஞ்சு ஆட்சியின் கீழிருந்த புதுச்சேரியில் பிறந்து வளர்ந்து கற்ற பிரஞ்சுக் கல்வியும், காந்தியடிகள் தலைமையில் நடந்த இந்திய விடுதலைப் போராட்டமும், சமுதாயச் சிந்தனையோடு பாடிய அச்சமில்லாப் பாரதியாரும் மூன்று இன்றியமையாத தாக்குறவுகள்[2] என்று குறிப்பிடுகின்றார். மேலும், எஸ்.ஜே.குணசேகரம் அவர்களும் "பாரதிதாசன் புரட்சிகரமாகப் பாடுவதற்கு இவரிடம் படிந்துள்ள பிரான்சின் சாயல் சாரணம்"[3] என்று கூறுகின்றார். பாரதிதாசனின் அஞ்சாத புரட்சி மனத்திற்கு மார்க்சிய தாக்கமும் அடிப்படையாக அமைந்துள்ளது. என்பதனை "இந்தக் கருப்புச் சமுதாயத்தில் தமது கந்தகக்

கவிதைகளே கானல் ஞாயிறாகக் கண்டவர் பாரதிதாசன். சிக்கல்களே பூக்களாகக் செழித்திருந்த சல்லடைச் சமுதாயத்தில் பூக் கொய்யக் கிடைத்த புரட்சிவாளே பாரதிதாசன். மடமை இருளை மார்கழித் திங்கள் போர்வையாகக் கருதிய மக்களிடம் நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நெருப்பு நிலா பாரதிதாசன். பகுத்தறிவு மனத்திலே இந்த பழந்தமிழரைப் பாதரசப்படுத்துவதே புரட்சிக் கவிஞரின் புதிய ஏற்பாடு. புதியதோர் உலகம் செய்வதே இந்தப் புரட்சிக் கவிஞரின் கவிதைப் பொருள். எனவே புதிய உலகத்தைப் படைத்திட வேண்டும் என்னும் பொருள் முதல் அணியில் போர்க்கோலம் பூண்டு நின்றார். 1918ஆம் ஆண்டு இவர் பாடிய லெனின் பற்றிய பாட்டு இதனை விளக்கும். பொதுவுடைமையில் இவருக்கு இருந்த புயல் வேட்கையைத் தமிழகம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. சிலர் புரிந்து கொள்ளவும் விடுவதில்லை. பகுத்தறிவும் பொதுவுடைமையும் பகை அல்ல. பகுத்தறிவில்லாத பொதுவுடைமையா? ஒன்றில் ஒன்று கலக்கும் போதே ஒளிபிறக்கின்றது. எனவே தான் பகுத்தறிவு இயக்கமே உண்மையான பொதுவுடைமைக்கட்சி என்றார் அண்ணா[4] என்று மா.செல்வராசன் கூறுகின்றார்.

மேற் குறித்த சிந்தனையாளரின் கருத்துக்களை ஒப்பு நோக்கி பார்க்கும் போது பாரதிதாசனின் புரட்சிகொள்கைக்கு பல்வேறு காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன என்றும் அவைகளில் மார்க்சியமும் காந்தியமும் இரண்டறக் கலந்திருக்கின்றன என்பதையும் அறிய முடிகிறது.

மேற்குறித்த வகைகளில் பாரதிதாசனின் புரட்சி நெறிக்கு மார்க்சிய–காந்திய மார்க்கங்கள் அடிகோலின என்பது உண்மை என்றாலும் இவைகள் இரண்டும் கலந்த பொருளாதாரச் சிந்தனைகள் பாரதிதாசனின் படைப்புகளில் இடம் பெறுவதை இங்கு ஒப்பு நோக்கி பார்க்கப்படுகிறது.

## மார்க்சிய பொருளாதாரக் கொள்கை

பொதுவுடைமைக் கொள்கையினை உலகிற்கு அறிமுகப்படுத்தியதால், இக் கொள்கையின் தந்தையெனப் போற்றப்படுபவர் காரல் மார்க்சு. மார்க்சு செல்வம் குவியக் கூடாது என்றும், அது மக்கள் அனைவருக்கும் பொதுவானது என்றும் கூறுவர். சமயத்தில் இவருக்கு நம்பிக்கை கிடையாது. மூட நம்பிக்கைகள் எல்லாம் தகர்த்தெறிபவர். உலகாயதத் தத்துவத்தில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். மேல் உலகு மோட்சம் இவற்றை மறுப்பவர். இயற்கை அறிவியலின் சில அரிய கண்டுபிடிப்புகளை இவர்தம் மார்க்சியத் தத்துவத்தின் தோற்றத்திற்குச் சூழலாகக் கொண்டவர்[5] என்று மார்க்சின் 'பொதுக் கொள்கை' பேசப்படுகின்றது. இவரது பொருளியல் கொள்கைக்கு அடிப்படையானது "பொருள் முதல் வாதம்" எனப் போற்றப்படுகிறது. பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைத் தகர்த்து சமக்கோட்பாட்டு முறையை உருவாக்கும் போது, வன்முறையின் வழியில் தான் ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும் ஒழித்துச் சமத்துவம் நிலவச் செய்ய முடியும் என்பதும் தம் கொள்கைளை குறிக்கோளை அடைய எந்த முறைகளையும் மேற்கொள்வது தவறில்லை என்பது போன்ற அடிப்படை கொள்கைகளை மார்க்சியத்தால் அறிய

முடிகிறது. மேலும் இவற்றிலிருந்து—பொருள் முதல் வாதம்—ஏகாதிபத்தியம் — முதலாளித்துவம்—சோஷலிசம்—சமத்துவம்—மாற்றங்கள் —புரட்சி—போராட்டம் போன்றவை மார்க்சியத்தில் பொருள் பொதிந்தவைகளாகக் காணப்படுகின்றன.

மார்க்சிய இயங்கியல் வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் அணுகுமுறைக்கான திறவுகோலை ஏங்கல்ஸ் சுருக்கமாக விளக்கியுள்ளார். இதில் 'அடித்தளம்' என்றால் என்ன ? என்று கூறும் போது சமூக வரலாற்றின் அடித்தளம் என்று நாம் நினைக்கும் பொருளாதார உறவுகள் ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் மனிதர்கள் தம் வாழ்வுக்கான தேவைகளை உற்பத்தி செய்யும் முறையும் உற்பத்திப் பண்டங்களைப் பரிமாறிக் கொள்ளும் முறையும் ஆகும்[6] என்கிறார். "அரசியல் பொருளாதார விமர்சனத்தின் பங்களிப்பு எனும் நூலில் நீதி மற்றும் அரசியல் ஆகியவைகளை மேலமைப்பு" என்று கூறுகின்றார். பின்னர் வெளிவந்த நூல்களில் பொருளாதார அடித்தளத்தின் மீது மனித சமூகம் உணர்வு பூர்வமாக செயலாற்றும் செயல்முறைகளின் தொகுப்பு என்கிறார்[7].

மார்க்சின் இத்தகைய குறிப்புரைகளை ஆய்ந்த அறிஞர் ரேமண்ட்வில்லியம்ஸ் "இவற்றை நிறுவனங்கள் உணர்வு வடிவங்கள், அரசியல் மற்றும் கலாச்சார நடைமுறைகள் என்று தொகுத்துக் கூறுவர். ஆயினும் அரசியல், நீதி. தத்துவம், சமயம், கலை, இலக்கியம் போன்றவற்றின் வளர்ச்சி, ஆகியவை பொருளாதார வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டுள்ளது[8] என்று ஏங்கல்ஸ் 'மேல் தள' அம்சங்களை விளக்கமாக கூறுகின்றார்.

மார்க்சின் இத்தகைய பொருளியல் கொள்கையை உற்று நோக்கும் போது, உலகில் பொருளாதாரமே எல்லாவற்றுக்கும் அடித்தளமாக அமைந்துள்ளது என்றும், பொருளாதாரத்தின் அடித்தளத்திற்கும் மேல் எழுதப்பட்ட மேல் தளமாகும் என்பதனையும் உரை முடிகிறது. ஆதலால் உலகில் எல்லாவற்றிற்கும் அடித்தளமாகவும் அஸ்திவாரமாகவும் விளங்குவது பொருளாதாரமே.

## காந்தியப் பொருளாதாரக் கொள்கை

அகிம்சா மூர்த்தி என்று அழைக்கப்படும் காந்தியடிகள் உண்மை, அகிம்சை, இரக்கம் என்ற சொற்களுக்கு அடையாளமாய் வாழ்ந்தாலும் பொருளியல் கொள்கையையும் பல்வேறு நிலைகளில் வலியுறுத்தி உள்ளார். உலகில் மற்றையோர்கள் கூறியுள்ள பொருளாதார கொள்கைக்கும் காந்தியடிகள் கூறியுள்ள பொருளாதாரக் கொள்கைகளுக்கும் பெருத்த வேறுபாடுகளைக் காணமுடிகிறது. ஆதலின் பொருளியல் தத்துவம் மற்றும் சிந்தனைகளைப் பார்க்கும் போது இயந்திரம், தொழிற்சாலை, கனரக உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி, மொத்தக் கொள்முதல் பங்கீடு போன்ற பொருள்களை மையமாகக் கூறப்படுகிறது ஆனால்! காந்தியப் பொருளியல் கொள்கை அவற்றிலிருந்து மாறுபட்டுக் காணப்படுவதை காந்தியச் சிந்தனையாளர்கள் பல்வேறு நிலைகளில் கூறுவதை கீழ்வரும் தகவல்களின் அடிப்படையில் அறிய முடிகிறது. லூயி என்ற அறிஞர் மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப் பற்றிக் குறிப்பிடும் போது, அண்ணல், பெரும்பாலான

இந்தியரின் வறுமையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தீர்க்க முனைந்தார். எளிமையை வலியுறுத்தினார். ஆனால் வறுமையை எதிர்த்தார். சிற்றூர்களை வறுமையிலிருந்து விடுவித்து விட்டால் இந்தியா விடுதலை எய்திவிட்டதாகும்[9] என்பர்."

"இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக்கணக்கான கிராமங்களின் வாழ்வுதான். அந்தக் கிராமங்களின் வாழ்வே அவைகளிலுள்ள விவசாயிகளின் வாழ்வுதான்[10]. எனக் காந்தியடிகள் குறிப்பிடுவார்.

"முக்கால் பங்கு இந்தியர் உழவர்கள் இவர்களில் ஒரு பகுதியினர் ஊதியம் பெறாத சிறிய நில உடமையாளர் பலர் கூலி விவசாயிகள். இவர்கள் ஆண்டில் பல திங்கள் வேலையின்றி இருப்பர். அவர்களை இரவலர் ஆக்கிப் பிச்சை இடாது, உழைப்பாளிகளாக்கி ஊதியம் தர ஏழைகள் தன மானத்துடன் வாழ – ஓர் அரிய வழியாகவே தமது கதர்த் திட்டத்தையும் குடிசைகள் மற்றும் கிராமத் தொழில்கள் திட்டத்தையும் காந்தியடிகள் உருவாக்கினார். கிராமத் தொழிலாளர்கள் தாமே உருவாக்கவும் செப்பணிடவும் கூடிய ராட்டையை அடிகள் வரவேற்றார். கிராமங்களுக்குக் குறைந்த செலவில் மின்னாற்றல் கிடைக்குமானால் அது நல்லதே எனவும் இது பொருளாக்கம் மிகுதிப்பட உதவும் எனவும் அடிகள் நவில்வர்"[11]. என்றும் காந்தியப் பொருளியல் கொள்கை போற்றப்படுகிறது. மேலும் இந்தியப் பொருளாதாரத்தை வலியுறுத்தும் காந்தியடிகள் "இந்தியாவில் வளர்ந்து கொண்டுவரும் வறுமையைப் போக்குவதற்குச் சரியான மருந்து தைத்தறி அல்லது கைராட்டினமே"[12] எனக் குறிப்பிடுகிறார்.

மேற்குறித்த மார்க்சிய காந்திய பொருளியல் கொள்கையைப் பார்க்கும் போது ஏகாதிபத்தியம், முதலாளித்துவம் இரண்டையும் ஒழித்து மக்கள் அனைவரும் பொருளாதாரம் என்ற பொது அமைப்பில் நிகர் நிலை பெற வேண்டும். இதற்காக வன்முறையும், போராட்டமும் ஒதுக்கப்படமாட்டாது. போராட்டம், வன்முறை என்ற ஆயுதங்களைப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும் என்பது மார்க்சியத்தின் அடிப்படைப் பொருளியல் கொள்கையாகவும், போராட்டம் அதுவும் அகிம்சை நெறியில் தனியுடைமை நசுக்கப்படவேண்டும் மற்றும் கிராம மக்கள் பெரும்பாலோரின் பிரதிபலிப்பை மையமாகக் கொண்ட எளிய இயக்கும் நிலை கொண்ட கதர் திட்ட இரட்டைக் கொள்கையால் தான் ஏழ்மை வறுமை ஒழித்து எல்லாரும் நிகர் எனும் தன்னிறைவு பெற்ற 'கிராம சுயராஜ்யம்' உருவாகும் என்பது காந்தியப் பொருளியல் அடிப்படைக் கொள்கையாகக் கருதப்படுகிறது.

## பாரதிதாசன் படைப்புகளில் மார்க்சியப் பொருளியல் கொள்கை

மார்க்சியப் பொருள் முதல்வாதத்தின் அடிப்படையில் ஏகாதிபத்தியம், முதலாளித்துவம், சுரண்டல், தனிவுடமை, இயந்திரமயம் என்ற பொருள்களுக்கும் மறுதலையாக பொதுவுடைமை, போராட்டம், வன்முறை என்பன மார்க்சியத்தில் காணப்படுகின்றன.

மார்க்சிய காந்தியப் பொருளியல் கொள்கையில் முதன்மையாக அமைவது பொதுவுடைமைச் சிந்தனையாகும். இத்தகைய பொதுவுடமையை வலியுறுத்தும் மார்க்சு அவர்கள், "தனி ஒருவனிடம் செல்வம் குவியக் கூடாது" என்று கூறுகின்றார். இதனைப்பற்றி காந்தியடிகள் கூறும்போது, தனியுடைமையைப் போக்குவதே கிராமப் பொருளியலின் இலட்சியம் என்பதும், பற்றின்மை எனப்பொருளாதாரத்துறையில் சொல்லப்படும் நீதியை நடைமுறையில் கொணர்வது என்பதும் தெளிவாகின்றது. இதனை அமைதியான முறையில் எடுத்துச் சொல்லி அதன் வழி அனைவரும் மனநிறைவுடன் ஏற்றுக் கொள்வார்களேயானால் பொதுவுடைமைக்குச் சமமாகச் சொல்லக்கூடிய வேறு ஒன்றும் இல்லை"[13] என்கிறார்.

மேற்குறித்த மார்க்சிய காந்தியப் பொதுவுடைமை, கொள்கை அடிப்படையில் போராட்ட வன்முறை வழிகள் அடிப்படையில் பொருளாதாரம்–பொதுமைப்படுத்தும் கொள்கைகள் பாவேந்தர் பாடல்களில் பல்வேறு இடங்களில் இடம் பெற்றிருப்பது இங்குப் பொருத்திப் பார்க்கப்படுகின்றன.

நல்லவர் நாட்டினை வல்லவர் தாழ்த்திடும் நச்சு மனப்பான்மையானது புவியின் மீது விழுகின்ற பேரிடி போன்றதாகும். இம்முறை, தூய்மைதனைப் போக்கும் என்றும் சொல்லிடும் நெஞ்சில் எரிமலை பூகம்பம், என்றும் கூறுகின்ற பாவேந்தர்,

**'சூழத் தகாதது கண்டாய்**
**செல்வங்கள் யார்க்கும் என்றே சொல்லிப் பேரிகை**
**திக்கில் முழக்கிடுவாய்'**[14]

என்று வீர முழக்க மிடுகின்றார். மேலும் பொதுவுடைமைக் கொள்கையின் புதுக்கொள்கை பற்றிப் பேசிடும் பாரதிதாசன் அவர்கள், அதிகரித்த தொகை தொகையாய்ச் செல்வமெல்லாம் அடுக்கடுக்காய்ச் சிலரிடம் போய் ஏறிக் கொண்டு சதிராடு தேவடியாள் போல் ஆடிற்று, தரித்திரரோ புழுப்போல துடிக்கின்றார்கள். இது இந்நாள் நிலை என்னுான் உலகப்பன்தான், இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா நீ,

**"புதுகணக்குப் போட்டுவிடு, பொருளை எல்லாம்**
**பொதுவாக எல்லார்க்கும் நீ குத்தகை செய்"**[15]

என்று அரைகூவல் விடுக்கின்றார். பாவேந்தரின் இக்கருத்து மார்க்சியப் பொருளியற் கொள்கையின்படி போராட்ட உணர்வுடையதாக இருப்பினும், இக்கருத்தில் இடம் பெற்றுள்ள, செல்வங்கள் சிலரிடம் ஏறுகிறது. தரித்திரர்கள் புழுப்போல் துடிக்கின்றார்கள் என்ற சிந்தனை, காந்தியடிகள் கூறும் தனியுடைமைச் சாடலான, மக்கள் அனைவருக்கும் அவரவர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்குத் தேவையான வேலை வாய்ப்பு கிடைத்தல் வேண்டும். பொருளாக்க வழித் துறைகள்யாவும் தனியாரின் தனிப் பேருரிமையாக இல்லாமல் அது பொது மக்களின் கையில் இருத்தல் வேண்டும். இத்தகைய தனிப்

பேருரிமைக் கொள்கையால் தான் உலகில் பெருந்துயரங்கள் விளைகின்றன[16] என்ற பாரதிதாசனின் கருத்துக்கள் ஒத்திருப்பதை அறிய முடிகின்றது.

மேலும் உலகம் உன்னுடையது என்னும் கவிதையில் அறியாமை, சுயமரியாதை, சுதந்திரம் ஆகிய உணர்வுகளை ஊட்டும் பாவேந்தர் அவர்கள் பொதுவுடமை பண்பைக் கூறும் போது,

> **"மானிட சமுத்திரம் நானென்று கூவு**
> **பிரிவிலை எங்கும் பேதமில்லை**
> **உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்**
> **புகல்வேன், உடமை மக்களுக்குப் பொது**
> **புவியை நடத்து பொதுவில் நடத்து"[17]**

என்று அடிமை நீங்கி ஏற்றம் பெற்றோரை – தோழரை அழைத்து வெள்ளை அன்பால் அதனைக் குள்ள மனிதருக்கும் கூறடா தோழனே என்கிறார்.

போரிடும் உலகத்தை வேரோடு சாய்த்துப் புதிய உலகம் காணத் துடிக்கும் பாவேந்தர் அவர்கள் "இது" "எனது" என்று கூறி பொருளை தனி நடுவர் சுரண்டிவைத்துக்கொண்டு சுகம் காணத் துடிக்கும் ஏகாதிபத்தியமும், முதலாளித்துவமும் கொண்ட கொடுமையைத் தவிர்ப்போம் என்று கனன்று எழுகின்ற பாவேந்தர் அவர்கள்.

> **"இது எனதென்னுமோர் கொடுமையைத் தவிர்ப்போம்**
> **ஒரு பொருள் தனி எனும் மனிதரைச் சிரிப்போம்"**

என்று தனிமனித ஏகாதிபத்தியத்தை நகைப்புக்கு உரியதாக்கி எளனம் செய்து மகிழ்கின்றார்.

மேற்குறித்த பாவேந்தரின் படைப்புக்கருத்துக்கள் மார்க்சிய காந்திய பொருளியல் கொள்கை அடிப்படையில் ஏகாதிபத்தியம், முதலாளித்துவமும் மாற வேண்டும். அவ்வாறு மாற்றம் அடைய உழைக்கும் வர்க்கத்தினரிடையே ஒற்றுமையும் உரிமைக் குரல் ஒலியும் எழ வேண்டும் என்பதுடன் கூட்டுறவு மனப்பாங்கும் போராடும் துணிச்சலும் எழ வேண்டும். உழைக்கும் தொழிலாளர்களின் அஞ்சாமை உணர்வால் போராட்டமும், வன்முறையும் எழும். இவ்வாறு வன்முறைக்கு ஏகாதிபத்தியத்தின் அடக்குமுறையும் அடிப்படையாகும். இத்தகைய அடக்கு முறையைச் சுக்கு நூறாக்க உழைக்கும் கரங்கள் துடித்தெழும். வன்முறை கட்டவிழ்ப்பால் மாற்றங்கள் ஏற்பட்டுப் பின்னர் அது பொருளியல் சமன்பாட்டுக்கு வழிகோலும். என்பது புலப்படுகின்றது.

போராட்டம் மற்றும் வன்முறை பற்றி மார்க்சு குறிப்பிடுவதை "வன்முறை வழியில் தான் ஏகாதிபத்தியத்தையும், முதலாளித்துவத்தையும் ஒழித்துச் சமத்துவம் நிலவச் செய்ய முடியும்" என்று கூறுகின்றார்.

இக்கருத்தை அடிமனக் கருத்தாகக் கொண்ட பாவேந்தர் அவர்கள் முடை நாற்றம் வீசும் முதலாளித்துவத்தை நோக்கி,

**"செப்புதல் கேட்பீர் - இந்தச்
செகத் தொழிலாளர்கள் மிகப்பவர் ஆதலின்
கப்பல்களாக - இனித்
தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்
இப்பொழுதே நீர் - பொது
இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே - எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறும் முன்பே!"**

என்று கொதித்து எழுகின்றார். செகத் தொழிலாளர்களைப் போராடத் தயாராக்கி ரத்த நாளங்கள் துடிக்க எழுந்து முனைந்து நிற்கச் செய்யும் பாவேந்தர் அவர்கள், முதலாளியையும், ஏகாதிபத்தியத்தின் உருவங்களையும் உலகப்பனாக்கி, அந்த உலகப்பனிடம் முதலாளி தொழிலாளி என்ற பேதம் வேண்டாம் என்ற நிலையை நீ உருவாக்க வேண்டும் என்று சொல்ல, அதை ஏளனமாகக் கருதி ஆடுகின்ற போது இந்த நிலையை ஆர்ப்பாட்டக்காரர்கள் பொறுக்க மாட்டார்கள், உதைப்பார்கள் என்று உணர்ச்சி வசப்படும் புரட்சி கவிஞர் அவர்கள்,

**"ஆடுகின்றாய் உலகப்பா யோசித்துப்பார்
ஆர்ப்பாட்டக் காரர் இதை ஒப்பாரப்பா
தேடப்பா புது வழியை என்று சொன்னேன்
செகத்தப்பன் யோசித்து சித்தம் சேர்த்தான்
உதையப்பராகிவிட்டால், ஓர் நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ"**[21]

என்று உலகப்பனுக்கு (பழைய முதலாளிக்கு) அறிவுரை புகட்டி அச்சுறுத்துகின்றார்.

முதலாளித்துவம் இருக்கு மட்டும் தொழிலாளிகளுக்கு எவ்வித முன்னேற்றமும் இருக்காது. ஆதலால் முதலாளித்துவம் ஒழிய வேண்டும் என்றும் முதலெல்லாம் பொதுவாகி விட்டால் தொழிலாளர்களுக்கு ஏற்றம் ஏற்படும் என்பதைக் கூறுகின்ற பாவேந்தர்

**முதலாளி இருக்கு மட்டும்
தொழிலாளிக் கேற்படுமோ முன்னேற்றமே?
முதலெல்லாம் பொதுவானால்
தொழிலாளிக் கேற்படுமோ ஏமாற்றமே** – என்று பாடுகிறார்.

பாவேந்தர் பாடல்களில் காந்திய பொருளியல் கொள்கை

பாவேந்தர் அவர்கள் மார்க்சியப் பொருளியல் கொள்கை அடிப்படையில் போராட்டங்களையும் வன்முறைகளையும் தம் படைப்புகளில் மிளிரச் செய்துள்ளதைப் போலவே, காந்தியடிகளின் பொருளியற் கொள்கையையும் தம்படைப்புகளில் இடம் பெறச் செய்துள்ளார் என்பதைக் காணமுடிகிறது.

வன்முறைப் போராட்டங்களைப் பற்றி காந்தியடிகள் குறிப்பிடும் போது 'செல்வருக்கும் பசித்த கோடிக்கணக்கான மக்களுக்குமிடையே மிக விரிந்த இடைவெளி உள்ளது. இந்நிலை இருக்கும் வரை இன்னா செய்யா நோன்பினதாக அற அரசு அமைவது இயலாது என்பர். செல்வத்தையும் அதிகாரத்தையும் செல்வர் தாமாகத் துறக்க வேண்டும். அவற்றைப் பொது நன்மைக்காக மக்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இல்லையென்றால் குருதி பெருக்கெடுக்கும் வன்முறைப் புரட்சி ஒன்று ஏற்பட்டே தீரும்'[22] என்று உறுதிபடக் கூறுகின்றார்.

'காந்தியடிகளின் இக்கருத்தைப் பார்க்கும் போது அறம், அசிம்சை, வாய்மை முதலியனவற்றையே வலியுறுத்தியவர், தேவையான காலங்களில் போராட்டங்களும் வன்முறையும் எழுவது காலத்தின் கட்டாயம் என்கிறார்.

காந்திய வன்முறையைத் தெளிவு படுத்தும் வகையில் பாவேந்தர் அவர்கள் ஒத்துள்ளார் என்பதனை

**'தக்கது நாடி ஒற்றுமை வலியினால்**
**தகர்த்திட வேண்டிக் கொதித்திடுவீர்கள்.**

என்று முழங்குகின்றார். இதனில் தகர்த்திட வேண்டி கொதித்து எழச் சொல்லும் கவிஞர் தக்கது நாடி ஒற்றுமை வலிமையை ஏற்க ஆணையிடுவது காந்தியத்தின் போராட்டம் கலந்த அறநெறியைக் காட்டுகின்றது.

மேலும் தொழிற்சாலைகளில் கரும்புபோல் நசுக்கப்படும் தொழிலாளர்களை மீட்டல் வேண்டும். அவ்வாறு மீட்பது அறத்தின் முதன்மையான கடமை என்பதனைக் கூற வரும் பாவேந்தர்,

**"ஆலையிற் கரும்புபோல் வாடினர் பல்லோர்**
**அவர்களை மீட்டல் அறத்தின் முதன்மையாம்"[24]**

என்று கூறுகின்றார். மேற்குறித்த பாவேந்தர் பாடல்களில் எல்லாம் காந்தியடிகளின் போராட்டம், எதிர்ப்பு போன்ற பொதுவான பொருளியற் கொள்கைகள் பேசப்படுகின்றன, என்றாலும் காந்தியின் தனித்தன்மை வாய்ந்த கிராமப்புறப் பொருளாதாரக் கொள்கையான கதர்ப்புரட்சி என்பது பற்றியும் இங்குச் சிறப்பாக ஆராயலாம்.

பாவேந்தரின் கதர் இயக்கப்பாடல்களைப்பற்றி கூறும் மா. செல்வராசன் அவர்கள், கதர் இராட்டினப் பாட்டு 1930ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்போது பாரதிதாசன் முழுமையான பகுத்தறிவாளராக தன்மதிப்புக் கழகத்தில் சேர்ந்து விட்டார். அன்று இதை எனக்கு எழுதித் தந்துதவிய ஸ்ரீ பாரதிதாசன் அவர்களுக்கு நான் அன்றே என் நன்றியறிதலைத் தெரிவித்துவிட்டேன், என்ற காசி ஈ. இலட்சுமண பிரசாத்தின் முகவுரைக் குறிப்பும் இதனை உறுதிப்படுத்துகிறது' என்று குறிப்பிடுகின்றார். இம்முறையில் பல்வேறு துறைகளைத் தொட்டுப் பாடியுள்ள பாவேந்தர் காந்தியடிகள் சிறப்புப் பொருளாதாரக் கொள்கையின் அடித்தளமாகிய கதர்ப்புரட்சி தொடர்பான கதர் ராட்டினப்பாட்டு (பாரத தேவி) சுதந்திர தேவி,

ராட்டினச் சிறப்பு, தேசத்தாரின் பிரதான வேலை, அன்னைக்கு ஆடை வளர்க என்ற பல்வேறு தலைப்புகளில் பாடல்களைப் பாடியுள்ளார். இப்பாடல்களில் எல்லாம் காந்தியப் பொருளியல் கொள்கை பொருந்தியுள்ளதைக் காண முடிகின்றது.

இதனை

"அன்னியர் நூலைத் தொடோம் என்ற சேதி
அறைந்திடடா புவி முற்றும் - எங்கள்
அறுபது கோடி தடக்கைகள் ராட்டினம் - சுற்றும் சுற்றும்

இன்னும் செல்லாது பிறர்செய்யும் சூழ்ச்சிகள்
என்று சொல்லிப் புயம் தட்டு - அட
யானையின் மேல் வள்ளுவா சென்று நீ பறை - கொட்டு கொட்டு

இன்னல் செய்தார்க்கும் இடர் செய்திடாமல்
இராட்டினம் சுற்றென்று சொல்லும் - எங்கள்
ஏதமில் காந்தியடிகள் அறச்செயல் - வெல்லும் வெல்லும்"

என்ற பாடல் வரிகளாலும்,

ஆக்கந்தருவது சக்கரம் ஆம் எனக் கொள்வோம் என்ற பாடல் வரியாலும், சுதந்திர தேவியும் கதரும் என்ற பாடல் வரிகளான,

"சின்ன ராட்டின நூலிழையால் அதில்
தீட்டின்றி நெய்த உடை உடுப்பாய் - வரும்
அன்னியர் நூலைத் தலை கவிழ்ப்பாய் - அதற்கப்புறம்
என்னைக் கலந்திடுவாய்"

என்பவற்றாலும் அறிய முடிகின்றது. தேசத்தாரின் அனைவரின் வேலையும் ராட்டினம் சுழற்றுவதுதான் என்ற காந்தியடிகளின் கருத்தை வலியுறுத்தும் வகையில்,

"தேனருந்தும் ஈக்களெல்லாம்
சேர்ந்து மொய்த்தல் போலே - மிகச்
சேர்ந்து மொய்த்தல் போலவே - முழுத்
தேசமின்று ராட்டினத்தைச்
சேர்ந்து சுழற்றுவீரே"

என்றும் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. மேலும் ராட்டினத்தைக் காதலியாக்கிப் பாடும் போது ராட்டினம் என்பது இந்தியப் பாரதத்தில் பிறந்தது என்றும் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்றது என்ற காந்தியடிகளின் பொருள் இயல் கொள்கையான கிராமப்புறக் கொள்கைக்கு ஏற்ப அமைந்த,

"பாட்டினிக்கப் பாடுகின்ற
ராட்டினப் பெண்ணே - பண்டு

பாரதத்திலே பிறந்த
ராட்டினப் பெண்ணே"

என்ற பாவேந்தரின் பாடல் வரிகள் நமக்கு காந்தியப் பொருளாதாரச் சிந்தனையை வலியுறுத்துகின்றன. இறுதியாக, "அன்னைக்கு ஆடை வளர்க, என்ற தலைப்பில் அமைந்த பாடல் வரிகள், பாஞ்சாலியைத்துகில் உரித்த கதையை இந்திய சுதந்திரத்தின் உரிமை பறிக்கப்பட்டதோடு ஒப்பிட்டு, அமைந்த ராட்டினப் பாட்டு கற்போரை மெய்சிலிர்க்க வைக்கும் கற்பனையும், கதர் புரட்சியையும் ஒருங்கே இயம்புகின்ற பாங்கை,

"முப்பத்து முக்கோடி
மொய்ம்புடைய மனிதர்களை
இப்புவியிற் பெற்ற
எழில் பாரதத் தாயின்
ஆடை பறித்தார் - அதிகாரம் கொண்டவர்கள்
ஓடி அவளின்
உடை மீட்க வேண்டாமோ?
நெய்து நெய்து வேறு
நிலத்தார்க்கும் நாமு தவச்
செய்து குவியோ மோ!
சிறந்த கதாராடை
ஒகோ நம் பாரதத் தாய்
உற்றதன் மைந்தரிடம்
சோகத்தால் வாய் விட்டுச்
சொல்வதும் கேளீர்,
ஆவிமிழக் கலாம்
ஆடை யிழப்பதுண்டோ" – என்ற பொன் வரிகள் புலப்படுத்துகின்றன.

மேற்குறித்த பாவேந்தரின் பாடல்வரிகள் புலப்படுத்தும் காந்திய கிராமப்புறக் கொள்கையோடு ஒத்திருப்பதை, காந்தியடிகளின், "இந்தியாவின் வாழ்வு என்பது இலட்சக் கணக்கான கிராமங்களின் வாழ்வுதான்; அந்தக் கிராமங்களின் வாழ்வோ அவைகளிலுள்ள விவசாயிகளின் வாழ்வு தான்" என்ற கருத்தும், "இந்தியாவில் வளர்ந்து கொண்டுவரும் வறுமையைப் போக்குவதற்குச் சரியான மருந்து கைத்தறி அல்லது கைராட்டினமே" என்ற கருத்தும் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன.

## முடிவுரை:

கவிஞர் பாரதிதாசன், புரட்சிக்கவிஞர் என்றும், சுயமரியாதை இயக்கக் கொள்கையாளர் என்றும், காதல், மொழி, தொழில், பெண்மை போன்றவற்றுடன் இன்னும் எத்தனையோ பாடுபொருள்களை அடியொற்றிக் கவிதை படைத்துள்ளார் என்றாலும் பொருளியில் கொள்கையையும் பாடியுள்ளார். இவர் பாடியுள்ள

பொருளாதாரக் கொள்கையானது புரட்சி வேகத்தால் முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், தனியுடமை ஆகியனவற்றைச் சாடி, வன்முறை, போராட்டம் என்ற மார்க்சிய அடிப்படைப் பொருளாதாரக் கொள்கையை நிலை நாட்டியுள்ளார். இத்தகைய இயக்கப் பொருள் முதல்வாதக் கொள்கைக்கு இணையாகக் காந்திய பொருளாதாரக் கொள்கையையும் குறிப்பாகக் "கதர் புரட்சி" என்ற காந்தியச் சிறப்பு பொருளாதாரக் கொள்கையையும் பாடியுள்ளார்.

இவற்றில் பேசப்படும் மார்க்சியமும், காந்தியமும் வெவ்வேறு கோணங்கள் உடையதாக இருந்தாலும் இரண்டிலும் அடிப்படையானது பொருள்.

## குறிப்புகள்


1. மா. செல்வராசன், பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர்... ப.3
2. S.J. Gunasekaram, The poet Revolt, Tamil Culture, Madras, April T.52
3. சி.என். அண்ணாதுரை, ஏ.தாழ்ந்த தமிழகம், சென்னை, 1977, ப.33
4. மா. செல்வராசன், மேலது.... ப.4
5. கே. பாலதண்டாயுதம், மார்க்சிய ஞானரதம், ப.34
6. F. Engles, K. Marx and F. Engles selected Works, Vol. III Progress Publisher Moscow P. 162
7. Reymond William, Marxism and Literature Oxford University Press 1978, P. 162
8. F. Engles, Selected Letters (ed) P.101
9. லூயி, மகாத்மா காந்தி வாழ்க்கை, தி.ஜ. ரங்கநாதன் (மொ) ப. 431
10. காந்தி, காந்திஜியின் பேருரைகள், அ. ராமசாமி, (மொ) ப. 67
11. லூயி, மேலது, ப. 191
12. காந்தி, சத்தியசோதனை, ரா. வெங்கடராஜீலு ப. 495
13. கே. பாலதண்டாயுதம், மேலது ப. 34
14. பாரதிதாசன் கவிதைகள், பாரதி பதிப்பகம் ப. 112
15. பாரதிதாசன் கவிதைகள், ப. 124
17. பாரதிதாசன் கவிதைகள், ப. 126

# 4. பெண்ணிய நோக்கில் பாரதிதாசன் படைப்புகள்

ஜே. பாத்திமா

**"…. தமிழ் கற்ற புலவர், வெற்றுப்**
**பொழிப்புரைகள் தாராமல், புரட்சிப் பாட்டின்**
**பொருளுரைகள்…"** தர வந்துள்ள கருத்தரங்கில் பெண்ணிய நோக்கில் பாரதிதாசன் படைப்புகளைப் பருந்துப் பார்வை பார்க்க முனைகிறது இக்கட்டுரை.

'பெண்ணியம்', 'பெண்ணிய நோக்கு' எனும் சொற்கள் கடந்த பத்தாண்டு களிலேயே பரவலாய் வழங்கப்பட்ட சொற்கள் என்றாலும், ஒடுக்குதலுக்கு எதிரான மனித உரிமை பற்றிய சிந்தனை தொடங்கிய காலத்திலேயே பெண் மீதான ஒடுக்குதல் பற்றியும் சான்றோர் சிந்திக்கத் தொடங்கி விட்டமையாலும், பாரதிதாசன் வாழ்ந்த கால கட்டத்தில் (1891–1964) நாட்டு விடுதலையோடு பெண் விடுதலையும் சேர்த்து நினைக்கப் பட்டமையாலும், சமூக மரபுகளைப் பகுத்தறிவு கொண்டு துலக்கி, பெண்ணை ஆணுக்கு இணையான உயிரியாகக் கண்ட பெரியார் ஈ.வெ. ரா. வாலும்

**"கண்கள் இரண்டினில் ஒன்றைக்**
**குத்தி காட்சி கெடுத்திடலாமோ…**
**பெண்கள் அறிவை வளர்த்தால்**
**வையம் பேதமையற்றிடும் காணீர்"**

என்று உறுதியாய் உரைத்துப் புதுநெறி காட்டிய பாரதியாலும், பெருந்தாக்கங்களுக்கு உள்ளானவர் என்ற முறையிலும் பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புக்களை, பெண்ணிய நோக்கில் அணுகுதல் என்பது பொருத்தம் உடையதாகிறது.

இக்கட்டுரைக்குப் பாவேந்தர் தம் கவிதைகளிலும், காவியங்களிலும் பெண்ணியச் சிக்கல்கள் இடம் பெறும் படைப்புக்கள் மட்டுமே முதன்மைச் சான்றுகளாய்க் கொள்ளப்பட்டுள்ளன. நாடகங்கள் எடுத்துக் கொள்ளப்பட வில்லை.

இக்கட்டுரை, முதன் நிலையில் தனிக்கவிதைகளில் வெளிப்படும் சமூக ஒடுக்குதல்களையும், 2ஆம் நிலையில், காப்பியங்களில் இடம் பெறும் பெண் வார்ப்புகளையும், 3ஆம் நிலையில் கவிதை மரபு வழி வரும் தாக்கத்தையும் ஆய்வதாக அமைகிறது.

## பெண்ணியம்

'Feminism' என்ற சொல்லுக்கு நேர்தமிழ்ச் சொல்லாகப் பெண்விடுதலை இயக்கங்கள், 'பெண்நிலை வாதம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றன. இதனையே கல்வியாளர்கள் பெண்ணியம் என்ற சொல்லால் குறிக்கின்றனர். சமூகத்தில் பெண் பற்றிய நிலைப்பாடுகள் மாற, மாறப் பெண்ணியம் என்ற சொல் குறிக்கும் பொருளும் மாறும். "உலகின் பல்வேறு சமூகத்தினரும் இச்சொல்லைப் பல்வேறு வரையறைகளுக்கு உட்பட்ட கருத்துகளைக் குறிக்கப் பயன்படுத்துகின்றனர்" என்று குறிக்கும் முனைவர் முத்துச் சிதம்பரம் தெற்காசிய நாடுகள் இச்சொல்லுக்குப் பொதுவாக ஏற்றுள்ள வரையறையை,

"பெண்கள் சமூகத்திலும் அலுவலகங்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப் படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படும் முயற்சிகளும்" (பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும், ப. 10) என்று விளக்குகிறார்கள்.

## பாவேந்தர் படைப்புக்களில்...

சமூகம், அலுவலகம், வீடு என்ற மூன்று தளங்களில் சமூக மரபு சார்ந்த தளத்தில் பெண் ஒடுக்கப்படுதல் பற்றிய விழிப்புணர்வும், அவ்வொடுக்குதலுக்கு மாற்றாகும் தீர்வுகளும் பாவேந்தரின் படைப்புகளில் ஐயம் அற விளங்குகின்றன. குழந்தை மணம், பொருந்தா மணம், கைம்மை நிலை, இவற்றுக்கு அடிப்படையாகும் அறியாமை, தன் வாழ்வு பற்றி தெளிவின்மை என்பன பாவேந்தரின் தனிப் பாடல்களிலும், சிறிய பெரிய காவியப் படைப்புகளிலும் காணப்படுகின்றன.

## குழந்தை மணக்கொடுமையும் கைம்மையும்:

'பெண் பாதுகாக்கப்பட வேண்டியவள்' என்ற கருத்தின் அடிப்படையில் திருமணம் அவளுக்குக் கட்டாயமாக்கப்பட்டது. குழந்தை மணங்கள் முன் அளவுக்குப் பெருவாரியாக இப்போது நிகழ்வதில்லை என்றாலும், பூப்பு நிகழ்ந்த உடனேயே, பெண்ணின் உடலும் மனமும் திருமண வாழ்வுக்குரிய உறுதியும் பக்குவமும் பெறுவதற்கு முன்னமேயே, தம் கடமையை முடித்து விடும் அவசரத்தில் 13, 14 வயதுகளில் சட்டத்தை ஏமாற்றி, பெற்றோர் செய்யும் அவசரத் திருமணங்கள் இன்னும் நம் ஊர்களில், நாம் வாழும் தெருக்களில் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அத்திருமணங்களில், பெண்ணை விடப் பல ஆண்டுகள் மூத்த நிலையில் மணமகன் இருப்பதால், உடலளவிலும் மன அளவிலும் பெண் ஒடுக்கப்படுகிறாள்; மரபு சார்ந்த சடங்குகள் வாயிலாக இவ்வொடுக்குதல்கள் தொடங்கப் படுவதாக அவற்றை 'விதி' என்று ஏற்று உள்ளுக்குள் நைந்து போவதே பெண்ணின் வாழ்க்கையாகிறது. இத்தகைய ஒடுக்குதல்கள் பாவேந்தர் பாடல்களில் இடம் பெறவில்லை.

வயது மூத்த கிழவனுக்கு வாழ்க்கைப்பட்டால், இளமை இன்பம் துய்க்கப் பெறாத பெண்ணின் நிலையும், ஓடியாடிக் கல்வி பயிலும் ஏழுவயதில்,

விதவையானதால், சொந்தத் தந்தையாலேயே புறக்கணிக்கப்பட்ட நிலையில் மறுமணம் புரிந்த தன் தந்தை சிற்றன்னைக்கு மட்டும் பூச்சூட்டி அன்பு காட்டுவது ஏன் என்ற கேள்வியோடு நம்மை எதிர் கொள்ளும் பெண்ணின் நிலையும் மட்டும் தனிப் பாடல்களில் இடம் பெறுகின்றன. ஈண்டுப் பாலுறவு பெறாத வறுமை காட்டப்பட்டுள்ளது; அவ்வுறவே வன்முறையாய் மாறுகின்ற நிலை இடம் பெறவில்லை.

## தீர்வுகள் :

வயது பொருந்தா மணத்தையும், மனம் பொருந்தா மணத்தையும் 'மூடத் திருமணம்' என்று வன்மையாய்ச் சாடுகின்ற பாரதிதாசனார் அவற்றுக்கு மாறாகக் காதல் மணங்களை முன்மொழிகிறார். மணமுடிக்காத பெண்ணை, உன் வாழ்வின் துணையைத் தேர்ந்திடு என்பதோடு,

"பெற்றோர் நாயம் தராவிடில் விடுதலை மேற்கொள்" (பா. க., ப. 79) என்றும் உரைக்கிறார். பாவேந்தர் படைக்கும் தந்தை, தனக்குரிய மணளான் இன்னான் என்று மகள் காட்டும் நாள் தனக்கு இனிய நாள் என்கிறார். இது பெண், தன் வாழ்வு என்றும் தன் இலக்கு என்றும் கட்டாயமாய்ச் சிந்தித்துச் செயல்பட வேண்டும் என்ற பெண்ணியச் சிந்தனைக்கு இசைந்துள்ளது.

கைம்மை நிலைக்கு மற்றாக மறுமணத்தைப் பாரதிதாசனார் வலியுறுத் தியதை இத் தமிழகம் அறியும். "மறுமணம் புரிவது சிறுமை என்றறைவது குறுகிய மதி" (பா.க., ப. 30) என்று சொல்லுவதோடு,

**பெண்டிழந்த குமரன் மனம்**
**பெண்டுகொள்ளச் செய்யும் எத்தனம்**
**கண்டிருந்தும் கைம்பெண் என்று கதை சொல்லலாமோ"** (பா.க., ப.80)

என்று இச் சமூகத்தை வினவுகிறாள். மனைவி இறந்து விட்டால், ஆணுக்கு, மூன்றாம் நாளிலேயே பெண் பார்க்கத் தொடங்கி விடும் சமூகம், அந்த நீதியைப் பெண்ணுக்கு மறுப்பதில் நியாயமில்லை என்பதே அவர் வாதம்.

## காப்பியங்களில் பெண்கள் :

**"பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்**
**பேதமை அற்றிடும் காணீர்"**

என்ற பாரதியை அடியொற்றி,

**"கல்வியிலாத பெண்கள் களர் நிலம்; அந்நிலத்தில்**
**புல் விளைந்திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை"** என்றும்,

**"புலனற்ற பேதையாயப் பெண்ணைச் செய்தால் அந்**
**நிலம் விளைந்த பைங் கூழ் நிலைமையும் அம்மட்டுமே".**

என்று அறிவுறுத்திய பாவேந்தர், தாம் படைத்த கதைக்கட்டமைப்பு உடைய காவியங்கள் அனைத்திலும், பெண்ணை அறிவார்ந்தவளாகப் படைத்துள்ளான்.

குறிஞ்சித் திட்டு நீங்கலான காவியங்களில் பெண்ணறிவு, ஆக்கத்திற்கே இட்டுச் செல்கிறது.

சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் குப்பனும் வஞ்சியும் இருக்கையில்,

**"ஓர் நொடியில் சஞ்சீவி பர்வதத்தை ஓடிப்போய்**
**வேரோடு பேர்த்து வர வேண்டுமே....**
**ஏனிங்கு நின்றீர்? எடுத்து வருவீர்"** (பா.க., ப.7) என்ற குரலை கேட்டுக் குன்று பெயர்ந்ததென்று குப்பன் மனம் அழிய, அக்குரல் இராமாயணக் கதை உரைக்கும் பாகவதர் குரல் என்பதை அவன் மனம் தெளியும் படியாய் எடுத்துக் கூறுபவள் வஞ்சி என்ற பெண்ணே.

கடல் மேற் குமிழிகள் என்னும் படைப்பில், பொது உடைமைச் சிந்தனைகளை நாடாளும் இளவரசனுக்குப் பகர்பவள், பணிப் பெண்ணின் மகளான மின்னொளி என்ற பெண் பாத்திரம். வேந்தன் மகன் அவளை மிக விரும்பிக் காதல் மொழி பேச நெருங்கினாலும்

**"வீழும் நிலை கொண்ட மக்கள் எந்நாள் மீளுவார்"** என்பதே அவள் சிந்தையாயிருக்கிறது. (பா.க.ப. 22)

அரண்மனைப் பண்ணியங்கள் அனுப்பி வைத்தேனே, உண்டாயா? என்ற கேள்விக்கு,

**"ஏழையர் அத்தனை பேர்க்கும்**
**நாலத்தில் எந்நாள் கிடைக்கும்"** (பா.க.ப. 222) என்கிறாள்.

வீரத்தாய், பாண்டியன் பரிசு எனும் படைப்புகளில், பெண்கள் ஏட்டறிவோடு, வாள் வீச்சிலும் வல்லவர்களாக உள்ளனர். நாடாளும் மன்னன் முதலில் மயங்கி, சேனைத்தலைவன் காங்கேயன் கையில் அனைத்தையும் ஒப்படைத்திருக்க, அந்த நாட்டையும், கல்வியும், கலையுமின்றி வீணனாய் வாழும் படியாய் விடப்பட்டிருந்த இளவரசனையும், மாற்றுருப் பூண்டு போர்க்கலையை இளவரசனுக்குப் பயிற்றுவித்து, அண்டை நாட்டு மன்னர்க்கு காங்கேயனின் சூழ்ச்சிகளைத் தெரியப்படுத்தி, நாட்டை மீட்கும் பொறுப்பை வெற்றியாய் ஆற்றுபவளாய்ப் பட்டத்து ராணி விசயார் படைக்கப் பட்டுள்ளார். சீவக சிந்தாமணியை நினைவுறுத்தும் வகையில் எழுதப் பட்டுள்ளாள். இக் கவிதைப் படைப்பில், மீட்சி பெண்ணால் ஏற்படுவது, பாவேந்தர் நினைத்துச் செய்த மாற்றம் என்பதைத் தொடக்கக் காட்சியின் உரையாடலே உணர்த்துகிறது.

**"ஆடை அணிகலன், ஆசைக்கு வாசமலர்**
**தேடுவதும், ஆடவர்க்குச் சேவித்திருப்பதுவும்**
**அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப் போல் வாழுவதும்**
**கெஞ்சுவதுமாகக் கிடக்கும் மகளிர் குலம்**
**மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர் பகுதி"** (பா.க., ப.30) என்ற சேனைத் தலைவனின் கூற்றுக்கு எதிராக, நல்லதொரு சக்தி வடிவமெது? மாமகளிர்

கூட்டமன்றோ, என்ற அமைச்சரின் விடை, பெண் நொம்மையானவள், தனிச்செயற்பாடு கல்லாதவள் என்ற மரபு வழியான கருத்து நிலையைத் தகர்ப்பதற்காய்ப் புரட்சிக் கவிஞர் படைப்பில் புரட்சி செய்ய முனைந்ததை சுட்டுகிறது.

'விசயா' போன்ற அரசமகளிர் மட்டுமின்றி, குடிமக்கள் கூட்டத்தைச் சேர்ந்த கல்வி வாய்ப்பற்ற மகளிரும் கூடத் துணிவோடும், இயற்கையறிவோடும் செயல்படக் கூடும் என்பதைக் காட்ட 'பாண்டியன் பரிசு' ஆத்தாள் கிழவி எனும் பாத்திரத்தைப் பாரதிதாசனார் படைத்துள்ளார். அவள் இளவரசி அன்னத்தை, போர் நெருக்கடிக்கு இடையே மாற்றுருச் கொள்ளச் செய்து காப்பவனாகவும் நரிக் கண்ணன் மறைந்திருந்து மைத்துனனைக் கொன்று நாட்டாச்சியைக் கைப்பற்றியதை, வேழ நாட்டு வேந்தன் அவையில் உரைப்பவனாகவும் காட்டப்பட்டுள்ளாள். எதிர் நிலைத் தலைவனைப் போரிட்டு வீழ்த்துகின்ற காப்பியத் தலைவனுக்குப் பதிலாக, பாண்டியன் பரிசில் – நரிக்கண்ணனை வாளல்மாய்ப்பது இளவரசி அன்னமே. இங்ஙனம் பாவேந்தரின் நெடுங்காவியமாம் பாண்டியன் பரிசும், பிற குறுங் காவியங்களும் தலைவனை விடவும் தலைவியரை ஏற்றம் மிக்கவராய்ப் படைத்துள்ளன. அதனாலேயே 'தமிழச்சியின் கத்தி' என்ற கவிதைப் படைப்பில், மயக்க மருந்திட்டு சுப்பம்மாவைப் பாலியல் வன்முறைக்கு கருபதார் ஆளாக்கியதை அவள் அறிந்த பின், அதற்குப் பழிவாங்க அவளே கத்தி ஏந்திச் சென்று அவனைத் தேடி வீழ்த்துவதாகக் காப்பியக் கவிஞர் அமைக்கிறார். பாவேந்தர் படைத்த கதைத் தலைவியர் ஆணின் நிழலிலே மறைந்து வாழ்பவர்களாக இல்லாமல், சுயமாய்ச் சிந்தித்துச் செயல்படுபவர்களாக, துணிவாலும் விவேகத்தாலும் சூழல்களை வெற்றி கொள்பவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். இவ்வமைப்பு பெண்களுக்குக் கற்பிக்கப்பட்ட மரபு சார்ந்த சார்பு நிலைக் கோட்பாட்டை மறுத்து மனித உயிர் என்ற நிலையில் சிந்தனை, சொல், செயல் என்ற மூன்றிலும் பெண்ணுக்குத் தனித்தன்மை உண்டு; ஏற்கப் படவேண்டும் என்ற பெண்ணியச் சிந்தனையைப் புரட்சிக் கவிஞர் அன்றே கொண்டிருந்ததை எடுத்துக் காட்டுகிறது.

## படைப்பில் பழைய கவிதை மரபின் தாக்கம் :

வீரத்தாயில் வரும், போர்க்கலை கற்பிக்கும் விசயா, மற்றும் பாண்டியன் பரிசில் வரும் ஆத்தாக்கிழவி ஆகியோர் சங்க காலத்திய மூதின் முல்லை காட்டும் வீரத்தாயரின் சாயலில் படைக்கப் பட்டுள்ளனர். பெண் எப்படி இருக்க வேண்டும் என்ற கேள்விக்கான மாதிரியைப் பாரதிதாசனார் சங்க இலக்கியங்களில் இருந்தே பெற்றார். ஆகவே தான் அவருடைய காவியங்களில் காதலும், வீரமும் இணைந்தே செல்கின்றன. போருக்கும் சாவுக்கும் அஞ்சாதவர்களாய்ப் பெண்கள் படைக்கப் பட்டுள்ளனர். சஞ்சீவி பர்வத மூலிகைகள் தனக்கு வேண்டும் என்ற வஞ்சியின் வேண்டுகோள், அவன் காதலனால் அடுத்தடுத்து மறுக்கப் பட்டபோது

**"சற்றும் தயங்கேன் தனியாய்ச் சஞ்சிவி மலை**
**உற்றேறி மூலிகையின் உண்மை அறிந்திடுவேன்.**

**மூலிகையைத் தேட முடியாவிட்டால், மலையின்**
**மேலிருந்து கீழே விழுந்திறக்க நானறிவேன்"** (பா.க., ப. 2–3)

என்கிறாள். இதில் தடைகளைக் கண்டு அஞ்சாமல் பெண்கள் உறுதியாய் முன்னேற வேண்டும் என்ற கருத்து உள்ளது. ஆனால் தொடர்ந்து வரும் 'மலையின் மேலிருந்து வீழ்ந்திறக்க நான் அறிவேன்' என்ற கூற்றிலுள்ள தற்கொலை எண்ணம் நம்மைத் தடுத்து நிறுத்துகிறது.

**"மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்**
**உயிர் நீப்பர் மானம் வரின்"**

என்ற குறளுக்கு உரையெழுதும் பரிபேலழகர்,

**"எங்ஙான்றும் தம் நிலையில் தாழாமையும்**
**தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும்"**

என்று எழுதியுள்ள மறுமதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டிய மரபு – பாரதிதாசனிலும் தலை தூக்கி நின்றதையே – தற்கொலை எண்ணத்தைத் துணிவுச் சிந்தனையாகக் காட்டும் வரிகள் எடுத்துக் காட்டுகின்றன.

தமிழ்க்கவிதை மரபின் மற்றொரு தாக்கம் பாண்டியன் பரிசின் கதை நிகழ்வில் காணக் கிடக்கிறது. காளையை வென்றவனுக்கே பெண் உரியவள் என்ற முல்லை மரபுக்கேற்ப, இளவரசி அன்னம்,

**"பாண்டியன் பரிசை எனக்களிப்போன்**
**எவனெனினும் அவனுக்கே உரியன் நான்"** என்கிறாள்.

ஒரு அரிய செயலுக்கு விலைப் பொருளாய் பெண்ணைச் சுட்டி,

**"இந்த வில்லில் நாண் ஏற்றுபவனுக்கு இப்பெண்**
**இந்த இலக்கை வீழ்த்துபவனுக்கு இப்பெண்**
**இப் போரில் வெல்பவனுக்கு இப்பெண்"**

என்னும் பழஞ் சமூகப் போக்குகளை இன்றைய பெண்ணியம், பெண்ணுக்கு தரப்படும் மேன்மைகளாய்க் கருதவில்லை. நுகர் பொருளாய்ப் பெண்ணைக் கருதி அவளைக் கீழ்ப்படுத்தும் மனப்பான்மை என்றே குற்றம் சொல்கிறது.

## குடும்பத்தில் பெண்

சமூக மரபுகளால் பெண் ஒடுக்கப் படுவதை விரிவாய் எழுதிக் காட்டி, மாற்றுத் தீர்வுகள் உரைத்த பாவேந்தர், குடும்பத்தில், கடமைகள் என்ற பெயரால் அவள் ஒடுக்கப்படுவதை உணர்த்தாததோடு, இருவராய் நடத்தும் இல்லறத்தில் பெண்ணால், அவள் அறிவால், அவள் உழைப்பால் மட்டுமே வீடு ஒளி பெறும் என்ற கண்ணோட்டத்தில், 'குடும்ப விளக்கையும்' அதன் எதிர் நிலையாய் இருண்ட வீட்டையும் படைத்துள்ளார். குடும்ப விளக்கின்

**ஒரு நாள் வாழ்வு**
**விருந்தோம்பல்**
**திருமணம்**
**மக்கட்பேறு**
**முதியோர் காதல்**

எனும் ஐந்து பகுதிகளும் வீட்டு வாழ்வை மையமாய்க் கொண்டே அமைகின்றன. முதல் தொகுதியின் கடைசி இருபக்கங்கள் மட்டும்,

**"அதிகாலை தொடங்கி நாம் இரவு மட்டும்**
**அடுக்கடுக்காய் நமது நலம் சேர்ப்பதல்லால்**
**இதுவரைக்கும் பொது நலத்திற்கென்ன செய்தோம்"**

என்று பெண் பொது நலத்தைச் சிந்திப்பதாகவும், அதற்கு அவள் கணவன் தமிழ்க் கழகத்தார், தன் கடைக்கு வரும்போது, தமிழ் வளர்ச்சிக்கெனப் பெரும்படியாய் தான் ஈவது உண்டு என்று உரைப்பதாகவும் அமைக்கிறார். கடை வணிகத்தில் ஈட்டிய பொருளின் ஒருபகுதி தமிழ் வளர்க்கப் பயன்படுதல் என்பது நல்ல செய்தி; நம்மைத் தூண்டும் செய்தி. ஆனால் அது கணவனின் பங்களிப்பாக மட்டுமே ஆகிறது. ஏனெனில் விடியுமுன் கருக்கலில் எழுந்து, நள்ளிரவு வரை பணியாற்றும் பெண்ணின் வீட்டு வேலைகளுக்குப் பொருள் மதிப்பு எதுவும் தரப்பாடாத சமூக அமைப்பால், கணவன் பணிக்குத் துணை நிற்கிற சிறப்பு என்பதே இங்கு பெண்ணின் சிறப்பாகிறது. பாவேந்தர் தம் பிற காவியங்களில் அரச மகளிரும், அரண்மனைப் பணியாளரான பெண்களும் தீவிரமாய் நாட்டுப் பணியில் தலை நிற்பதைக் காட்டி இருப்பதோடு, இதை உறழ்ந்து பார்க்கையில் வேற்றுமை தோன்றுகிறது.

குடும்ப விளக்கில், பெண்ணின் ஒரு நாள் வாழ்வைக் காட்டுகையில் காலையில் வாசல் தெளித்து, கோலம் அமைத்து, யாழ் மீட்டிப் பிள்ளைகளையும், கணவனையும் துயில் எழுப்பி, வீடு தூய்மை செய்து, மாடு கறந்து, பாத்திரங்களைப் பசும் பொன்னாகத் தேய்த்து, நீர் சேந்தி, அப்பம் சுட்டு, கணவன் குளிப்பதற்கு உதவி, குழந்தைகளைக் குளிப்பாட்டி, அவர்களுக்குக் காலை உணவு தருகையில் சுவரில் இருந்த மணிப்பொறி ஆறு அடித்தது என்கிறது. காலை ஆறு மணிக்குள் இத்தனை வேலைகளும் முடிய வேண்டும் என்றால், அந்தப் பெண் நள்ளிரவிலேயே எழுந்திருக்க வேண்டும், அவள் படுக்கச் செல்லவும் அந்நேரம் ஆகி விடும். ஆகவே அவளுக்கு ஓய்வு என்பதே இல்லை என்றாகிறது.

18ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஆரம்பகால மிதவாதப் பெண்ணியம், குடும்பமே பெண்ணின் முக்கியமான இடம் என்று சொல்லி, சமூகப் பங்கேற்புக்கு முதன்மை தரவில்லை. ஆனால் பிற்கால மிதவாதப் பெண்ணியத்தைச் சேர்ந்த பெட்டி பிரைடன் (Bettey Freidan', தம் பெண்மைப்புதிர் (Feminis Mysticism) என்ற நூலில்

"பெண்கள், திருமணம், தாய்மை என்பவற்றோடு வாழ்க்கைப் (சமூக) பணிகளையும் இணைத்துச் செயலாற்றப் புதுவிதமான வாழ்க்கைத் திட்டத்தை உருவாக்க வேண்டும். இதற்கு சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும்" என்றுரைக்கிறார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இருவரும் வெளியே சென்று பணியாற்றுவது என்ற நிலையில்

**"அழும் குழந்தை என்னுடையது மட்டுமல்ல**
**அது உன்னுடையதும் தான்**
**அடுப்பும் சோறு அதுவும் நமக்காகத் தான்" (எந்தன் தோழா)**

என்ற சுபத்ராவின் பெண்ணிய நோக்கு வேண்டப்படுகிறது. இது ஒரு சிந்தனையாகக் குடும்ப விளக்கின் 2ஆம் பகுதியில்,

**"சமைப்பதும் வீட்டுவேலை சலிப்பின்றிச் செயலும் பெண்கள்**
**தமக்கே ஆம் என்று கூறல் சரியில்லை!**
**ஆடவர்கள் நமக்கும் அப் பணிகள் ஏற்கும்**
**என்றெண்ணும் நன்னாள் காண்போம்!**
**சமைப்பது தாழ்வா? இன்பம்**
**சமைக்கின்றார் சமையல் செய்வார்".** (குடும்ப விளக்கு. ப. 23)

என்று சிந்தனையாகக் காட்டப்படுகிறது. செயலாக உருப் பெறவில்லை. ஒருவேளை பெண்ணியச் சிந்தனைகள் வளர்ச்சி பெற்றுள்ள இக்காலத்தில் பாரதிதாசன் வாழ்ந்திருந்தால், புரட்சிக்கவி என்ற பெயருக்கேற்பப் புதிய சிந்தனைகளை உள்வாங்கிக் கொண்டு அவற்றுக்குச் செயல் வடிவம் தரும் பாத்திரங்களைப் படைத்திருக்கலாம்.

**காதல் சித்திரிப்பில்....**

கலவி சேர்ந்த காதலைப் பாவேந்தர் மிகுதியாகப் பாடியுள்ளார். சஞ்சீவி பர்வதத்துச் சாரலில்,

**"கட்டாயம் போய்ப் பச்சிலையைக் கொய்து தருகிறேன்**
**நீட்டாண்மைக் காரி எனக் கென்ன நீ தருவாய்"** (பா.க., ப. 3)

என்று சுப்பன் கேட்க

"முன்னே இலை கொடுத்தால் முத்தம் பிறகு" என்கிறாள் அவள். கடமைக்குக் காதல் பரிசு என்ற வகையில் இது அமைகிறது. உள இயலோ, "ஆண் பாலுறவைப் பெறுவதற்காகவே அன்பு காட்டுகிறான்; பெண்ணோ அன்புக்காவே அவ்வுறவில் ஈடுபடுகிறாள்" என்று மாறுபட்டு உரைக்கிறது.

கலவி சேர்ந்த காதலை மிகுத்துரைத்தல், மனம் சார்ந்த உறவினும், உடல் சார்ந்த உறவு நிலைக்கு முதன்மை தருவதாகிறது. விதவை மறுமணம்

பேசுகையிலும்,

"கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரிற் பழுத்த பலா" (பா.க.ப. 70)

என்பது போல வரும் புனைவுகள், பெண்ணின் அவலம் கண்டு இரங்குவதிலும், அவள் அழகு துய்க்கப்படாமல் பாழாகிறது என்னும் இரங்கற் குறிப்பையே கொண்டுள்ளது.

"தி. ஜானகி ராமன் நாவல்களில் பெண்கள்" என்ற பொருள் பற்றி ஆராய்ந்த அறிஞர் க. பரிமணம் என்பார் தம் முடிவுகளில்,

"பெண்ணைப் பற்றி ஆண் கட்டி எழுப்பிய புனைவுகள் யாவும் நேரடியாகவோ மறைமுகமாகவோ அவளுடைய உடலைச் சுற்றிக் கட்டப்பட்டுள்ளன. சமத்துவநிலையில் பெண்ணிடம் ஆண் பெற்றிருக்கக் கூடிய எதார்த்தமான நிறைவையும் உளவியல் சமனிலையையும் சமத்துவமற்ற நிலையில், பெண்ணை அடிமைப் படுத்தியதால் கற்பிதமான புனைவுகள் வழியே ஆண் இவற்றைப் பெற முனைந்திருப்பதைக் காணலாம்" என்று குறிப்பிட்டிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது.

## முடிவுகள்

1) வேதநாயகரும் பாரதியும் முன் மொழிந்த பெண் விடுதலை பெண் கல்வி தொடர்பான கருத்துக்களைத் தொடர்ந்தும், தெளிவோடும் முன்னெடுத்துச் செல்பவராகப் பாவேந்தர் பாரதிதாசனைப் படைப்புகள் இனம் காட்டுகின்றன.
2) குழந்தை மணம், பொருந்தாமணம், கைம்மை ஆகிய சமூக மரபுகளால் பெண் ஒடுக்கப்பட்டதை எடுத்துக்காட்டி அவற்றுக்கான தீர்வுகளையும் ஐயத்திற்கு இடமின்றி வெளிப்படுத்துவதில் பாவேந்தர் வெற்றி பெற்றுள்ளார். 3) அவர் தம் காப்பியங்களில் பெண் அறிவார்ந்தவளாகவும், தனித்த செயல்பாடு உடையவளாகவும் காட்டப்பட்டிருக்கிறாள். தலைவியர்க்கு ஏற்றம் தரும் வகையில் கதைக் கட்டமைப்புகள் அமைகின்றன.
4) சங்க இலக்கியம் காட்டும் மறப்பெண்ணின் வீரம், பாரதிதாசனார் காப்பியங்களில், வாள் எடுத்துப் பகை வெல்லும் வீரமாகவும், விவேகத்தோடு கூடிய செயல்பாடாகவும் வளர்த்துக் காட்டப் பட்டுள்ளது.
5) சமூக மரபுகளால் ஏற்படும் ஒடுக்குதலை வெளிப்படுத்தியுள்ள அளவுக்குக் கவிஞர் குடும்பச் சுமைகளால் ஏற்படும் ஒடுக்குதலைக் காட்டவில்லை. சமூகப் பங்கேற்புக்கு இடமின்றிப் பெண்ணை நாள் வாழ்வுப் பொறுப்புகளில் கரைத்து விடும் மரபுசார் வாழ்வு பெண்ணின் மேன்மையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.
6) குடும்பத்தில் ஆணும் பெண்ணும் வேலைகளைப் பகிர்தல் என்பது ஒரு சிந்தனையாக வெளிப்படுத்தப் பட்டுள்ளதேயன்றி அதற்குச் செயல்வடிவம் தரப்படவில்லை.
7) பெண்ணை நுகர் பொருளாய்க் காணும் சமமற்ற பார்வையின் தாக்கம் பெண்ணைப் பற்றிய புனைவிலும் காதல் சித்திரிப்புகளிலும் வெளிப்படுகிறது.

# 5. பாவேந்தரும் தமிழ்சினிமாவும்

ஆர்.கே. அழகேசன்

பேசும் சினிமா தமிழகத்தில் 1931 ஆம் ஆண்டு பவனி வந்தது. அது பிறந்த நான்கைந்து ஆண்டுகளுக்குள் பாவேந்தர் (1891–1964) சினிமாவுக்குள் பாட்டெழுதப் புகுந்தார். படிப்படியாக வசனம், பாடல்கள், தயாரிப்பு, மேற்பார்வை ஆகிய பணிகளைப் பாராட்டும் படியாகச் செய்தார். நம் தமிழ் சினிமாவுலகிற்கு அவரது பங்களிப்புப் பெரியது; பாராட்டுதற்குரியது.

## முதற்பாடல்:

சினிமா என்னும் மறுமலர்ச்சிக் கலைவடிவத்திற்குப் படைப்பு நிலையிலும், விமரிசன வகையிலும் அவரது கொடைகள் விரிவடைந்திருந்தன. பாரதி உலகிற்களித்த ஒப்புயர்வற்ற முதற்பாடலே பாரதிதாசன் தான்[1] என்பார், நீதியரசர் மகாராசன். அத்தகைய முதற்பாடல், சினிமா உலகிற் புகுந்து முன்மாதிரியான செயல்களைத் திறம்படச் செய்திருந்தது. அவரது பாடல்கள் மக்களிடம் தைத்ததற்கு இரண்டு காரணங்கள் தென்பட்டன.

1) 'வசனத்தையே வளைச்சு வைச்சுப் பாட்டாக்கியிருக்காங்க' – என்ற குற்றச் சாட்டை மாற்றுதல்

2) தன்னுடைய குருநாதர் சொல்லிய எளியபதம், எளியநடை, எளிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு ஆகிய புதுப்பொலிவுகளுடன் சினிமா பாடல்களை அமைத்துப் பொது மக்களுக்குப் புரியும்படி அர்ப்பணித்தல்.

## சினிமாவுக்கு அவரது சீரிய பங்களிப்பு

பாடலெழுதி உரையாடல் முடிப்பதுடன் தன் பணி நிறைவடைந்ததாக அவர் நினைத்ததில்லை. மக்களின் ரசனை உணர்வு எப்படியிருந்தது? தமிழ் சினிமாவின் போக்கும், நோக்கும் எங்ஙனம் விளங்கின? என்பவற்றை 1938–ன் தொடக்கத்திலேயே திறனாய்ந்திருந்தார்.[2]

**"பாடலிலே புதுப்பாங்கும் புதுக்கருத்தும்**
**பல்பொருளின் நல்லழகும் உயர்வும் இந்த**
**நாடு பெற முடியாது தன்னில் ஊறும்**
**நல்லூற்றுக் கவிஞர்களும் தோன்ற மாட்டா"[3]**

**"ஒன்றேனும் தமிழர் நடையுடை பாவனைகள்**
**உள்ளது வாய் அமைக்கவில்லை. உயிர் உள்ளதில்லை.**
**ஒன்றேனும் தமிழருமை உணர்த்துவதாயில்லை.**
**ஒன்றேனும் வீழ்ந்தவரை எழுப்புவதாயில்லை".**

"வடநாட்டார் போன்ற உடை; வட நாட்டார் மெட்டு
மாத்தமிழர் நடுவினிலே தெலுங்கு கீர்த்தனங்கள்
வடமொழியில் ஸ்லோகங்கள், ஆங்கில பிரசங்கம்
வாய்க்கு வரா இந்துஸ்தான் ஆபாச நடனம்"

"பரமசிவன் அருள் புரிய வந்து வந்து போவார்
பதிவிரதைக்கு இன்னல் வரும் பழையபடி தீரும்
மகரிஷிகள் கோயில் குளம் இவைகள் கதாசாரம்"

– ஒரு கலை வடிவத்திற்கு அது தோன்றிய சொற்ப காலங்களுக் குள்ளாகவே மேற்காட்டியவாறு ஒரு புதிய மதிப்பீட்டை வழங்கிய பெருமை பாவேந்தரையே சாரும்.

## மொத்தம் எத்தனை?

பாவேந்தர் திரைக்கதை, வசனம், பாடல்கள் என்ற மூன்றையும் எழுதினார். பிற கவிஞர்களுடன் பணியாற்றிப் பாடல்களை மட்டும் யாத்திருந்தார். அவை பற்றிய துல்லியங்களை யாரும் சேமிக்காதது ஒரு பெருங் குறை ஏனைய சினிமாக் கவிஞர்களான பாஸ்கரதாஸ்[4], பாபநாசம் சிவன்[5], மருதகாசி[6], பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன் போன்றோர்களின் திரையிசை கீதங்களைத் தொகுத்துச் சொல்வது போலப் பாவேந்தரின் பங்களிப்பைக் கணிக்க முடியவில்லை.

பாவேந்தரின் பாடல்களை உரியவர்களும், ஆர்வலர்களும் சேகரிக்காமல் இருந்தனர். தேடித் துருவிப் பார்க்கலாமென்ற போது அக்கால வழக்கப்படி, பாட்டுப் புத்தகங்களில் கவிஞர்களைக் குறிக்காமற் போனது மற்றொரு காரணமாகும். அதாவது கதை, வசனம் எழுதியவர்களை சினிமாவில் எழுத்துப் பகுதியுள் குறிப்பிடுவது அன்றைய வழக்கமன்று. மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாக்கா, ஜெமினி கதை இலாக்கா, தேவர் பிலிம்ஸ் கதை இலாக்கா – என வெளிப்படுத்துவதே அன்றைய முறையாகும்.

ஒவ்வொரு பாடலையும் யார் இயற்றினர் என்பதற்கு அன்று முக்கியத்துவம் தரப்படவில்லை. கதாப்பாத்திரம் படத்தினுள் எந்தப்பெயரில் வாயசைத்ததோ அந்தப் பெயரைக்குறிப்பிடும் பழக்கமே அன்றைய பாட்டுப் புத்தகத்தின் இன்றியமையா தன்மையாகும். ஆகையால் கவிஞர்களைப் பிரித்து இனங்காணச் சிரமமேற்படுகிறது.

## அக்கறையின்மை :

சினிமாவுக்குப் பாட்டெழுத பாவேந்தர், தொடக்காலத்தில் உற்சாகமில்லாதிருந்தார். இதற்கு அவரது மகனார் மன்னர் மன்னன் "சினிமா ஒரு பிரச்சாரக் கருவியாகுமென்பதை ஆரம்பத்தில் கவிஞர் ஏற்கவில்லை. அது கிடக்கட்டுமேப்பா? எழுதினாப்போச்சு" என்று கூறியதை நினைவு கூர்ந்தார்.

அதுபோல அவரது கவி வாரிசுகளும் சினிமா பாட்டுத்தானே என்றிருந்தமையால் அவரது படப்பாடல்களின் கூட்டெண்ணிக்கையைக் கணிக்க இயலவில்லை.

**படப்பங்களிப்பு :**

பாவேந்தரின் படப்பங்களிப்பு, கீழ் வருமாறு காணப்படும்.

பாலாமணி அல்லது பக்காத்திருடன் (1937) – பாடல்
ராமானுஜர் (1938) – பாடல்
காளமேகம் (1940) – கதை, வசனம், பாடல்
சுபத்ரா (1945) – கதை, வசனம், பாடல்
சுலோச்சனா (1945) – கதை, வசனம், பாடல்
மாயாவதி (1945) – கதை, வசனம், பாடல்
சித்ரா (1946) – கதை, வசனம், பாடல்
ஆயிரம் தலைவாங்கிய அபூர்வ சிந்தாமணி (1947) – கதை, வசனம், பாடல்
பொன்முடி (1950) – கதை, வசனம், பாடல்
ஆதித்தன் கனவு –
வளையாபதி (1950) – கதை, வசனம், பாடல்

மேற்கண்ட படங்களைத்தவிர மேலுஞ் சில படங்களுக்கு கவிஞரின் பாடல்களை மட்டும் காண முடிகிறது. பாவேந்தர் மாண்ட பிறகும் அவரது கவிகள் இறக்கவில்லை என்பதைக் கீழ்வருவன மெய்ப்பிக்கும்.

| | |
|---|---|
| 'ஓர் இரவு' | – துன்பம் நேர்கையில் |
| பணம் | – பசியென்று வந்தால் |
| பராசக்தி | – வாழ்க வாழ்கவே வளமார் |
| கலங்கரை விளக்கம் (1965) | – சங்கே முழங்கு |
| ரத்தக் கண்ணீர் | – ஆலையின் சங்கே நீ ஊதாயோ |
| ரங்கோன் ராதா | – தலைவாரிப் பூச்சூட்டி உன்னை |
| திரும்பிப்பார் | – பாண்டியன் சொல்லை |
| கோமதியின் காதலன் | – நீலவான் ஆடைக்குள் |
| பஞ்சவர்ணக்கிளி | – தமிழுக்கு அமுதென்று பேர் |
| நானே ராஜா | – ஆடற்கலை |
| கல்யாணி | – அதோ பாரடி |
| சந்திரோதயம் | – புதியதோர் உலகம் செய்வோம் |
| பல்லாண்டு வாழ்க | – |
| மணிமகுடம் | – கொலை வாளினை எடடா |
| பில்ஹணன் (1947) | – |
| நம்ம வீட்டுத்தெய்வம் | – எங்கெங்கு காணினும் சக்தியடா |
| நான் ஏன் பிறந்தேன் | – சித்திரைச் சோலைகளே |

குலதெய்வம் – கோரிக்கையற்று கிடக்கு தண்ணே
பெற்ற மணம் – இரண்டு பாடல்கள்
(Dr. மு.வ. – கதை, வசனம்)

இங்ஙனமாக மகாகவியின் மறைவுக்குப் பிறகு, சினிமாவில் ஒரு கவிஞரின் கவிதைகள் மிகுதியாக இடம் பெறுகிறதென்றால், அது பாவேந்தருக்கே எனலாம்.

## பாவேந்தரின் புதுமை :

தனது சுயமரியாதை இயக்க நண்பர்களான குகை ஜெகதீசன், கண்ணன், G.K. வேலுமணி ஆகியோர்களது அழைப்பின்பேரில் தமிழ்சினிமாவிற்குக் காலடி வைத்தவர் கவிஞர். அப்படி அடியெடுத்து வைக்கிறபோது தம் சரக்கை அதில் எப்படி வைக்க வேண்டும் என்பதில் கவனங் கொண்டிருந்தார். மற்றவர்கள் எல்லாம் பரிசு–பாராட்டிற்கெனவும் பாடப்புத்தகங்களாக்கு வதற்கென்றும் எழுதிக் கொண்டிருந்த தருணத்தில் பாவேந்தர் மட்டும் மக்களுக்காக எழுதுவதையே திரைத்துறையின் நுழைவுப் பணியாகக் கொண்டார். பாவேந்தரின் வருகைக்கு முன்னர், சினிமாவில் வருங்கதாபாத்திரங்கள் தாம் நினைத்த பாஷைகளில் பாடுவார்கள். தமிழ்ப் படத்தில் தெலுங்குப்பாட்டு வரும். வட சொற்களை வாய்கிழியப் பேசுவார்கள். கதாநாயகனை ஒரு நேரம் காதலி, ஸ்வாமி என்று பக்தி ரசம் சொட்ட உணர்ச்சி பூர்வமாகப் பேசுவாள். நாம் சினிமாவுக்குத்தான் வந்தோமோ அல்லது கோயிலுக்கு வந்து விட்டோமா என்று திகைப் பேற்படும். மறுநேரம் "பிராணநாதா" என்பாள். நம்முடைய பிராணனை போய்விடும் போலத் தெரியும்.

## புராணப்படங்களுக்கா/பாடல்களுக்கா

பாவேந்தர் பகுத்தறிவு வாதி. மூடப்பழக்கங்களுக்கு முழு விடுதலை அளித்த குடும்பத்துக்காரர். அப்படிப்பட்ட சுயமரியாதைக்காரர், ராமானுஜம், காளமேகம், சுலோசனா, சுபத்ரா போன்ற புராண படங்களுக்கெனக் கதை, வசனம், பாடல்கள் எழுத முகங்காட்டலாமா என்கிற முனகல் பலரிடமிருந்தது. மற்றுஞ்சிலர் 'ராமானுஜர்' படத்தில் ஒன்றுமே தெரியவில்லை, புரியவுமில்லை என்று பாவேந்தரை எதிர்ப்பதற்குப் பதிலாக அவர் பங்காற்றிய படத்தை எதிர்த்தனர்.[8] கவிஞர் இவற்றுக்கெல்லாம் கவலைப்படாமல் எரிமலையாய்க் கனன்று கொண்டிருந்தார். சமூகச் சீர்திருத்த சிந்தனைகளைத் தமது உரையாடல்கள் – பாடல்கள் வழியாக அப்படங்களில் கொப்பளத்திருந்தார்.

## புதிய நகைச்சுவை - பாணி:

திரைப்படங்களில் குறள்காட்டும் நற்செய்தியை மேற்கோளிடுதல், தமிழினிமையை வெளிப்படுத்துதல், மூட நம்பிக்கையை எள்ளி நகையாடுதல், சாதி இனமத வேறுபாடுகளைக் களைதல், தனது குருநாதரின் மேற்கோளைத் தருதல் முதலியன பாவேந்தருக்குப் பிடித்தன. உடுமலையின் பாடல்கள்

கலைவாணரை உயர்த்தின. பாவேந்தரின் பாடல்களோ காளி என் ரத்தினத்தை உயர்த்தின. காளியால் தமிழ்ப்படங்களில் நகைச்சுவைக்குப் புதிய நளினம் புறப்பட்டது. சொல்லக் கூடாத விஷயத்தை (அறியாமை காரணமாக) சொல்லாமலேயே காட்டிக் கொடுத்துக் கலகலப்பை ஏற்படுத்தும் பாணியைக் காளி வழங்கப் பாவேந்தர் காரணமாயிருந்தார். அப்போது அப்பாவித்தனம் அருமையாகச் சிரிப்பாக்கப் பட்டிருந்தது.

ஹரிதாஸ் (1944) படத்தில் "மன்மத லீலையை வென்றார் உண்டோ" என்ற பாடலை M.K.T. பாகவதர் பாடியிருந்தார். படம் மூன்று தீபாவளி வரை ஒரே தியேட்டரில் வெற்றி முகாமிட்டது. 1947 இல் இந்தப்பாடலை "மம்மும் மீமையை மெம்மார் மும்மோ" என்றவாறு முழுப்பாடலையும் 1000 தலை வாங்கிய அபூர்வசிந்தாமணிக்காக காளியை முனகச் சொல்லிச் சிரிப்பாக்கியிருந்தார், பாவேந்தர்.

திராவிடர் கழகத்தில் அன்று பங்காற்றி சினிமாவைச் சீர்திருத்த விழைந்தார். மக்களின் சிறுமை களைந்து மேம்படுத்தத் தருணம் பார்த்துக் கொண்டே இருந்தார். அப்போது 'தீண்டாமை ஒழிப்பு' என்பதனை நாட்டின் படங்களும் சிறுகதைகளும் சொல்லி வந்தன.

B.S. ராமைய்யாவின் 'பதச்சோறு', புதுமைப்பித்தனின் 'புதிய நந்தன்' முதலிய கதைகள் பிரபலமாயின. காந்திஜியின் தமிழக வருகையும் 'தேச முன்னேற்றம்' சினிமாவில் 'விடுதலை விடுதலை' என்ற பாரதியின் கீதமும் பாவேந்தரைப் பாதித்தன. இச் சூழ்நிலையில்தான் ஸ்ரீ ராமானுஜர் (1938) படத்திற்கு பாடலெழுத வ.ரா. பாவேந்தரை வரச் சொன்னார்கள்.

தமிழ்நாடு உங்களை வாழ்த்தும், 'நான் பாக்யசாலி ஆவேன்' பாடல்களுக்குப் பை நிறைய பணமுண்டு என்றெழுதியிருந்தார் வ.ரா[9]. அக்கிரஹாரத்து அதிசய மனிதரான வ.ரா. வின் எழுத்தும் பாவேந்தரின் கவிதை ஏளனமும் இணைந்து மக்களுக்குச் சமூக விழிப்பைத் தூண்டிய படமாக 'ஸ்ரீ ராமானுஜர்' வீதிவலம் வந்தார். "குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்" "வர்ணங்கள் வேறுபட்டாலும் மானுடர் வேற்றுமை இல்லையே" என்ற தனது குருநாதரின் உயர் எண்ணங்களை இப்படத்தினுள் பக்குவமாக விதைத்திருந்தார்.

புராணப் படங்களுக்கென்று பாடல், வசனம் எழுதும்போது அவரது தமிழ்நடை, வடசொற் கலவாமல் தமிழினிமையைப் புலப்பட நின்றது. இவற்றால் தம் கொள்கைகளைப் பிரச்சாரப்படுத்துவதற்கு சினிமாவை ஒரு நுழைவாயிலாகப் பாவேந்தர் பயன்படுத்திக் கொண்டமை புலப்படும் சினிமாவிற்கும் சீரிய தமிழாக்கத்திற்கும் அவர் செய்தளித்த திருப்பணி அது.

## பிரெஞ்சு விருது

அவரது 'பொன்முடி' படத்தின் கேமரா மேன் விஜயனுக்குப் பிரெஞ்சு அரசாங்கம் விருது கொடுத்து கவுரவித்தது. ZOOM LENS கண்டுபிடிக்காத

காலத்திலேயே அண்மைக்காட்சியைச் சேய்மையிலிருந்து ஒரு கவிதை போலக் (நரசிம்ம பாரதி மாதுரி தேவியுடன் கட்டிப் பிடித்துருளுங் காட்சி) காண்பித்தார்.[10] பாவேந்தரின் கவிதைக்குக் காட்சி பெருமை சேர்த்தது

## ஆயத்த வேலை நின்ற படங்கள்

அம்பிகாபதி சினிமாவிற்குக் கதை, வசனம், பாடலெழுத ரூ.22,500க்குப் புரட்சிக்கவிஞர் ஒப்பந்தம் செய்யப்பட்டார். ரூ,2,500 திருமன்னர்மன்னன் மூலமாக முன்பணம் வந்தது.[11]

## ஒட்டக்கூத்தரா அப்படி

'ஒட்டக்கூத்தர் சூழ்ச்சியாளர்' என்பதாகவும் படத்தில் தேவையில்லாத இடமொன்றில் முருகப் பெருமானின் வருகை இடம் பெற வேண்டும் மென்று வற்புறுத்தியதாலும் சின்ன அண்ணாமலையின் சிண்டு முடிப்பாலும் – திரைக்கதையை என்னால் திரித்தெழுத முடியாதென்றார் பாவேந்தர். சரியான மரியாதை கிடைக்கவில்லை என்பதனை உணர்ந்தபின், படத்தின் பங்களிப்பிலிருந்து பாவேந்தர் விலகினார். என் பாட்டு எவனுக்கும் பாய் விரிக்காது. நான் கண்ணகி மாதிரி என்றாவேசப்பட்டார் .[12]

## கமழாதா?

'வளையாபதி' (1952) படத்தின் சில வசனவரிகளை மாற்றி விட்டால் நாற்பதினாயிரம் பெறுமதியுடைய ஒப்பந்தத்தை அவர் உதறித்தள்ளினார். 'கமழ்ந்திடும்' என்ற சொல்லை K.L.வசந்தகுமாரிக்கு உச்சரிக்க வராத காரணத்தாலும் அச்சொல் பாமரனுக்குப் புரியாத இலக்கிய வாடையுடைதாலும் மாற்றம் வேண்டி, டைரக்டர் ராம்நாத் வழியாகத் தீர்மானித்தார் தயாரிப்பாளர் T.R.சுந்தரம். அதற்குப் பாவேந்தர் சினந்தார். நடிக்கிற ஆளமாத்து இல்லேன்னா 'ரிக்கார்டிங் மிஷின மாத்து' என்றார். பிரியாணி கமகம வென்றிருக்கிற தென்றால் யாருக்கு விளங்காது. கமழ்ந்திடும் என்ற சொல்லை மாத்த முடியாது என்று வெகுண்டார். அவர்கள் நினைத்தவாறெல்லாம் என்னால் எழுதமுடியாது என்றவர் பாவேந்தர். இக்கருத்தினைத்தான் அப்துல்ரகுமான் போன்ற கவிஞர்கள் பின்னாளில் சினிமாவுக்குப் பாட்டெழுத முடியாமைக்கு "நான் சிற்பி என்னால் அம்மி கொத்த முடியாது" என்பதாகப் புதுக்கினார்கள்.

## யாவரும் அஞ்சினார்:

வசனங்களையோ, பாடல்களையோ, பாவேந்தரது பரிந்துரை இல்லாமல் மாற்றுவதற்குப் பெரிய நிறுவனங்களே அஞ்சின. ஆனால் அதே நேரத்தில் அனுமதி பெற்று ஜலகண்ட புரம் கண்ணன் வழியாக வசனமாற்றம் நிகழ்ந்ததை நூலொன்று கூறியுள்ளது.[13]

பாவேந்தர் பங்காற்றிய T.R. சுந்தரத்தின் படமொன்றில், பி.யு. சின்னப்பா ஒத்துழைப்பு நல்காதிருந்தார். மதுமயக்கமே அதற்கான காரணம், இந்திரஜித் வேடத்தில் பியுசி. நடிக்காததைக் கேள்வியுற்ற... TRS தாமே அந்த வேடத்தில் நடிக்க முனைந்தார். அப்போது "இவன் வாளைத் தங்களின் தாளில் படைக்கிறேன்" என்ற வசனத்தை வெளிநாட்டில் படித்த டி.ஆர் சுந்தரத்தால் பேச முடியவில்லை. வேண்டி கேட்டுக் கொண்டதற்கிணங்க, 'தங்களின் அடியில் இவன் முடியைப் படைக்கின்றேன்' – என்று மாற்றச் சம்மதித்தார், பாவேந்தர்[14] ஆக தவறு கண்ட இடத்து யாரையும் சினந்தார். 'எவனா இருந்தா எனக்கென்ன' என்றார்.

## பிள்ளை, அழக்கூடாது :

கவிஞரின் இலக்கியப் படைப்பான "எதிர்பாராத முத்தம்" T.R.S. அவர்கட்கு மிகவும் பிடித்திருந்தது. கலைவாணருக்காக ஏற்கனவே இதனை நாடகமாக்கித் தந்திருந்தார் பாவேந்தர்.[15]

1950 இல் அதனை அமெரிக்க டைரக்டர் 'டங்கன்' மூலமாக மாடர்ன் தியேட்டர்ஸார் 'பொன்முடி' என்ற சினிமாவாக ஆக்கினர். படத்தில் நரசிம்ம பாரதியும், மாதுரி தேவியும் நடித்திருந்தனர். 15 ஆண்டுகள் தமிழகத்தில் இருந்த போதும் டங்கனுக்குத் தமிழ் பேச வராதது தர்மசங்கடமாக இருந்தது. படத்தில் ஒரு பாடல் "பாலாமணியின் வாதையெல்லாம்" என்றிருந்தது. அப்பாடலில் எதுகை சரியில்லை, விருத்தமும் வரவில்லை. 'கவிதைக் கொலை செய்து விட்டார்' என்று அரியூர் பத்மநாப பிள்ளை பிரச்சினை ஆக்கியிருந்தார்.[16] டைரக்டர் டங்கன் சங்கடப்பட்டார். அந்தப் பாடல் விருத்தமே இல்லை, பிள்ளை அழுது வருத்தப்படவே வேண்டாமென்று பதிலடி தந்தார் பாவேந்தர்.

பாவேந்தருக்கு யாரையும் தட்டிக் கேட்கும் இத்துணிவு மகாகவியால் ஏற்பட்டது. முன்னர்க் கூறிய "எதிர்பாராத முத்தம்" கதையில் பூங்கோதையைப் பொன்முடி திருமணஞ் செய்ததாகப் புரட்சிக்கவிஞர் அமைத்திடவில்லை. தமிழ் மக்கள் இப்படியிருந்தால் கதையை ரசிக்கமாட்டாங்கன்னு சுந்தரம் மாத்திப்புட்டான்" என்று பாவேந்தர் கோபங்கொண்டார். இது மாதிரியான சூழல்களால்தான் பாழ்படுத்தும் முதலாளி வர்க்கத்தின் செயலால் படக்கலையாம் சனியொழிந்தால் போதும்" என்று கவிஞர் வெகுண்டிருக்க வேண்டும்.

## நினைப்பு பொழப்ப கெடுத்தது :

இமயமலையின் நிமிர்வும் ஒரு லட்சம் பேருக்கு இருந்த பலமும் அவருக்கு என்றுமே இருந்தது. எனவேதான் தனது வாழ்வின் திருப்புமுனையாக விளங்கிய பாரதியின் வாழ்க்கை வரலாற்றைச் சினிமாவாக எடுக்க விழைந்தார்.

14–10–1960இல் பாரதிதாசன் பிக்சர்ஸ் தொடங்கப் பெற்றது.[17] காந்தியின் வாழ்க்கை வரலாற்றைச் சினிமாவாக்கிய AK செட்டியாருடன் தொடர்பு கொண்டார். பாரதி வேடத்திற்கென்று S.S. மாரிசாமி தேர்வு செய்யப்பட்டார். "மத்திய அரசின்

நிதி உதவியை வாங்கித் தருவதாக அமைச்சர் கோபால்ரெட்டி சொல்லியிருக்கிறான்" என்று பாவேந்தர் ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார்.[18] இருப்பினும் பாகஸ்தர்களிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டதால் திட்டம் கைவிடப்பட்டது. அதுபோலவே 'பாண்டியன் பரிசு' என்னும் தமது படைப்பைப் படமாக்கச் சென்னைக்குக் குடிபுகுந்தார் கவிஞர்.

"துன்பத்துக்குரிய நடிப்புக் கட்டங்கள் எத்தனை உண்டோ அத்தனையிலும் வாகை சூடுகின்றான் அந்தப்பையன்" என்று சிவாஜியை படத்திற்கெனத் தேர்வு செய்தார், பாவேந்தர். "அதுவே புரட்சிக்கவிஞருக்கு மாபெரும் துன்பத்தைத்தந்தது" என்று மன்னர் மன்னன் வருத்தப்படுகிறார். 70ஆம் வயதில் என்னென்னவோ பாவேந்தர் முயற்சித்தும் படப்பணி தடைபட்டது.

### பக்காத்திருடனும் வேலின் வெற்றியும்:

பெரியாரது இல்லத்தில் தங்கித் தனது முதற்படமான பாலாமணி அல்லது பக்காத் திருடன் படத்திற்கென உழைத்தார். பாவேந்தர் தனது கடைசிப் படமாகப் 'பாண்டியன் பரிசு' வண்ணப்படத்துவக்க விழாவிற்கு முதலமைச்சர் காமராஜர் வந்திருந்து சிறப்பு செய்தார்.[19] இப்படத்திற்கு முன் 'வேலின் வெற்றி' என்ற படத்தை வள்ளுவர் ஓவியம் வரைந்த வேணுகோபால் சர்மாவை வைத்து நடிக்கச் செய்தார். புரட்சிக் கவிஞரது பக்திப்பாக்களுக்குப் பிரபல 'மாரியப்பா' என்னும் பாடகர் பயந்து கொண்டே பாடினார்.

பாவேந்தர் காலத்துப் பாடலாசிரியர்கள், "குடில்குந்தள குவல தள நீல கோபாலா" என்றவாறு பாடலியற்றித் தமிழக மக்களைப் பயமுறுத்தினர். நமது மாநிலத்தின் மொழி தமிழ்தானா என்பதை வியக்க வைத்தனர். அத்தகைய பாடல்களில் வடமொழி ஆதிக்கம் தாராள மயமாக்கப்பட்டிருந்தது.

தமிழில் தேவ கானம்:

"ஸத் ஸித்தே ஜகமே மல்க
சிரே சதா மேலாக
பொய்யே திரமிலை யாகின்
நிஜமே சதா மேலாக"

– என்றவாறு பாடல்களில் தமிழ்ச் சொற்கள் தப்பித்தவறி 'பாவமாக' இடம் பெற்றிருந்தன. அப்போதுதான் பாவேந்தர் பாமரத்தமிழில் கவிதை வனப்பை இணைத்துத்

**"தங்கமலை கண்டேன்**
**தடந்தோளும் கண்டேன்** – (பணம்)

**"ஆடிடும் மயில் மிசை ஏறிடும் முருகா**
**ஆதரவாகிட வா அரி முருகா**
**கூவுதல் காதினில் கேளாதோ"** – (காளமேகம்)

**"பரமன் அருளைப் பெறும் மார்க்கமா - அவன்**
**படைத்த பெண்ணை வெறுத்தல் ஞாயமா"**
– கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி

– என அமைத்திருந்தார். இப்பாடல்கள் சீர்திருத்தவாதிகட்கெல்லாம் தேவகீதமாக இனித்தன. 'வடக்கு' வாழ்ந்தபோது "தெற்கேன்" தேய்கிறது என்பதைக் கண்டுணர்ந்து 1937இல் 'கவிரத்தின காளிதாஸ்' வடக்கில் வந்தபோது தெற்கத்திய காளமேகம் (1938) வெளிவரக் காரணமானார்.

**பசி என்று வந்தால் ஒருபிடிசோறு**
**புசி என்று தந்து பாருப்பா**
**அறத்தாலே வருவது இன்பமப்பா - பாரில்**
**அதுவல்லாமலே பிறவெல்லாம் துன்பமப்பா"**

என்றெழுதித் தமிழின் இனிமையுடன் மானுட நேயத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். சமூகத்தின் அடித்தட்டு மக்களுக்கு அது தேசிய கீதமாகத் தெரிந்தது.

**"பாடலிலே புதுப்பாங்கும் புதுக்கருத்தும்**
**பல்பொருளின் நல்லழகும் உயர்வும் இந்த**
**நாடு பெறமுடியாது தன்னில் ஊறும்**
**நல்லூற்றுக் கவிஞர்களும் தோன்றமாட்டா"**

என்பது பாவேந்தரின் பரிசுத்தமான வாக்கு. இவ்வாறாகத் தமிழின் தகைமையைப் பண்டித நடையிலிருந்து, பக்த ஜனங்களுக்கும் பகுத்தறிவு வாதிகளுக்கும், பாமரனுக்கும் காதலர்களுக்கும் குழைத்துக் காண்பித்துப் புதுமைக்கு வழிவகுத்தார்.

**சக கவிஞர்கள் :**

பாவேந்தருக்கு மகாகவியின் பாதிப்புப் பலநிலைகளிற் றைத்தாற்போல சினிமாவுலகில் பாவேந்தருக்குப்பின் வந்த திரைப்படக் கவிஞர்களை, அவர் பெரிதும் பாதிக்கச் செய்தார். தன் சமகாலத்துக் கவிஞர்களின் மீது தனிப்பட்ட அக்கறையும் பொறாமை இன்மையும் அவரிடம் தஞ்சமடைந்திருந்தன. பாட்டு ஒன்றுக்கு 50ரூ. தருகிறானே; தமிழுக்கு நல்ல காலம் என்று மனந்திறந்து பாராட்டினார்.[21]

கவிஞருக்கு மகிழ்ந்து அளித்தவராக உடுமலை நாராயணகவி தெரியப்பட்டார் பட்டுக்கோட்டையைப் பாட்டுக்கோட்டையாக அறிமுகப் படுத்தினார். அதனால் 'பாரதிதாசன் வாழ்க' என்றெழுதிய பிறகே பட்டுக்கோட்டை திரைப்பாடல் எழுதுவாராம்.[22] ஒரு கனி மரத்துக்கு நல்ல நிலமும் உரமும் கிடைச்சா அதற்குச் சுவையே தனி; இந்த பையன் நல்ல வளருவான்" என்று கவிராயரை உள்ளப் பூர்வமாகப் பாராட்டினார். அதுபோலவே கவியரசர் கண்ணதாசன் மீதும்

பாவேந்தரது கருணை பகைமை பாராட்டாமல் இருந்தது. ஒரு முறை பாவேந்தர் நடத்திய குயில் பத்திரிக்கையைத் தாக்குவது போலக் "குரல் கெட்ட குயிலே கேள்" என்று கண்ணதாசன் எழுதப்போக, பாவேந்தரின் அனுதாபிகள் கவியரசரை வெவ்வேறு வகைக்காக வழக்கு மன்றத்திற்கு இழுக்க, ஐயா... "என்னைக் காப்பாத்துங்க... விஷயம் வில்லங்கமாகி விட்டது". என்று பாவேந்தரிடம் கவியரசர் கதற, எம்.ஆர். ராதாவைப் பாவேந்தர் அழைத்துச் சமாதானம் செய்யச் சொல்ல, ஒரு வழியாகக் கண்ணதாசனைக் காப்பாற்றினார் என்றறிய முடிகிறது.

### கவிஞர்கள்

பாபநாசம் சிவன், கே.டி. சந்தானம். கவி.காமு. ஷெரிப், கொத்தமங்கலம் சுப்பு, கே.பி. காமாட்சி, கலைஞர், கு.மா. பாலசுப்ரமணியன், அண்ணல் தங்கோ ஆகியோர்களுடன் அனுசரனையோடு இணைந்து சினிமாவுக்குப் பாட்டெழுதினார்.

### கதை

பாவேந்தரின் படங்களில் கதை, நன்கு பின்னப்பட்டிருக்கும். தமிழப்படங்களில் ஒளிப்பதிவு, இசை, வசனம், பாடல், விஞ்ஞானத் தொழில் நுட்பம் போன்றவை சிறந்து விளங்கின. இல்லாத ஒன்று கதையம்சமே. இன்று கதைகோப்பில்லாத சாதாரணச் சம்பவத்தை மட்டும் வைத்துக் கொண்டு சினிமா தற்போது பவனி வருகிறது. ஜனாதிபதி விருதும் அதற்குத்தான் கிடைக்கிறது.

### கிளைக்கதைகளின் ஒருமிப்பு:

கவிஞரின் 1000 தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி என்ற சினிமா 1947–இல் வந்தபோது பல்வேறு கதைமுடிச்சுகளின் தொடர்ச்சியை அதில் காண முடிந்தது. கதையமைப்பில் வேறெந்தச் சினிமாவைக் காட்டிலும் இது சாலச் சிறந்தது. அரியகிளைக் கதைகளை ஒருங்கிணைத்துத் தொடர்பு அறாமல் 22000 அடிக்கு 4 1/4 மணிநேரம் இயங்கும்படி அப்படத்தை அமைத்தார்.[23]

### சிறந்த கதை:

"மாடர்ன் தியேட்டர்ஸ்" உருவாக்கத்தில் வெளிவந்த நூறுபடங்களுன் நினைவில் நிற்கத் தகுந்த படங்கள் இரண்டு. ஒன்று 'அலிபாவும் 40 திருடர்களும்' மற்றொன்று 'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி'. தமிழின் முதல் வண்ணப் படமென்பதால் 'அலிபாபா... சிறப்புற்றது' 1000 தலைவாங்கிய அபூர்வசிந்தாமணி படம் எடுப்பது பற்றி இன்று சிந்தித்துப் பார்ப்பது கூட சுலபமான தல்ல என்று மாடர்ன் தியேட்டர்ஸார் கூறுவது உண்மையே.

### கதைப்பொருள்:

பாவேந்தர் தமது சினிமா என்னும் காவியத்திற்குள் வருகிற கதையைக் காதை போல நீள விளக்கிச் சம்பவங்களின் திரட்சியாக வளைத்தார். காதலின்

மேன்மை, புராண இதிகாசங்களின் பழைமையைச் சாடுதல், சாதி, சமய, மறுப்புகளைச் சாடுதல், தமிழினினிமையைப் புகழ்வதுடன் செயற்கரிய செய்தவர்களின் நலனை வெளிப்படுத்துதல், போன்றன அவரது கதை நிகழ்வுகளாயின.

## இடைவேளை இல்லாமல்:

1950 இல் வெளிவந்த 'பொன்முடி'யைக்காண திரையரங்கிற்கு நண்பர்கள் புடை சூழப் பாவேந்தர் சென்றிருந்தார். 2 1/2 மணிநேரம் இடைவெளி இல்லாமல் விறுவிறுப்பாய் ஓடிக் கொண்டிருந்தது. அச்சினிமா[25] மகாபலிபுரக் காதற்காட்சியிலும், காளி என் ரத்தினத்தின் பேதைமை மிகுந்த நவரசத்திலும் எங்களால் படத்தை ரசித்துப்பார்க்க முடியாத அளவிற்கு ரசிகர்களின் ஆரவாரம் விண்ணைப் பிளந்தது என்கிறார் பாவேந்தர். இதன்மூலம் படத்தின் விமர்சனத்தைப் படைப்பாளி நேரடியாய் அறிதல் வேண்டும் என்பதில் அவரது ஆர்வம் சென்றமையை அறியலாம்.

## எழுத்துப்பகுதி: (Title card)

பெரிய நிறுவனங்கள் அன்றும், இன்றும் கதையை ஒருவரிடமிருந்து எழுதி வாங்கிக் கொண்டு எழுத்தாளனின் உரிமையைக் கற்பழித்து வருகின்றன. ஜெமினிகதை இலாகா, மாடர்ன் தியேட்டர்ஸ் கதை இலாக்கா, தேவர்கதை இலாக்கா, ஏவி.எம். கதை இலாக்கா என்பவை அன்று அதிகாரப்பூர்வமாகப் பவனி வந்தன.

புதுமைப்பித்தன், ஜெமினிகதை இலாக்காவில் அங்கம் வகித்தார். கதை இலாக்கா போலவே சங்கீத குழுக்களையும் படநிறுவனங்களே இயக்கின. ஜெமினி "மியுசிக் பார்ட்டி" யே ஆரம்ப காலப்படத்தில் இசையமைத்தது. இவற்றிலிருந்து தனி ஒருவரின் திறமைகள் முடக்கி வைக்கப்பட்டிருந்தமை புலனாகும்.

கதை, சங்கீதம், என்ற துறைகளுக்கு மட்டுமல்ல, மேற்சொன்னவிதி, பாடலுக்கும் அது பொருந்தும், "பாட்டும் நானே, பாவமும் நானே" என்ற திரையிசைப் பாடலைக் கவி, காமு, ஷெரிப் எழுத 'கண்ணதாசன் பெயரில்' அது உலவியதைப் நாம் மறந்திருக்க முடியாது.26

'அபிமன்யூ', 'ராஜ குமாரி' என்ற திரைப்படங்களுக்குக் கலைஞர் வசனமெழுத ASA.சாமி என்ற பிரபலத்தின் பெயரால் அன்று அவை வெளிவந்ததன. கதாசிரியர் விந்தன் பெயரில் 'அன்பு அலுறுகிறது' என்னுஞ் சிறுகதையை ஜெயகாந்தன் அன்றெழுதித்தந்தார்.[27] இன்றைய பிரபலங்கள் அன்றைய சாதாரணங்களாக இருந்தபோது அவர்களுக்கேற்பட்ட அனுபவங்கள் இவை.

ஆகவே 'வளையாபதி' படத்தில் பாவேந்தரது பெயரில்லை "சுலோசனா" விலும் அப்படித்தான், அப்போது, வசனகர்த்தாவின் பெயரை உடனடியாக எழுத்துப் பகுதியில் காட்ட வேண்டும் என்பதில் கவனஞ்செலுத்தினார். மூலக்கதை

யாருடையது என்பதனையும் படத்தின் எழுத்துப் பகுதியுள் வெளியிடச் செய்தார், அவர். இப்பாதிப்பால் தான் நாற்பதுகளின் இறுதியிலும் ஐம்பதுகளின் ஆரம்பத்திலும் வந்த பாட்டுப்புத்தக படத்தலைப்பிற்குக் கீழே "புரட்சிக் கவிஞரின் பாடல்" பாண்டியன் சொல்லை என்ற விக்ரமாதித்தன் பெரிய எழுத்தில் பிரசுரிக்கப்பட்டது. அதன் பிறகே பாடலாசிரியர்கட்கு ஒரு கௌரவம் ஏற்பட்டது. இது பாவேந்தர் சினிமா உலகிற்குச் செய்த முன்மாதிரியான முக்கியமான தொண்டாகும்.

தன் குருநாதருக்குக் கூட நான்கைந்து மாதம் வரைக்கும் சில பதங்கள் கவிதை எழுதும்போது வாராமல் இருந்தன.[29] ஆனால் பாவேந்தருக்கு அப்படி அல்ல. வார்த்தைகளுக்காக அவர் காத்திருந்தது கிடையாது. அதனால்தான் பி.ஸ்ரீ. என்னும் அறிஞர் பாவேந்தரை, 'குருவை மிஞ்சிய சிஷ்யர்' என்று போற்றியிருக்க வேண்டும். ஐந்தே நிமிடத்தில் பாட்டுக்கட்டுவார். எதுகை மோனையைவிட என்ன சொல்லப் போகிறோம் என்பதில் கவனம் வைத்தவர் பாவேந்தர்.

"சினிமா பாட்டு மனதிலே பதியாம செவியிலே பதிஞ்சா போதுமா? பாட்லே என்ன சொன்னே"[30] என்ற வாசகம், பாவேந்தர் 50 ஆண்டுகட்கு முன்னர்க் கேட்டது. இத்திருவாசகத்தைத் தற்காலக் கவிஞர்கள் பலபேர், மறந்துவிட்டனர். எனவேதான், சினிமாப் பாட்டுக்குக் கிளுகிளுப்பு அதிமாகியது; மரியாதை மறைய ஆரம்பித்தது.

முக்கால் நூற்றாண்டு வாழ்ந்த பாவேந்தர், முக்கல் முனகலுக்குரிய பாடல்களை எழுதவில்லை

பாவேந்தர், பாட்டெழுத வந்தால் அவருக்கு முன்னே யாரும் லாகிரி வஸ்துகளைப் புகைக்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல; அவரும்[31] புகைக்காதிருப்பார். அதனால்தான் ஆரம்பகாலச் சினிமா அவரைத் தலை வணங்கி மரியாதை செய்தது. இங்ஙனமாகத் தமிழ்ச் சொற்களுக்கும் தரம்தாழா பகுத்தறிவு உணர்வுகளுக்கும் தமிழ் சினிமாவுள் பட்டுக்கம்பளம் விரித்த முதற்பாவலர் பாவேந்தர் ஒருவர்தான் என்ற முடிவுக்கு வரலாம்.

**எண் விளக்கம் :**

1. கோவேந்தன், என் நினைவுகளில் பாவேந்தர், பகுதி–1
2. பாரதிதாசன் பாடல்கள் திரட்டு நூல்,1936.
3. பாரதிதாசன், எது இசை, ப.6
4. 150 இசைத் தட்டுகள் + 600 பாடல்கள் = பாஸ்கரதாஸ்
5. 55 இசைத் தட்டுகள் + 186 பாடல்கள் = பாபநாசம் சிவன்
6. 320 படங்கள் + 3,500 பாடல்கள் = மருதகாசி
7. டி.கே. சண்முகம், எனது நாடக வாழ்க்கை, பக்.5
8. தினமலர், தீபாவளி மலர், பக்.495, 1998
9. அறந்தை நாரயணன், சுதந்திரப் போரில் தமிழ் சினிமா, பக்.94
10. புதிய பார்வை, இதழ் கிரிஜா, பக்.1, ஆகஸ்ட், 95.

11. நேர்முகப்பேட்டி, புதுவை, நாள் 23–7–99.
12. கோவேந்தன், என் நினைவுகளில் பாவேந்தர், முதல் பகுதி, பக் 24, 42
13. க.திருநாவுக்கரசு, திராவிட இயக்கமும், திரைப்படப் பாடல்களும், பக் 90.
14. நகரதூதன், பத்திரிக்கை, நாள் 9–9–1937
15. பேட்டி 23–1–99
16. பாரதிதாசன், சிரிக்கும் சிந்தனைகள், ப. 13
17. மு.சாயபு மரைக்காயர், பாரதிதாசன் வாழ்வினிலே, பக்.127
18. கோவேந்தன், முதல் தொகுதி, ப.41, பக்.224
19. மேலது., பக். 169
20. மேலது., பக். 62
21. கோவேந்தன், மேலது., பக்.71
22. முருகுசுந்தரம், மேலது., பக்.26
23. கோவேந்தன், மேலது., பக்.11
24. அறந்தை நாராயணன், தமிழ் சினிமாவின் கதை, பக். 547
25. கோவேந்தன், மேலது, பக்.11
26. சண்முகசுந்தரம், வைரமுத்து வரை, பக்.94
27. ஜெயகாந்தன், ஒரு இலக்கிய வாதியின் கலை உலக அனுபவங்கள், பக். 69
28. முருகுசுந்தரம், மேலது பக். 69
29. மேலது, பக். 19
30. கோவேந்தன், மேலது, 93
31. மேலது, பக். 71

# 6. பாரதிதாசன் படைப்புகளில் நிலவு

ச.கண்மணி

## முன்னுரை

பாரதிதாசன் தன் படைப்புகளில் கையாளும் நிலவுடன் தொடர்புபடுத்தும் நுண்பொருட்களைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். பாரதிதாசன் படைத்துள்ள கவிதைகளும், நாடகங்களும், இக்கட்டுரைக்குரிய ஆய்வெல்லையுள் அடங்கும். நிலவின் துணையுடன் அவர் தோற்றுவிக்கும் உவமைகளையும், உருவகங்களையும், படிமங்களையும் தொகுத்து அவற்றின் அடிப்படையில் குறியீடு அமையும் திறத்தைப் புலப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது. பாரதிதாசன் படைப்புகளில் உள்ள 'நிலவு' தொடர்பான குறிப்புகள் முதல்நிலைத் தரவுகளாக அமைகின்றன. இருபதாம் நூற்றாண்டுத் திறனாய்வாளர் கருத்துகள் இரண்டாம் நிலைத் தரவுகளாக அமைகின்றன.

அறிவு, முயற்சி, அறம், திறமை, புரட்சி, அழகு முதலிய நுண்பொருட்களையெல்லாம் நிலவுடன் தொடர்புபடுத்திப் பாடுகிறார் பாரதிதாசன்.

## அறிவும் நிலவும்

மூத்தோர் மொழியும் அறிவுரை, குழந்தையின் வளரும் அறிவு, பகுத்தறிவு, பெண்ணின் கல்வியறிவு, தமிழறிவு என அறிவின் பல்வேறு திறங்களையும் நிலவுடன் தொடர்புபடுத்துகிறார்.

பாரதத்துடன் சீனா மாறுபட்டுப் போர் நிகழ்த்திய காலத்தில் அத்தேசத்திற்கு அறிவுறுத்துவதாக எழுதிய பாடல்

**"சென்றதடா அமைதி நோக்கி உலகம் - அட**
**சீனாக்காரா ஏண்டா இந்தக் கலகம்?**
**நன்றாக நீ திருந்த வேண்டும்**
**ஞாலம் உன்னை மதிக்க வேண்டும்**
**ஒன்றாய்ச் சேர்ந்து வாழ வேண்டும்..."** என்று

மேலும் தொடர்கிறது. இப்பாடலின் உள்ளே நிலவு பற்றிய குறிப்பே இல்லை. ஆனால் பாடலின் தலைப்பு "நிலாக்கிழவி கூறுகிறாள்" என்று அமைந்துள்ளது.[1] பாடற்பொருளுக்கும் தலைப்பிற்கும் உள்ள தொடர்பு என்ன என்று ஆராயும்போது வையத்து மூத்தோர் இடத்துரைக்கும் அறிவுரையை நிலவு கூறுவதாகப் புனைந்துள்ளமை புரிகிறது. வையத்தில் மூத்த பொருட்களாகப் பிற பல இருப்பினும்; நிலவைத் தேர்ந்தெடுத்து அதற்குக் கிழவி என்ற முத்திரையும் குத்திப் புதுமையான போக்கில் பாரதிதாசன் பாடியுள்ளார். தலைப்பின் அடியில் காஞ்சித்திணை என்ற குறிப்பும் உள்ளது. முதுமொழிக்காஞ்சித் துறை சார்ந்த அறிவுரையையும், நிலவையும் பின்னிப் பிணைத்துப் படிமமாக்கும் திறன் தெளிவாகிறது. 'நிலாக்கிழவி

கூறுகிறாள்' என்ற தலைப்பின் மூலம்; அறிவுரை கூறும் தகுதி தொன்மையான பொருளாகிய நிலவுக்கு உண்டு என்னும் அவரது கொள்கை விளக்கம் பெறுகிறது. "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்னும் தமிழ்மொழியை இத்தலைப்பும் பாடலும் நினைவூட்டுகின்றன. "அமிழ்து எது ?" என்ற கவிதையில்

"'திங்கள் அமிழ்து"[2] என்று பாடியிருப்பதை இவ்விடத்தில் ஒருங்கு வைத்து நோக்குவது தகுதிப்பாடுடையது. இக்கவிதைத் தொடர் மூத்தோர் மொழியும் அறிவுரை என்னும் படிமப் பொருளைத் தருகிறது.

செங்கதிரும் இளம்பிறையும் உரையாடுகின்றனர். கதிரவனிலிருந்து நிலவு ஒளிபெறுகிறது என்ற இயற்கை உண்மையை அடியொட்டிச் செங்கதிர் மூலம் இளங்கதிர் தென் அறிவைப் பெருக்கிக் கொள்வதாக இக்கவிதைக் கற்பனை அமைகிறது. அத்துடன் இளம்பிறையைப் பெயருக்கேற்ப வயதில் சிறிய குழந்தை யாகவும், பட்டறிவினால் எதையும் புரிந்துகொள்ளும் திறன் வாய்ந்ததாகவும் காட்டுகிறார் பாரதிதாசன். உரையாடல் போக்கில் அமைகிறது கவிதை.

**செங்கதிர்: வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்தால்**
**என்ன போட்டுக் குடிப்பாய்?**
**இளம்பிறை: வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்தால்**
**விரலைப் போட்டுக் குடிப்பேன்.**
**செங்கதிர்: வெந்நீர் ஊற்றிச் செம்பில் வைத்தால்**
**விரலைப் போடுவானேன்?**
**இளம்பிறை: வெந்நீரிலே விரலைப் போட்டால்**
**வெப்பநிலை தெரியும்"...**[3]

இப்படி அறிவுபூர்வமாகப் பதிலளிக்கும் குழந்தைக்கு நிலவின் பெயரை வைத்திருக்கிறார். இதன்மூலம் வளரும் அறிவையும் வளரும் நிலவையும் தொடர்புறுத்துகிறார். எனவே இளம்பிறை என்ற பெயர் அறிவைச் சுட்டும் படிமம் ஆகிறது.

ஈ.வே. இராமசாமிப் பெரியாரின் அழகு முகத்தைப்போல நிலவு அமுதைப் பொழிந்தது என்று இளவேனிற்கால நிலவைப் பற்றிப் பாடுகிறார்.

**"மலை பொழிந்து தெளிந்த வானில் மதி எழுந்தது**
**அழகுப் பெரியார் முகத்தைப் போல அமுதைப் பொழிந்தது"**[4]

பெரியார் முகத்தின் அழகையும், நிலவின் அமுதையும் ஒப்பிடுவதால் அழகும் அமுதும் எது என்ற சிந்தனை எழுகிறது.

**"விலகட்டும் அறியாமை**
**என முன் நிற்கும்**
**பெரியாராய் வெண்ணிலவு**
**விரிவான் தோன்றும்"**[5]

என்று இன்னொரு பாடலில் அவர் பாடியிருப்பதை நோக்க; பெரியாரின்

பகுத்தறிவுக் கொள்கையே அவரது ஆளுமையை மேம்படுத்தி அவரது முகத்திற்கு அழகூட்டுகிறது என்ற பாரதிதாசனின் எண்ணம் புலப்படுகிறது.

**"................தூய பெரியார் முகமென**
**அக்கரைக்கண் தோன்றிடும் அழகுநிலவில் இறங்குவாய்"[6]**

என நிலவில் தமிழ்ப்பெண் இறங்கவேண்டும் என்ற ஆவலை வெளியிடும் போதும்; பெரியாரின் முகம் தூய்மையானது என்றும் அத்தூய முகத்தைப்போல நிலவு உள்ளது என்றும் வருணிக்கிறார். நிலவின் ஒளியும் குளிர்ச்சியுமாகிய அமுதும் அதன் வெண்ணிறமும் பாரதிதாசன் மனத்தில் பகுத்தறிவுக் கொள்கையின் மேன்மையையும், தூய்மையையும் நினைவூட்டுகின்றன. இதனால் நிலவு பற்றிய உவமையும், உருவகங்களும் பகுத்தறிவு என்னும் நுண்பொருளைச் சுட்டும் படிமங்களாகின்றன.

ஒருபெண் பள்ளிக்குச் சென்று கல்வியறிவு பெறுகிறாள். அவள்மேல் விருப்பம் கொண்ட ஆடவன் அவளைப் பார்த்துச் சிரிக்க அவள் பதிலுக்குச் சிரிக்கிறாள். அந்தச் சிரிப்பை அவள் கொண்ட காதலுக்கு அடையாளம் என அவன் தவறாக எண்ணிவிடுகிறான். தன் விருப்பத்தை அவளிடம் வெளிப்படுத்துகிறான். அது கேட்ட அப்பெண் படித்துப் படிப்படியாய் முன்னேற வேண்டும் என்ற தன் இலட்சியத்தைக் கூறி அவன் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுகிறாள். தன் நண்பரிடம் இந்த நிகழ்ச்சி பற்றி,

**"நான் நகைக்கத் தானும் நகைத்தாள் அதனாலே**
**வான நிலவும் மனமொத்துப் போனாள்"[7]** – எனப் புலம்பியவனுக்கு அவன் பதில் கூறி விளக்குகிறான். பாரதிதாசன் தன் கொள்கையை அந்நண்பனின் வாய்மொழியாகக் கூறிப் புரிய வைக்கிறார். அவ்விளக்கத்தில் அப்பெண்ணை நிலவு என உருவகப்படுத்தும் காரணம் தெற்றென விளங்குகிறது. அவள் பெற்ற கல்வி அவளது மனத்தை இரும்பாக்குகிறது. பண்பாடு மிக்கவளாதலால் எல்லாரும் அண்ணன்மார் என்ற கொள்கையில் அவள் அவனிடம் பேசிச் சிரித்திருக்கிறாள். முற்றிய கல்வி முயற்சியில் ஈடுபடும் அவளை அன்னை என்று எண்ணவேண்டும் என்கிறார். கல்வியறிவு பெற்று முன்னேறும் பெண்ணாதலால் அவளை வானநிலவு என்று கவிஞர்மனம் உருவகித்து உள்ளது.

பள்ளிக்குச் செல்லும் புள்ளிமானாகிய அப்பெண்ணைக் கன்றாத் தமிழ்க் கன்றின்கீழ்க்கன்று எனவும் உருவகிக்கிறார். வான நிலவு என வருணித்த அவள் தமிழ்க் கல்வி பெறுகிறாள் என்பதையே இங்ஙனம் குறிப்பாகச் சுட்டுகிறார். இன்பத்தமிழைப் பற்றிப் பாடும்போது, "தமிழுக்கு நிலவென்று பேர்"[8] என்பதால் தமிழறிவையும் நிலவுடன் தொடர்புபடுத்தல் தெளிவு.

## முயற்சியும் நிலவும்:

பாண்டித்துரைத் தேவரைப் பற்றிப் பாடும் பாரதிதாசன் அவர் நான்காம் தமிழ்ச்சங்கம் நிறுவிய சாதனையைப் பற்றி விரித்துரைக்கிறார்.

"இனியுமோர் தமிழ்ச்சங்கம் காண்பேன்
இருந்த முதலிடை கடைச்சங்கம் போலவே
எனச் சொன்ன பாண்டித்துரைத் தேவன் சொல்லை
இவ்வையம் அந்நாளில் நம்பவே இல்லை
வியந்தது வையம் சென்ற நாள் சிலவே
விரிந்தது மதுரைத் தமிழ்ச்சங்க நிலவே" [9]

– என்று வையத்தார் நம்பிக்கையற்று இருந்தபோதும் பாண்டித்துரைத்தேவர் நம்பிக்கையுடன் செயல்பட்டார், என்பதைக் குறிப்பாகச் சுட்டுகிறார். அதுமட்டுமின்றிச் சிறிதுகால இடைவெளிக்குப்பின் விடாமுயற்சியின் மூலம் அதே வையத்தார் வியக்கும்படியாக மதுரையில் நான்காம் தமிழ்ச்சங்கத்தை அவர் தோற்றுவித்தார் என்கிறார். அவ்வெற்றியை நிலவு என்று உருவகிக்கிறார். இவ்வாறு முனைந்த செயல்பாட்டினைப் பாரதிதாசன் நிலவோடு தொடர்புபடுத்துவதைப் பிற இடங்களிலும் காண இயல்கிறது. ஒரு குழந்தையைப் பாம்பு கடித்துவிட; தாயானவள் தவித்துப் புலம்புகிறாள். அத்தவிப்பைக் கண்டு மனம் கசிந்த மருத்துவச்சி ஒருத்தி மாம்பூமலை மீதேறி விடமிறக்கப் பயன்படும் பச்சிலையைப் பறிக்க முனைகிறாள். அவளது கணவன் பச்சிலையைப் பறிப்பதில் உள்ள இடுக்கணைக் கூறிப் பின் வாங்குகிறான். ஆனால் மருத்துவச்சி மனம் தளரவில்லை. கண்ணுக் கெட்டிய குறிப்பிட்ட பச்சிலைக் கொடியோ எட்டாத உயரத்தில் இருந்தது.

"நெட்ட நெடும்பாறை நீளுச்சி மேலேறிக்
கையில் பறிக்கையிலே கால் தவறி விட்டாலோ
பொய்யாகிப் போகுமடி வாழ்வு புதுநிலவே" [10] – என்று

மருத்துவன் தன் மனத்தளர்ச்சியை வெளிப்படுத்துகிறான். அவன் வாயாலேயே தன் மனைவியைப் புதுநிலவு என்று அழைக்க வைக்கிறார் பாரதிதாசன். ஏனெனில் அவள் முயற்சியைக் கைவிடாது சாதிக்கும் தன்மை வாய்ந்தவளாகத் தான் நினைத்த காரியம் கைகூடும் வரை முனைந்து செயல்படுபவள். இறுதியில் பச்சிலையுடன் வந்து தாயின் துன்பத்தைப் போக்கிக் குழந்தையைக் காப்பாற்றுகிறாள். இவ்வாறு பாரதிதாசன் பாடல்களில் முயற்சியும் நிலவும் தொடர்புபடுத்தப்படுகின்றன.

## திறமையும் நிலவும்:

தொழில் திறமை, கலைத்திறமை, சமையல்திறமை என எத்திறமையையும் நிலவோடு இணைத்தே பேசுகிறார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இருந்த பெரியோர்களில் ஒருவரான மருத்துவப் புலவர் நாதன் என்பவரைப் பற்றிப் பாடும் போது,

"இறந்தவன் பிழைத்தான் எனச்செய்யும் மருத்துவப்
புலவர் மீன்களின் நடுத்துலங்கும் நிலவு"[11] என்கிறார்.

மருத்துவத்தொழிலில் அவர் மிக்க திறமை வாய்ந்தவராக இருந்ததாலேயே அவரைப் பல விண்மீன்களுக்கிடையில் நிலவு போன்றவர் என்று ஒப்புமைப்படுத்துகிறார்.

மனிதகுல வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் கலைகளின் தேவையை உணர்த்தும் வகையில் ஆடற்கலையைப் பின்னணியாக வைத்து 'நல்ல தீர்ப்பு' என்ற நாடகத்தை எழுதியுள்ளார். கலைத் திறங்கள் மக்களிடையே போட்டி, பொறாமை ஆகிய தீய உணர்ச்சிகளை ஏற்படுத்தும், எனினும் அவற்றை நீக்கி அனைவரும் பயில்வதற்கும், துய்ப்பதற்கும் உரியனவாகக் கலைகளை உருவாக்க வேண்டும் என்ற கொள்கையை வலியுறுத்துவதற்காக எழுதப்பட்ட நாடகம் அது. அந்நாடகத்தில் ஆடலரசியாகத் திகழும் பீலி நாட்டுச் சிற்றரசன் மகளுக்கு நிலவு என்றே பெயரிட்டுள்ளார் பாரதிதாசன். அப்பெயர் கலைத்திறன் என்று படிமப்பொருளைத் தருகிறது.

குடும்ப விளக்கில் விருந்தினரை உபசரிக்குங்கால் அவர்களுக்கு வைத்த பண்ணியங்களைப் பற்றிச் சுட்டும் போது

**"................... நிலாப்போலும்**
**இப்போதும் பண்ணியங்கள்**
**இட்டீர் அதையும் உண்டோம்"**[12] மாவரசும், மலர்க் குழலியும் தம் மக்கள் நாவரசுடனும் நகைமுத்துடனும் தங்கம் இட்ட விருந்தினை உண்டு கூறிய கூற்று இது. தங்கத்தின் சமையல் திறமை காரணமாக அவள் சமைத்த பண்ணியங்கள் நிலவு போன்றன என்று உவமிக்கிறார்.

## புரட்சியும் நிலவும்:

வருணப் பாகுபாட்டை எதிர்க்கும் சமுதாயப் புரட்சி, முடியாட்சிக் குறைபாடுகளை எதிர்க்கும் அரசியல் புரட்சி, அடிமை நிலையிலிருந்து விடுதலை நாடும் சுதந்திரப்புரட்சி, தொழிலாளர் மேன்மைக்கு வழிகோலும் புரட்சி, இலக்கியப் புரட்சி என்று பலதரப்பட்ட புரட்சிகளையும் நிலவுடன் தொடர்புபடுத்தியுள்ளார்.

வீரத்தாய் என்னும் கவிதை நாடகத்தில் பொறுப்பற்று இருந்து அழிந்த மன்னன் மனைவியான விஜயராணி உடனிருந்தே குழிபறித்த அரசியல் புல்லுருவிகளை எதிர்த்துத்; தனியொரு பெண்ணாய் அரண்மனையை விட்டு வெளியேறிப் புரட்சி செய்கிறாள். கலைப்பயிற்சியும், அறிவும் பெற இயலாது. ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த தன் மகனை அடைந்து மாறுவேடத்துடன் தன்னை இன்னார் என்று காட்டிக் கொள்ளாமலேயே; அவனைச் சகலகலா வல்லவனாக்கித் தக்க நேரத்தில் தன் மகனுக்கு உரிய உரிமையைப் பெற வைத்து வெற்றி காண்கிறார்.

**"அன்னையும் ஆசானும் ஆருயிரைக் காப்பானும்**
**என்னும்படி அமைந்தீர் இப்படியே**

**பெண்ணுலகம் ஆகுநாள் எந்நாளோ.?**
**அன்னையெனும் தத்துவத்தை அம்புவிக்குக் காட்டவந்த**
**மின்னே விளக்கே விரிநிலவே வாழ்த்துகின்றேன்"[13]**

என்று விஜயராணிக்குக் கிடைக்கும் பாராட்டில் அவள் நிலவு எனப் புகழப்படுகிறாள். காங்கேயனைத் தோற்கடித்து விரட்டுவதற்குக் காரணமான அவளது புரட்சி வேகத்தைக் கொன்றை நாட்டுக் கோமான் வாயிலாக இவ்வாறு பாராட்டுகிறார் பாரதிதாசன்.

'பாண்டியன் பரிசு' குறுங்காப்பியத்தில் அன்னத்தை நிலவோடு ஒப்புமைப்படுத்தும் இடங்கள் பல உள்ளன.

**"விண்ணிலே பன்னூறாயிரம் மீன்கட்கு**
**வெண்ணிலவு போல் அந்த மங்கை அன்னம்**
**மண்ணிடையே பெண்ணினத்துக் கொகுத்தி அன்றோ"[14]**

என்று கதைத்தலைவனின் எண்ண ஓட்டத்தில் அவள் நிலவை ஒத்தவள் என்ற கருத்து வெளிப்படையாகப் பேசப்படுகிறது. கதிர்நாட்டை வென்ற வேழ மன்னனும் அமைச்சனும் அன்னம் பற்றிப் பேசும்போது அவளை நிலவு என்று குறிப்பாகச் சுட்டுகின்றனர்.

**"................... வானப்**
**பனிப்புகையில் எழுந்தகதிர் அன்னம் என்பாள்[15]**
**வாழ ஒரு பாண்டியனார் பரிசு வேண்டி**
**வாடுகின்றாள்"........**

என்ற பாடலடிகள் அவள் இக்கட்டான சூழ்நிலையில் சிக்கித் தவிப்பதை விளக்குகின்றன. வேழ நாட்டுக்கு அடிமைப்பட்ட கதிர்நாட்டின் அடுத்த வாரிசு அவள். நரிக்கண்ணனின் பேய்ச்சூழ்ச்சியை முறியடிக்கக்கூடிய அறிவும், சாதனைத் திறனும் கொண்டவள். பாண்டியன் பரிசாகிய பேழையுடன் வேலன் அவளைச் சேர்ந்து விட அவர்கள் காதல் கைகூடுகிறது. அம்மகிழ்ச்சியில் வேலன்

**"இரண்டு முகில் இரண்டு நிலா உனைநான் பெற்றேன்**
**புதுவையம் புதுவையம் இது தான் என்றான்"[16]**

என்ற கவிதை வரிகள் அவளொரு இலட்சியப் பெண் என்பதையும்; மூடநம்பிக்கைகளற்றவளாதலாலும், தன் வாரிசுரிமையை நிலை நாட்டும் மதிநுட்பம் வாய்ந்தவளாதலாலும் நிலவாக உருவகிக்கப் படுகிறாள் என்பதையும் புலப்படுத்துகின்றன.

கடல்மேற்குமிழிகள் காட்டும் மின்னொளி வருணப் பாகுபாடு, சாதி வேறுபாடு முதலியவற்றைக் குறித்து அறிவு பூர்வமாகப் பேசுகிறாள். மன்னன் மகன் வையத்திறல் குதிரையில் வர; தன்னையொத்த அழகன் நடந்துவரக் கேட்டு,

"........................... மன்னன் மகன்
தன்கால்கள் மட்டுமா மென்கால்கள்? என்றே
அழகன் நிலைமைக் கிரங்கி அவனை
முழுதன்பால் நோக்கி முழுநிலவு சாய்ந்திருந்தாள்" [17]

அவளை எண்ணிக் கொண்டு படுக்கையில் வீழ்ந்த அவளது காதலனாகிய இளவரசன் ""மின்னொளி இன்முக நிலவே"[18] என்று தன் மனதோடு புலம்புகிறான்.

சௌமியன் நாடகத்தில் உருவகப் பாத்திரப்படைப்பாக அமையும் சந்த்ரசேனர் அநீதியை எதிர்க்கும் நோக்கத்தில் வன்முறை கலவாமல் வெற்றி பெற வாய்ப்பில்லை என்னும் கருத்துடையவர். மக்கள் கிளர்ச்சியில் நம்பிக்கை உடையவர். அத்தகைய பாத்திரத்திற்கு சந்த்தரசேனர் என்று நிலவினை அடியொட்டிப் பெயரிட்டிருப்பது பாரதிதாசனின் உள்ளக் கிடக்கையைத் தெள்ளத் தெளிவாகக் காட்டுகிறது. இந்திய விடுதலை வரலாற்றில் ஆங்கில ஆட்சியை எதிர்க்கப் போர்ப்படை அமைத்த நேதாஜியின் உருவகமாக சந்த்ரசேனர் என்று பாத்திரம் அமைந்துள்ளது என்று இன்றைய ஆய்வாளரும் கூறியுள்ளனர்.[19]

புரட்சிக்கவியில் உதாரன் நிலவைப் பார்த்துப் பாடுகிறான். தொழிலாளர் துன்பத்திலிருந்து விடுதலை பெறும் இன்பமும், நிலவைக் காணும் இன்பமும் ஒத்த தன்மையுடையன என்கிறான்.

"நித்திய தரித்திராய் உழைத் துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை யாரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
"கவின்நிலவே உனைக் காணும் இன்பம் தானோ"[20]

இக்கவிதைப் பகுதி தொழிலாளர் வறுமைநிலை மாறி வாழ்க்கை வசதி பெறும் இன்பநாள் பற்றிக் குறிப்பிடுகிறது. இத்தகைய இன்ப நாளுக்குத் தொழிற்சங்கங்கள் வழிவகுக்கும் என்ற கொள்கையுடையவர் பாரதிதாசன். சங்கங்கள் என்ற தலைப்பில் எழுதுகின்ற கவிதையடிகள் இதோ:

"பொங்கும் நிலா - ஒளி
பொங்கும் நிலா எனப்
பூரிக்கும் நெஞ்சில் புதுப்புதுக் கோரிக்கை"[21]

தொழிலாளர் தம் கோரிக்கைகள் எழும் அவரது நெஞ்சமே நிலவு என்கிறார். இவ்வுவமையில் தொழிலாளரின் புரட்சி மனமே நிலவு என்ற படிமமாக அமைகிறது.

'புதுநெறி காட்டிய புலவன்' என்று பாரதியாரைக் குறித்து அவர் பாடிய கவிதையில்,

"நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா"[22] என்கிறார். பாரதியார் விடுதலைப் போராட்ட காலத்தில் எழுத்துப்புரட்சி செய்தவர். எளிய சொல், எளிய சந்தம்

என்று பொதுமக்கள் விரும்பும் வண்ணம் கவிதை நடையில் புரட்சி செய்தவர். சுதந்திர உணர்வைத் தூண்டி மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்டக் கவிதைத் தொழிலை மேற்கொண்ட புரட்சியாளர். வீட்டுக்குள் பூட்டிக் கிடந்த பெண்மை வெளிக்கிளம்பி நாட்டை உயர்த்தப் பாடிய புரட்சியாளர். ஆயிரம் உண்டிங்கு சாதி என்று ஒத்துக் கொண்டாலும் சாதி வேறுபாட்டைக் களையச் செயலாற்றிய புரட்சியாளர். சாம்பல் நிறத்தொரு குட்டியும், கருஞ்சாந்து நிறத்தொரு குட்டியும் என்ற வேறுபட்டிருந்த பூனைக்குட்டிகட்கு இடையே உயர்வு தாழ்வில்லை என்பதால் மானிடர்க்கிடையில் நிறவேறுபாடு பாராட்டல் இழிவு என்று முழுங்கிய புரட்சியாளர். வாய்ச்சொல் வீரர்களின் – நெட்டை மரங்களின் – வேடிக்கை மனிதர்களின் நீடுதுயிலை நீக்க அவர் பாடிப் புரட்சி செய்ததால் பாரதிதாசன் அவரை நிலா என்று உருவகிக்கிறார்.

புரட்சிக்கவியின் கதைத்தலைவி அமுதவல்லியைப் பற்றிக் கதைத்தலைவன் உதாரன் குறிப்பிடும்போது,

> **“பழகும் இருட்டினில் நானிருந்தேன்**
> **பால்நில வாயிரம் போல் - அவள்**
> **அழகு வெளிச்சம் அடித்ததென் மேல்”**[23]

என்கிறான். மகள் அமுதவல் லிக்கும், கவிஞன் உதாரனுக்கும் இடையில் காதல் அரும்பியதை அறிந்த மன்னன் உதாரனுக்குச் சிரச்சேதம் என்ற தண்டனையை விதிக்கிறான். அங்கு மன்னனை எதிர்த்துச் செயலாற்றுபவளாக அமுதவல்லி திகழ்கிறாள். இருவர் கொண்ட காதலுக்குத் தண்டனை விதிப்படுதன்றால் இருவர்க்கும் அளிக்க வேண்டும் என்று வாதிடுகிறாள். குல உயர்வு தாழ்வு காரணமாக இருவர்க்குமிடையே திரையிட்டுப் பொய்கூறி மறைத்த மன்னன் செயலை எதிர்த்து அமுதவல்லி தன் உயிரைக் கொடுத்துப் போரிடத் தயாராகிறாள்.

> **“சாதி உயர்வென்றும் தனத்தால் உயர்வென்றும்**
> **போதாக் குறைக்குப் பொதுத் தொழிலாளர் சமூகம்**
> **மெத்த இழிவென்றும் மிகுபெரும்பா லோரையெல்லாம்**
> **கத்திமுனை காட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்**
> **பாவிகளைத் திருத்தப் பாவலனே நம்மிருவர்**
> **ஆவிகளையேனும் அர்ப்பணம் செய்வோம்”** [24]

என்ற அவளது கூற்றில் புரட்சிமனம் வெளிப்படுகிறது. அவளது உணர்ச்சி வெள்ளம் உதாரனை இழுத்தடித்து கொலைக்களத்தில் மக்கள் மனத்தில் புரட்சி வேகத்தை உருவாக்க ஏதுவாகிறது. அவனது உரை முடியாட்சி மாறிக் குடியாட்சி மலரவும் காரணமாகிறது. இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் காரணமாக அமைந்த அமுதவல்லியின் புரட்சிமனம் காரணமாகவே புலவர் அவளை ஆயிரம் பால் நிலவுகளுடன் ஒப்பிடுகிறார்.

"................................ வானிலே இருந்
திட்டதோர் மாமதி மங்கையாய்
என்னெதிரே வந்து வாய்த்ததோ? புவிக்
கேதிது போலொரு தண்ணொளி"[25]

என்று அவளை முதன்முதலாக நேருக்கு நேர் பார்த்தவுடனேயே உதாரன் வாய் மொழியால் நிலவு உருவகம் அமைகிறது.

## அறமும் நிலவும்

தன்னலம் கருதாது சமூகத் தொண்டாற்றும் அற உணர்வை நிலவுடன் இணைத்துப் பேசுகிறார். கணிகையர் குலத்தில் தோன்றியும்; காமத்தைக் கெடுத்து உதயகுமரனிடமிருந்து ஓடி ஒளிந்த மணிமேகலை நெஞ்சில் நெருப்புடைய நிலவாக உருவகிக்கப்படுகிறாள்[26] இன்னும் உணவுண்ண வாரீரோ என்றபடி தன்னந்தனியாய் நின்ற அவளைக் குளிர்ந்த நிலா என்கிறார்.[27] உலக அறவியலில் அவளாற்றிய தொண்டின் காரணமாகவே மீண்டும் மீண்டும் அவளை நிலவு என்கிறார் பாரதிதாசன்.[28]

## அழகும் நிலவும்

குழந்தையின் அழகு, பருவப்பெண்ணின் அழகு, ஆணழகு, இயற்கையழகு, கவிதை அழகு என அழகின் பல்வேறு கோணங்களையும் நிலவையும் இணைத்துப் பேசுகிறார் பாரதிதாசன்.

"வான் பெற்ற நிலவைப் போல
வந்தொரு குழந்தை என்னைத்
தேன்பெற்ற வாயால் அப்பா
எனத் தாவும் திங்கள் ஏழில்"[29]

– என்று தந்தையாகப் போகும் வேடப்பன் தன் மனைவி தாய்மையுற்றதை எண்ணி மகிழ்கிறான். பிறக்கப்போகும் குழந்தை நிலவு போன்ற அழகுடையது என்பதே அவன் கூற்றில் இடம்பெறும் உவமையின் கருத்தாகும்.

"........................ முன்னிருந்த
வண்ண முகமேதான் வட்டநிலா ஆகியது"[30]

என்று ஒரு பெண் பருவமடைந்த அழகை அவள் காதலன் வருணிப்பதாகப் பாடுவதில் பருவப் பெண்ணின் அழகு நிலவழகுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

தன் கணவன் திருவரங்கம் சென்ற பிரிவுத்துயர் தாளாத மனைவி அவன் அழகைக் குறிப்பிட்டு,

"...................... நான்
எட்டிப் பிடித்த வட்டநிலா - நல்ல
இனிப்பிலே பழுத்த பலா"[31] – என்று வருணிப்பதாகப் பாடுகிறார். இங்கு ஆணழகு நிலவழகுடன் ஒப்ப வைத்துப் பேசப்படுகிறது.

பாரதியார் விழாவிற்காகத் திருச்சி வானொலி நிலையத்தார் நிகழ்த்திய கவியரங்கத்தில் ஐந்தாம் நாள் தலைமை தாங்கிய போது அவர் பாடிய கவிதையின் முற்பகுதியில் அவையடக்கம் இடம் பெற்றுள்ளது.

"இங்குத் தலைமை ஏற்ற நானும்
திங்களைக் கண்ணிலான் சிறப்புறுத்தல் போல்
பாரதிப் புலவனைப் பற்றிச் சிற்சில கூறுவேன்"[32]

என்ற அடிகள் பாரதியின் கவித்துவ அழகைத் திங்களுடன் தொடர்புறுத்துகின்றன. பாரதி என்றும் கவிஞனின் அழகைத் தான் கூறுவது திங்களின் அழகைக் குருடன் கூறுவதற்கு ஒப்பாகும் என்கிறார் பாரதிதாசன்.

இயற்கையழகின் ஒட்டுமொத்த வடிவம் நிலவின் அழகு என்றும் இயம்புகிறார்.

"' ...................நிலவே நீ தான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தா என்றே இயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணம் தானோ"[33]

– என்ற புரட்சிக்கவி உதாரனின் கவிதையில் பாரதிதாசனின் நிலவுக்கொள்கையும், அழகுக் கொள்கையும் தொடர்புடையன என்பது புலனாகிறது. அழகுக்கு ஆதாரமாக நிலவு அமைகிறது என்ற கருத்தை

"வான் ஒன்று நிலவொன்று
இணைந்ததனால் அழகுண்டு"[34]

– என்று காதலர் பாடுவதாக அமைத்தமையால் தெளியலாம்.

நிலவு தொடர்பான உவமைகளையும், உருவகங்களையும், பிற புனைந்துரைகளையும்; அறிவு, அழகு, அறம், திறமை, புரட்சி, முயற்சி ஆகிய நுண்பொருட்களைச் சுட்டும் முறையில் பாடியிருப்பதால் பாரதிதாசனுடைய சில பாடல்களில் நிலவு குறியீட்டுப் பொருளை உடையதாகி மேற்சுட்டிய நுண்பொருட்களை ஒட்டு மொத்தமாகக் குறிப்பிடுகிறது.

"காராரும் வானத்தில் காணும் முழுநிலவே"[35] என்று குழந்தைத் தாலாட்டில் பாடுவதன் காரணம் அழகு என்ற அடிப்படை மட்டுமன்று; அறிவு, அறம், திறமை, முயற்சி, புரட்சி முதலிய பெருமைக்குரிய பண்புகளையெல்லாம் அக்குழந்தை

பெற்று வளரும் என்ற தாயின் நம்பிக்கையும் ஆகும். ஏனெனில் பாடலின் இறுதியடிகள்,

**"மானிடரின் தோளின் மகத்துவத்தைக் காட்ட வந்த**
**தேனின் பெருக்கே என் செந்தமிழே கண்ணுறங்கு"**[36]

என்று அமைகின்றன. மானிடர்களின் பிறவி மகத்துவம் அவர்களது பண்பின் அடிப்படையில் அமைவதாகும். மனிதர்க்குப் பெருமை தரக் கூடிய பண்புகளாகிய அறிவு, அறம், திறமை, முயற்சி, புரட்சி, அழகு ஆகிய அனைத்தையும் நிலவு என்று புனைந்துரைத்துப் பாரதிதாசன் இயற்றிய பாடல்கள் பலவற்றையும் இதுகாணும் நாம் கண்டதால் இத்தாலாட்டில் இடம் பெறும் நிலவு ஒரு குறியீடு என்னும் தகுதி பெறுகிறது.

அக்கால தேசபக்தர்கள் பலருடன் சேர்ந்து பாரதியார் நிகழ்த்தவிருந்த நாடகத்தைப் பற்றிப் பாரதிதாசன் விரிவாகப் பாடியுள்ளார். நல்ல கவியழகையும் நடிப்புத் திறனையும் சேர்த்து ஒரு நல்ல சரிதத்தை நாடகமாக்க எண்ணி; அக்காலத்தில் காளிதாசன் எழுதிய சாகுந்தலத்தை பாரதியார் தேர்ந்தெடுத்தார். தனது நண்பர் ஸ்ரீநிவாசாச்சாரியே சகுந்தலை வேடத்தை ஏற்க வேண்டுமென்றும் விரும்பினார். அதுமட்டுமின்றித் தானே துஷ்யந்தன் வேடமிடவும் தயாராக இருந்தார். நண்பர்கள் பலரும் உதவி செய்ய ஒத்துக்கொண்டனர். ஆனால் காரியம் கைகூடவில்லை. தமிழ்நாட்டு மக்கள் கோழைகளாக இருந்ததால் ஒரு நல்ல நாடகம் உருவாவது தடைபட்டு விட்டது. பாரதியாரின் முயற்சி பலிக்காமல் போனதற்குக் காரணம் தமிழகத்து மக்கள் தேசபக்தர்களுடன் உடன்பாடின்றி விலகிச் சென்றமை என்கிறார். அந்த இழப்பைப் பற்றிப் பாடும்போது

**"வண்டி வண்டியாய்க் குப்பை கூடளமெல்லாம்**
**வாரிப் போய்ப் பாரதியார் போட்டிருந்தார்**
**கொண்டுவந்து சேர்த்திருப்பார் நாடகத்தில்**
**குளிர்நிலவை ஒளிநிலவை அற்புதத்தை"**[37]

– என்று ஒரு நிலாக் குறியீடு அமைகிறது. பாரதியார் வண்டிவண்டியாய் வாரிப் போட்ட குப்பையும் கூளமும் எது? நாடகத்தில் அவர் சேர்த்திருக்கக் கூடிய அற்புதமான குளிரும் ஒளியும் பொருந்திய நிலவு எது? பாரதிதாசன் நிலவை எவ்வெப் பொருட்களுடன் தொடர்புறுத்துகிறார் என்று ஆராயும்போது மேற்கண்ட கேள்விகட்குரிய விடை கிடைக்கிறது. "நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா" என்று பாரதியாரை நிலவாக உருவகித்தமை ஏன் என்று முன்னர்க் கண்டோம். அங்ஙனமே திங்களைக் கண்ணிலான் சிறப்புறுத்தல் போல் தான் பாரதிப்புலவனைப் பற்றிப் பாட வந்துள்ளதாக பாரதிதாசன் குறிப்பிடுவதையும் முன்னர்க் கண்டோம். இப்பாடல்களில் உள்ள படிமங்களைக் கருத்தில் கொண்டு காணும்போது பாரதியார் தன் நாடகத்தில் பெண்கல்வி, மூத்தோர் இடித்துரைக்கக் கூடிய அறிவுரை, பட்டறிவு சார்ந்த கருத்துக்கள், தமிழ்க்கல்வி, கவிதை நயம், கலையழகு, சாதி வேறுபாட்டையும், நிற வேறுபாட்டையும், அரசியல் சீர்கேடுகளையும், அடிமை நிலையினையும்

எதிர்த்தெழுந்த புரட்சிக்கருத்துக்கள், அறக்கருத்துக்கள், தொழில்திறன் பற்றிய கருத்துக்கள் ஆகியவற்றை சாகுந்தல நாடகக் கதையோடு பின்னியிருந்தார் என்பது புலப்படுகிறது. சமூகச் சீர்கேடுகளையும், அரசியல் சீர்கேடுகளையும் தன் நாடகத்தில் சுட்டிக்காட்டியிருந்தார் என்பதையே வண்டிவண்டியான குப்பை கூளமெனக் குறியீடு மூலம் புரிய வைக்கிறார் பாரதிதாசன். எனவே அந்நாடகம் பண்டைப் புராணக் கதையை அடியொட்டிச் சமகாலச் சிக்கல்களைத் தெளிவுறுத்தும் போக்கில் அமைந்திருந்தது என்பதையே பார்திதாசனின் குறியீடு உணர்த்துகிறது.

தமிழ்நாட்டுத் திரைப்படத்துறையின் நிலைபற்றிப் பாடும் போதும்

**"இருள் கிழித்துத் தமிழ்நாடாம் நிலவுதனை உலகின்**
**எதிர் வைக்கும் நாள் எந்நாள் என்றுபல நினைத்தேன்"[38]**

என்ற அடிகளில் தமிழ்நாட்டை நிலவு என்று குறிப்பிடுகிறார். திரைப்படம் தக்க முறையில் பயன்படுத்தும் போது ஒரு மிகச் சிறந்த சீர்திருத்தக் கருவியாக அமையக் கூடியது. தமிழ்ச்சமுதாயத்தின் குறைபாடுகளாகிய இருளை நீக்கி அறிவு, அறம், அழகு, திறமை, முயற்சி, புரட்சி முதலிய விழுமிய பண்புகளைக் கொண்டதாகச் சீர்திருத்தி உலக அரங்கில் நிலவாக ஒளிவீசும் நாளையே அவர் இவ்விரு அடிகளில் எண்ணி ஏங்குகிறார்.

இலக்கியத்தில் உவமை, உருவகம், படிமம் என்பன தொடர்புபட்ட வளர்ச்சி உடையன என்றும்; உவமை அடிப்படையில் படிமம் உருவாகும் என்றும் இன்றைய திறனாய்வாளரும் கூறி உள்ளனர்.[39] அனுபவமும், உணர்ச்சியும், சூழலும் காரணமாகப் படிமங்கள் அமைகின்றன என்றும், உவமை உருவகங்கள் அவற்றுக்குரிய கருவிகள் என்றும் விளக்கம் கூறுகின்றனர்.[40] சுருங்கக் கூறி விளங்க வைக்கும் இவ்வுத்தி கற்பனையை அடியொட்டி அமைகிறது.[41]

கவிஞர்கள் கையாளும் 'தனித்த குறியீடு' என்ற வகை பற்றி விளக்கும் போது கீட்ஸ், ஷெல்லி, பிளேக், கால்ரிட்ஜ் முதலிய மேனாட்டார் கவிதைகளிலும், பாரதியார் கவிதைகளிலும் அவை இடம் பெற்றுள்ளமையை ஆய்வாளர் எடுத்துக்காட்டியுள்ளனர். அத்துடன் ஒரு கவிஞர் கையாளும் தனித்த குறியீட்டின் பொருள் ஆழத்தைப் புரிந்து கொள்ள அவரது பிற பல படைப்புகளையும் பயின்று அக்குறியீடு பயின்று அக்குறியீடு பயின்று வரும் இடங்களை எல்லாம் தொகுத்து ஒருங்கு நோக்க வேண்டும் என்றும் சான்றுகாட்டி நிறுவியுள்ளனர்.[42]

## முடிவுரை

இதுகாறும் கண்டவற்றான் பாரதிதாசன் படைப்புகளில் 'நிலவு' ஒரு குறியீடாகப் பயின்று வந்து அறிவு, அறம், திறமை, முயற்சி, புரட்சி, அழகு என்ற விழுமியங்களை ஒருங்கு சுட்டுகிறது என்பது தெளிவாயிற்று.

## குறிப்புகள்

1. பாரதிதாசன் தேனருவி, பக். 87 – "'நிலாக்கிழவி கூறுகிறாள்"
2. பாரதிதாசன் கவிதைகள், பக். 335 – "'அமிழ்து எது"
3. பாரதிதாசன், ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது, பக். 89 – "வெந்நீரில் விரல்".
4. மேலது, பக்.129 – "'இளவேனில் இன்பம்"
5. பாரதிதாசன் குயில் பாடல்கள், பக். 83 – "'உயிர் உறங்கா இரவு"
6. பாரதிதாசன், "ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது", பக். 58 – "'வெண்ணிலாவில் தமிழ்ப்பெண்"
7. பாரதிதாசன், காதல் பாடல்கள், பக் 186 – "'பள்ளிக்குச் செல்லும் புள்ளிமான்"
8. பாரதிதாசன் கவிதைகள், பக். 81 – "'இன்பத் தமிழ்"
9. பாரதிதாசன், பெருமக்கள், பக். 32 – "'பாண்டித்துரைத் தேவன்"
10. பாரதிதாசன், குயில் பாடல்கள், பக். 132 – "'கடவுளைக் கண்டீர்"
11. பாரதிதாசன், பெருமக்கள், பக்.50 – "'மருத்துவப் புலவர் நாதன்"
12. பாரதிதாசன் – குடும்ப விளக்கு I & II – பக். 40
13. பாரதிதாசன் கவிதைகள், பக். 52
14. பாரதிதாசன், பாண்டியன் பரிசு, பக். 80 – இயல். 76
15. மேலது., பக். 63 – இயல். 59
16. மேலது., பக். 95 – இயல். 88
17. பாரதிதாசன் கவிதைகள், பக். 273 & 274 – "'கடல்மேற் குமிழிகள்"
18. மேலது., பக். 272
19. ச.சு. இராமர் இளங்கோ, பாரதிதாசன் நாடகங்கள் – ஓர் ஆய்வு, பக். 705 – 706.
20. பாரதிதாசன் கவிதைகள், பக்.23 – "புரட்சி கவி"
21. மேலது., பக் 242 – "'சங்கங்கள்"
22. பாரதிதாசன், பெருமக்கள், பக். 105 – "'புது நெறி காட்டிய புலவன்"
23. பாரதிதாசன் கவிதைகள், பக். 30 – "புரட்சிக்கவி"
24. மேலது., பக். 28
25. மேலது., பக். 32
26. பாரதிதாசன், மணிமேகலை வெண்பா – பா. 56
27. மேலது., பக். 146
28. மேலது., பா. 165, 186 262
29. பாரதிதாசன், குடும்ப விளக்கு, III, IV & V – பக். 58
30. பாரதிதாசன், காதல் பாடல்கள், "எது பழிப்பு ?"
31. பாரதிதாசன் கவிதைகள், பக் 453 – "'சேவலைப் பிரிந்த அன்றிற்பேடு"
32. பாரதிதாசன், பெருமக்கள் – பக். 104 – 105 "'புது நெறி காட்டிய புலவன்"
33. பாரதிதாசன் கவிதைகள் – பக். 22 – "'புரட்சிக் கவி"
34. பாரதிதாசன், காதல் பாடல்கள் – பக். 53 "'உனக்கென்று நான் ....... எனக்கென்று நீ"
35. பாரதிதாசன் கவிதைகள், பக். 108 – "ஆண்குழந்தை தாலாட்டு"
36. மேலது., பக். 109

37. பாரதிதாசன், நாள் மலர்கள், பக். 71 – "தேசபக்தர்கள் நாடகம்"
38. பாரதிதாசன் கவிதைகள், பக். 138 – "தமிழ்நாட்டிற் சினிமா"
39. தமிழண்ணல், தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் – உள்ளுறை – பக். 93
40. பி. தட்சிணாமூர்த்தி, ஆய்வுமாலை – பக். 26
41. மேலது., பக் 24 – 25
42. ஜி. ஜான் சாமுவேல், கலையும் கலைக் கோட்பாடுகளும், பக். 130–133 – "'பாரதியும் காட்சிப் படிமக் கோட்பாடும்"

## துணை நூற்பட்டியல்


1. பாரதிதாசன் கவிதைகள் – (முழுவதும்) – பாரதி பதிப்பகம், சென்னை 2ஆம் பதிப்பு – ஜீலை. 1992
2. பாரதிதாசன் – குயில் பாடல்கள் – பூம்புகார் பிரசுரம், சென்னை – I பதிப்பு செப். 1997
3. பாரதிதாசன் – மணிமேகலை வெண்பா – மணிவாசகர் பதிப்பகம், சென்னை முதல் பதிப்பு – நவம்பர் 1992
4. பாரதிதாசன் – நாள் மலர்கள் – பூம்புகார் பிரசுரம், சென்னை – I பதிப்பு – 1978
5. பாரதிதாசன் – குடும்ப விளக்கு I & II – பாரி நிலையம், சென்னை –10ஆம் பதிப்பு 1982
6. பாரதிதாசன் – குடும்பவிளக்கு, III, IV & V – பாரிநிலையம், சென்னை 6ஆம் பதிப்பு – 1981
7. பாரதிதாசன் – காதல் பாடல்கள் – பூம்புகார் பிரசுரம், சென்னை – I பதிப்பு ஆகஸ்டு 1994
8. பாரதிதாசன் – பெருமக்கள் – மணிவாசகர் பதிப்பகம் – I பதிப்பு – அக்டோபர் 1994
9. பாரதிதாசன் – தேனருவி – விரிவாக்கம் பெற்ற பதிப்பு – ஜனவரி 1978
10. பாரதிதாசன் – ஒரு தாயின் உள்ளம் மகிழ்கிறது – பூம்புகார் பிரசுரம், சென்னை – I பதிப்பு – ஏப்ரல் 1978
11. பாரதிதாசன் – பாண்டியன் பரிசு – மணிவாசகர் பதிப்பகம், சென்னை – முதல் பதிப்பு – நவம்பர் 1991
12. முனைவர் ச.சு. இளங்கோ – பாரதிதாசன் நாடகங்கள் – ஓர் ஆய்வு – முதல் பதிப்பு – அக்டோபர் 1990
13. முனைவர் பி. தட்சிணாமூர்த்தி – ஆய்வு மாலை – இலஞ்சியார் பதிப்பகம், நெல்லை – I பதிப்பு – ஜீலை 1982.
14. முனைவர் ஜி. ஜான் சாமுவேல் – கலையும் கலைக்கோட்பாடுகளும் "பாரதியும் காட்சிப் படிமக் கோட்பாடும்" – நூலின் முற்பகுதி இல்லை
15. முனைவர் தமிழண்ணல் – தொல்காப்பியரின் இலக்கியக் கொள்கைகள் – உள்ளுறை – நூலின் முற்பகுதி இல்லை.

# 7. பாரதிதாசனும் பாட்டாளி மக்களும்

பெ. சுபாசு சந்திரபோசு

நேற்றைய சமூகத்தை நோக்கி இன்றைய சமூகத்தை விமர்சித்து நாளைய சமூகத்தைப் புதிய நம்பிக்கையோடும், பகுத்தறிவு வெளிச்சத்தோடும் வரவேற்பது பாரதிதாசனின் கவிதைக் கலையின் கருத்தாகும். உலகத்தைப் பற்றிப் பாடிய கவிஞர்களைப் போல் அல்லாமல் உலகத்தை மாற்றக் கவிதைக் கலையைப் பயன்படுத்தியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். சமுதாய மயக்கத்தை மாற்ற இயக்கக் கவிதைகளையும், வீழ்ச்சியை வீழ்த்த புரட்சிமிகு கவிதைகளையும், இருட்டை விரட்ட வெளிச்சமிகு கவிதைகளையும் பாடிக் கவிதைப் பாரம்பரியத்தில் மனிதத்தை மகத்துவமாக்கியுள்ளார். இக்கட்டுரையில் பாரதிதாசனின் கவிதைகள் வெளிப்படுத்தும் பாட்டாளி மக்களைப் பற்றிய நிலைப்பாடுகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

## கவிதைக் கலையின் நோக்கு :

பாரதிதாசன் கவிதைகளில் அதிகார வர்க்க எதிர்ப்பும், மக்களாட்சியின் ஏற்பும், பொதுவுடமைச் சார்பும் காணப்படுகின்றன.

**"ஒரு மனிதன் தேவைக்கே இந்த தேசம்**
**உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்!"**
**"செல்வமெலாம் உரிமையெலாம் நாட்டாருக்கே"**
**"பொதுவுடைமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்"**

ஆகிய கவிதை வரிகள் பாரதிதாசனின் கவிதையின் நோக்கை வெளிப்படுத்துகின்றன. மேலும் இவரின் கவிதைகளில் ரூசோவின் சுதந்திரம் (Liberty) சமத்துவம் (Equality) சகோதரத்துவம் (Fraternity) ஆகிய மூன்று கொள்கையும் அடிநாதமாக விளங்குகிறது. இக்கொள்கையின் வெளிப்பாட்டில் பாட்டாளி மக்கள் சமூகத்தில் உரிமை பெற்ற வாழ்வாகிய விடுதலையும், பொருளாதாரத்தில் சமத்துவ நிலையும் வேண்டும் என்பது கவிஞரின் எதிர்ப்பார்ப்பாகும். இதைத்தான் முனைவர் கா. செல்லப்பன் "பாவேந்தர் பாடல்களில் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பண்டைத் தமிழ்ப் பண்பாடு, உலகமனைத்துக்கும் சுதந்தரம், சமத்துவம், சகோதரத்துவம் கோரிய பிரெஞ்சுத் தத்துவத்தோடு இணைந்து ஒரு புதிய பரந்த மனித இயமாக மலர்கிறது" என்று மதிப்பிட்டுள்ளார். கவிஞர் 1963ஆம் ஆண்டில் 'பொதுவுடைமைக்குத் தான் பகைவன் இல்லை' என்பதை விளக்க எழுதிய ஒரு கவிதையில்

**"சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்**
**மூன்றும் என்னுயிர் உணர்வில் ஊறியவை"**

என்று அடையாளப்படுத்தியுள்ளார்.

## அழகின் சிரிப்பில் பாட்டாளி உணர்வு :

பாரதிதாசனின் மனித நேயமாகவும், புதியதோர் உலகைப் படைக்கும் புரட்சியியமாகவும் பரிணாமம் பெறும் நிலையில் பாட்டாளி மக்களின் கவனமும் அழகின் சிரிப்பில் உணர்த்தப்படுகிறது. 'அழகு' என்னும் கவிதையில்

**"------------ அடடே செந்தோள்**
**புறத்தினில் கலப்பையுடன் உழவன் செல்லும்**
**புதுநடையில் பூரித்தாள்"**

என்று பாடியுள்ளார். இதில் உழவன் புதிய வாழ்வு பெற்று நடந்து செல்லும் காட்சியை அழகின் தரிசனமாக்கியுள்ளார்.

விண்மீன் நிறைந்த வானத்தைப் பாடும்போது கவிஞர் பாட்டாளி மக்கள் மண்ணில் படும் நிலையைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

**"மண்மீதில் உழைப்பா ரெல்லாம்**
**வறியராம்! உரிமை கேட்டால்**
**புண்மீதில் அம்பு பாய்ச்சும்**
**புலையர் செல்வராம் இதைத்தன்**
**கண்மீதில் பகலிலெல்லாம்**
**கண்டு கண்டந்திக்குப் பின்**
**விண்மீனாய்க் கொப்பளித்த**
**விரிவானம் பாராய் தம்பி!"**

என்று மக்கள் இனத்தை விளித்துப் பாடியுள்ளார். இதில் உழைப்பாளி வறுமையிலிருந்து விடுபட்டு உரிமைபெற்று வாழ வேண்டும் என்பதை முதன்மை நிலையாகவும், விண்மீனை இரண்டாம் நிலையாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இது தமிழ்க் கவிதை வகைப்பாட்டில் பேச்சுக்கவிதை அமைப்பு முறையில் எழுதப்பட்டுள்ள கவிதையாகும்.

"'சிற்றூர்" என்னும் கவிதையில்

**"சிற்றோடு கையில் ஏந்தி**
**ஒரு காணிப் பருத்தி தேற்ற**
**ஒற்றை ஆள் நீர் இறைத்தான்**
**உழைப்பொன்றே செல்வம் என்பான்"**

**"நன் செயைச் சுற்றும் வாய்க்கால்**
**நல்லாற்று நீரை வாங்கிப்**
**பொன்செயும் உழவு செய்வோன்**
**பொழுதெல்லாம் உழவு செய்தேன்**
**என் செய்தாய்! என்ற பாட்டை**
**எடுத்திட்டான்; எதிரில் வஞ்சி**

முன் செய்த கூழுக்கத்தான்
முடக்கத்தான் துவையல்! என்றாள்"

இக்கவிதையில் உழைப்பு மட்டுமே செல்வமாகவும், நாளெல்லாம் பாடுபட்டும் கூழைக்குடித்து வாழும் உழவனின் நிலையைக் காட்சிப்படுத்தியுள்ளார். இது நாடகப் பாங்கில் எழுதப்பட்டுள்ள கவிதை வடிவமாகும்.

## உழைப்பவர் பெருமை

பாடுபடும் பாட்டாளி மக்களின் உழைப்பில் நம்பிக்கை கொண்டு புதுநிலை தேடவேண்டும் என்பதைப் பெருமையோடு சஞ்சீவி பர்வதத்தின் சாரலில் வரும் வஞ்சி,

மக்கள் உழைப்பில் மலையிலாத நம்பிக்கை
எக்களிக்க வேண்டும் இதயத்தில் ஈதன்றி
நல்லறிவை நாளும் உயர்த்தி உயர்த்தியே
புல்லறிவைப் போக்கிப் புதுநிலை தேடல் வேண்டும்
மக்கள் உழைக்கா முன் மேலிருந்து வந்திடுமோ?

என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். இக்கேள்வியில் சமுதாயம் பகுத்தறிவு நோக்கில் உழைப்பவர் மீது நம்பிக்கை கொண்டு புதுநிலையைத் தேடவேண்டும் என்று வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

## பட்டாளி மக்களின் வாழ்வு நிலைகள்

புரட்சிக் கவியில் நிலவைப்பாடும் உதாரன் பாட்டாளி மக்களின் அவல நிலையை நிலவைக் காணும் இன்பத்தோடு ஒப்பிட்டள்ளார்.

"நித்திய தரித்திரராய் உழைத்துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிது கூழ் தேடுங்கால் பானைஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக் காணும் இன்பம் தானோ!"

என்பதில் பாட்டாளி மக்களின் பயனற்ற உழைப்பு நிலையையும், வறுமைப்பாட்டையும் வெளிப்படுத்தியுள்ளார். விண்ணைப் பாடினாலும் மண்ணைப் பாடும், பாட்டாளியை மறவாமல் பாடும் மனிதநேயக் கவி பாரதிதாசன் என்பதை இக்கவிதையால் அறிய முடிகிறது.

காதல் கவிதையாகத் தொடங்கும் ""புரட்சிக்கவி" பாட்டாளி மக்களின் உரிமைக்கும், வாழ்வுக்கும் வாதாடும் கவிதையாக முடிகிறது. சொந்த வாழ்வுக்காகப் பேசும் அமுதவல்லியும் உதாரனும் பொது வாழ்வுக்கும், சமுதாய மாற்றத்துக்கும் போராடிச் சமூக மாற்றத்தை மக்கள் சக்தியால் நிலைநாட்டுகின்றனர்.

அமுதவல்லி சமூக நிறுவன அமைப்பு முறையை எதிர்த்துப் பேசும் போது,

"சாதி உயர்வென்றும் தனத்தால் உயர்வென்றும்
போதாக்குறைப் பொதுத்தொழிலாளர் சமூகம்
மெத்த இழிவென்றும் மிகு பெரும்பாலோரை எல்லாம்
சக்திமுறை காட்டிக் காலமெல்லாம் ஏய்த்துவரும்
பாவிகளைத் திருத்த பாவலனே நம்மிருவர்
ஆவிகளை யேனும் அர்ப்பணம் செய்வோம்"

என்று குரல் எழுப்பியுள்ளார். சாதிப் பாகுபாட்டாலும், பொருளாதார ஏற்றத்தாழ்வாலும் "பொதுத் தொழிலாளர் சமூகம்" இழிவாகக் கருதும் போக்கும் இதில் உணர்த்தப்பட்டுள்ளது.

"வியர்வைக்கடல்" என்னும் கவிதையில் பண்ணையில் பணிபுரியும் பாட்டாளி மக்களின் நிலையைக் குறிப்பிடும் போது,

"களை போக்கும் கறுப்பன் விளைக்க இவர்கள்
உடலைக் கசக்கி உதிர்த்த வியர்வையின்
ஒவ்வொரு துளியிலும் கண்டேன்
இவ்வுலகு உழைப்பவர்க்குரிய தென்பதையே"

என்று எடுத்துக்காட்டி உலகம் உழைப்பவருக்குரியது என்பதை நிலைநாட்டியுள்ளார்.

நாட்டில் உழைப்பவர் பலராகவும், உடைமையாளர் சிலராகவும் நிலவும் சமூக முரண்பாட்டைச் சொல்ல வரும் கவிஞர்,

"ஊரிலேனும் நாட்டிலேனும்
உலகிலேனும் எண்ணினால்
நீர்நிறைந்த கடலையொக்கும்
நேர் உழைப்பவர் தொகை
நீர் மிதந்த ஓடமொக்கும்
நிறைமுதல் கொள்வோர் தொகை
நேரில் நிறை போதுமாயின்
தோணி ஒட்டம் மேவுமோ?"

என்ற கேள்வியை எழுப்பியுள்ளார். நாட்டில் பலராக உள்ள பாட்டாளிகள் போராட நினைத்தால் சமூக இயக்கம் நடைபெறுமா? என்பதைச் சிந்திக்க வைத்துள்ளார்.

"'தொழிலாளர் விண்ணப்பம்" என்னும் கவிதையில் நாட்டையும் வீட்டையும் உருவாக்கிய பாட்டாளிகளைக் குறிக்கும்போது,

"காடு களைத்தோம் - நல்ல
கழனிதிருத்தியும் உழவு புரிந்தும்

நாடுகள் செய்தோம் - அங்கு
வேண்டிய பண்டங்கள் ஈண்டிடச் செய்தோம்
பாடுகள் பட்டோம் - புவி
பதமுறவே நாங்கள் நிதமும் உழைத்தோம்"

என்று உழைப்பின் உன்னதங்களை அடுக்கிக் காட்டியுள்ளார்.

"உலகப்பன் பாட்டு" என்னும் கவிதையில் அதிகார வர்க்கத்தின் ஆதிக்கத்தால் உடைமையாளர்கள் பெருகிய சமுதாய நிலையைச் சொல்லும்போது

"கைத் திறனும் வாய்த் திறனும் கொண்ட பேர்கள்
கண்மூடி மக்களது நிலத்தையெல்லாம்
கொத்திக் கொண்டேப்பமிட்டு வந்ததாலே
கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்"

– என்று வருத்தப்பட்டுள்ளார்.

"'சாய்ந்த தராசு" என்ற கவிதையில் எல்லாவற்றையும் படைக்கும் பாட்டாளி மக்கள் வறுமையோடு வாழ்வதை.

"காண்ப தெலாம் தொழிலாளி செய்தான் அவன்
காணத் தகுந்தது வறுமையாம்"

என்று குறிப்பிடுகின்றார்.

## தீர்வும் - எதிர்பார்ப்பும்:

பாட்டாளி மக்களின் வாழ்வு நிலையைப் பாரதிதாசன் பல கோணங்களில் விளக்கியும் – விவாதித்தும் உள்ளார். அவர்கள் வாழ்வதிலும், வளம் பெறுவதிலும் சமத்துவம் பெற வேண்டியவர்கள் என்பதை

"வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் புவி
மக்களெல்லாம் ஒப்புடையார்" (சாய்ந்த தராசு)

என்று வலியுறுத்தியுள்ளார். எனவே ஆதிக்க சக்திகள் தொழிலாளர்கள் பொது இன்பம் பெற்றிடச் சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே.

"பொதுஇன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே - எங்கள்
உடலில் இரத்தம் கொதிப்பேறு முன்பே" (தொழிலாளர் விண்ணப்பம்)

– என்று வேகப்படுத்தியுள்ளார்.

வர்க்க அமைப்பு முறையை எதிர்க்க வேண்டும் என்பதை

"வலியோர் சிலர் எளியர்தமை
வதையே புரிகுவதா?

**கொலை வாளினை எடடா மிகு**
**கொடியோர் செயல் அறவே"** – என்று பாடிச் சமூக மாற்றத்துக்குரிய போர்க்குணத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

கூடித் தொழில் செய்யும் கூட்டு மேலாண்மைக்குணம் (Team Management) பெருகினால் பாட்டாளி மக்களின் வறுமை வாழ்வு மாறும் என்பது கவிஞரின் எதிர்பார்ப்பாகும்.

**"வாடித் தொழிலின்றி வறுமையாற் சாவ தெல்லாம்**
**கூடித் தொழில் செய்யாக் குற்றத்தால் தோழர்களே"**

என்பதில் பாட்டாளிகள் ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்பதை உணர்த்துகின்றார். இதுதான் "உலகத் தொழிலாளர்களே! ஒன்றுபடுங்கள்" என்னும் மே தினக் குரலாகவும் உலகில் இன்று ஒலிக்கிறது.

"மானிட சமுத்திரம் நான் என்று கூவு" என்று பாடியுள்ள புரட்சிக்கவிஞர் நாட்டின் வாழ்வுக்கும் சமுதாய விடுதலைக்கும் மையம் மானிட சக்தியே என்னும் கொள்கை உடையவர். பாட்டாளி மக்களும் மானிட சக்தியின் ஆற்றலை உணர்ந்தால் உரிமையுடைய வாழ்வைப் பெற முடியும் என்பதைத் தீர்வாகக் கூறும்போது

**"மானிடம் என்றொரு வாளும் - அதை**
**வசத்தில் அடைந்திட்ட உன் இரு தோளும்**
**வானும் வசப்பட வைக்கும் - இதில்**
**வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்"**

என்று பிரகடனப்படுத்தியுள்ளார். இந்த உணர்வைப் பெற்ற பாட்டாளி மக்கள்

**"புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்"**

என்ற நிலையை எய்திப் புது வாழ்வைப் பெற முடியும்.

"பாரதிதாசனும் பாட்டாளி மக்களும்" என்னும் தலைப்பு இன்னும் விரிவாக ஆராயத்தக்க ஒரு தலைப்பாகும். இக்கட்டுரையில் இத்தலைப்புப் பற்றிய சில சிந்தனைகள் மட்டும் முன்மொழியப்பட்டுள்ளன.

**பரிந்துரைகள்:**

பாட்டாளி மக்களின் நிலையைப் பாடிய பாரதிதாசன் கருத்துக்களை பாப்லோ நெரூடாவோடு ஒப்பிடலாம்.

பாரதிதாசன் கவிதைகளில்

– பேச்சுக் கவிதை (Spoken Poetry)
– செயல்பாட்டுக் கவிதை (Functional Poetry)
– நாடகக் கவிதை (Dramatic Poetry) போன்றவற்றையும் ஆராயலாம்.

ரூசோ – பாரதிதாசனை நால்வகைப் பாகுபாட்டில் ஒப்பிட்டுப் பாட்டாளி மக்களின் நிலையை ஆராயலாம்.

**கட்டுரைக்குப் பயன்பட்டு நூல்கள்:**


1. பாரதிதாசன் கவிதைகள் முழுவதும் – மணிவாசகர் பதிப்பகம், சென்னை, பதிப்பு, 1992
2. அழகின் சிரிப்பு – மணிவாசகர் பதிப்பகம், சென்னை பதிப்பு, 1994
3. கா. செல்லப்பன் – விடுதலைச்சிட்டும் புரட்சிக்குயிலும் – என்.சி.பி.எச்., சென்னை, பதிப்பு, 1993
4. பெ. சுபாசு சந்திர போசு – பாரதிதாசனும் தமிழியமும், சுபாலிகா பதிப்பகம், திருச்சி, நான்காம் பதிப்பு, 1998
5. பெ. சுபாசு சந்திர போசு – பதிவும் பார்வையும், என்.சி.பி.எச்., சென்னை, முதற்பதிப்பு, 1997.

# 8.பாரதிதாசன் கதைக்காவியங்களில் அரசியல் சமத்துவம்

மு.அருணாசலம்

"'புதியதோர் உலகு செய்ய"க் கவிதை பாடியவர் பாரதிதாசன். நிகழ்கால வாழும் சமுதாயத்தை மாற்றியமைப்பதன் மூலம் புதிய உலகை உருவாக்க முடியும் என்று தன் கவிதை வரிகளால் உலகிற்கு உரத்துச் சொன்னவர். இத்தகைய சமுதாய மாற்றமைப்பிற்காக உலக வரலாற்றில் முதன்முதலில் குரல் எழுப்பியவர் பிரெஞ்சுத் தத்துவஞானி ரூசோ. இவருடைய "சமுக ஒப்பு நெறி" என்னும் நூல் பிரெஞ்சு சமுதாயத்தையே மாற்றியமைத்து உலக மக்களுக்குப் புதிய பாதையைக் காட்டியது. இந்த நூலில் இடம் பெற்றுள்ள முப்பெருங் கருத்துக்களில் ஒன்றுதான் சமத்துவம். ரூசோவின் சிந்தனையில் உதித்த இந்தச் 'சமத்துவ ஒளி' அக்காலத்தில் பிரெஞ்சு ஆட்சியின் கீழிருந்த புதுச்சேரிக்குள்ளும் பரவியிருந்தது. இந்தச் சமத்துவ ஒளியின் தாக்கத்தால் உந்துதல் பெற்றுக் கவிதைகள் யாத்தவர் பாரதிதாசன். இதைப் பற்றி பாரதிதாசனே

> **"இது அறிவெனத் தெரிந்த நாள்முதல் புதுவையில்**
> **சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவம்**
> **மூன்றும் என்னுயிர் உணர்வில் ஊறியவை"**

என்று கூறியிருப்பதன் மூலம் அறியலாம். இந்த ஆய்வுக் கட்டுரை ரூசோ கூறிய அரசியல் சமத்துவக் கோட்பாடுகள் எங்ஙனம் பாரதிதாசன் படைத்த கதைக் காவியங்களில் மனிதநேயத் தன்மையோடு செல்வாக்கு பெற்றுள்ளது என்பதை ஆராய்கின்றது.

## பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சின் நிலை :

ரூசோ (1712–1778) வாழ்ந்த காலத்தில் பிரெஞ்சு சமுதாயம் பல்வேறு பேதங்களால் பிளவுபட்டுக் கிடந்தது. லூயி மன்னர்கள், பிரபுக்கள் ஆகியோரின் ஆடம்பர மோகங்களால் பிரெஞ்சு நாடு பொருளாதாரத்தில் திவலாகும் நிலையை எய்தியது. இத்தகைய ஆடம்பர மோகத்தையும், வெர்செய்ல்ஸ் அரண்மனைக் களியாட்டங்களையும் கண்டு மனம் வெதும்பியவர் ரூசோ. இவையெல்லாம் போதாது என்று திருச்சபை குருமார்கள் மக்களைச் 'சமய வரி' என்ற பெயரில் பிழிந்தெடுத்தனர். சாதாரண மக்களோ வரிகள் ஏதும் கட்ட முடியாமல் எத்தகைய உரிமையும் இன்றி அடிமைச்சேற்றில் உழன்று கொண்டிருந்தனர். அப்போதிருந்த பிரெஞ்சு நாட்டின் நிலை பின்வருமாறு அமைந்து இருந்தது.

"பதினெட்டாவது நூற்றாண்டில் பிரான்சில் நிலமானியச் சமுதாயம் இறுதிக்கட்டத்தில் இருந்த பொழுது அரசு, மதம், அறிவியல் அனைத்தும் ஊழல் நிறைந்து காணப்பட்டன. நீதிமன்றமும், அரசும் கொடூரமான துயரம் நிறைந்த

அடிமைத்தனமான கீழ்ப்படிதலைக் கோரின. மடலாயங்களின் போலித்தனமும், கொடூரமும் கண்மூடித்தனமான கீழ்ப்படிதலை வலியுறுத்தின. நிலவுகின்ற அனைத்துக் கருத்துக்களையும் தகர்ந்தெறிந்து விட்டு அவற்றின் அழிவின் மீது விமர்சனப்பூர்வமான புதிய விழுமியங்களுடன் கூடிய அமைப்பை நிறுவ வேண்டிய அவசியம் நேர்மையான தத்துவ நடவடிக்கையில் ஈடுபட்ட சிந்தனையாளர்களுக்கு இருந்தது"

இத்தகைய பேதம் நிறைந்த, ஊழல் நிறைந்த சமுதாய நிலையை மாற்றப் பிரெஞ்சுக்கலைக் கழகத்தைச் சேர்ந்த தத்துவஞானிகளான தீதரோ, வால்டேர், ரூசோ, டி.அலம்பர்ட் ஆகியோர்களைத் தூண்டியது. இதனை

"பிரெஞ்சு அறிஞர்கள் அனைத்து விவரங்களையும் மக்களுக்கு தொகுத்து அளிப்பதன் மூலம் மதபீடங்களினால் உருவாக்கப்பட்டு மக்களின் சிந்தனைகளை முடமாக்கியிருந்த குறுகிய பிரமைகளிலிருந்து மக்களை விடுவிக்க விரும்பினார்கள்; மூட நம்பிக்கைகளைத் தகர்த்தெறிய விரும்பினார்கள். இது அக்காலகட்டத்தில் அவர்களைப் புரட்சியாளர்களாக்கியது"

என்ற கூற்றின் மூலம் பிரெஞ்சு நாட்டின் சமுதாய அமைப்பையே மாற்றியமைத்த புரட்சியில் (1779) தத்துவஞானிகள் எடுத்துக்கொண்ட பெரும்பங்கை அறியலாம்.

மேற்கூறிய தத்துவஞானிகளில் புரட்சிக்கு முக்கிய மூலகர்த்தவாக அமைந்தவர் ரூசோ. பேதமுற்றுக் கிடந்த பிரெஞ்சு சமுதாய அமைப்புதான் ரூசோவை சமத்துவம் பற்றி அதிகம் சிந்திக்க வைத்தது, பேச வைத்தது, எழுத வைத்தது. சமுதாய விடுதலையை விரும்பிய ரூசோ சமத்துவம் குறித்து உலக மக்களுக்கு வலியுறுத்துவதில் வியப்பொன்றும் இல்லை. ரூசோவின் சமத்துவச் சித்தாந்தம் தான் காரல்மார்க்ஸிடம் சமத்துவப் பொதுவுடைமைச் சித்தாந்தமாக மாறி மலர்ச்சி பெற்றது. பொதுவாகக் கூறினால் ரூசோவின் சுதந்திரம் (Fraternity) சமத்துவம் (Equality) சகோதரத்துவம் (Fraternity) என்னும் மூன்றும் இம்மண்ணுலக அடித்தட்டு மக்களை வாழ்விக்க வந்த சித்தாந்தமாகவே கொள்ளலாம்.

## ரூஸோவும் - சமத்துவமும் :

ரூஸோ சமுதாய அடித்தட்டு மக்களிடம் அதிகாரம் செல்ல வேண்டும் என வலியுறுத்தியவர். அதற்காக அவர்கள் பெறவேண்டிய உரிமைகளாகச் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் கூறியவர். சமுதாய மாறுதலை விரும்பிய ரூசோவுக்கு சமத்துவத்தின் மீது இயல்பாகவே ஈடுபாடு இருந்தது. இதனைப் பற்றி சாமிநாதசர்மா

"ரூஸ்ஸோ என்றால் பொதுஜனம் என்று அர்த்தம். உரிமை இழந்தவர்கள், பட்டினி கிடப்போர் ஆகிய இப்படிப்பட்டவர்களுடைய திருஷ்டியிலிருந்துதான் அவன், வாழ்க்கையையும், சமுதாயத்தையும் நோக்கினான். அவன், அரசியல்

வேற்றுமைகளுக்கு மேலாகச் சமுதாய வேற்றுமைகள் இருப்பதை நோக்கினான். சுதந்திரத்தைப் போலவே சமத்துவத்தையும் அவன் விலைமதிப்புடையதாகக் கருதினான்" என்று கூறியிருப்பதன் மூலம் ரூஸோவுக்குச் சமத்துவத்தின் மீது இருந்துள்ள ஈடுபாடு புலப்படும். மக்களிடையே சமூக ஒப்புநெறி நிலவும் போதுதான் சமத்துவம் மலர முடியும் என்று நம்பிக்கை கொண்டவர் ரூஸோ. தனது சமூக ஒப்புநெறி என்னும் நூலில் இது பற்றி

"சமூக ஒப்புநெறி, குடிமக்களிடையே ஏற்றத் தாழ்வின்றிச் சரிசமமான நிலைமையை வகுக்கின்றது. யாவரும் ஒரே வகை நிபந்தனைகளை ஏற்கின்றார்கள்; ஒரேவகைத்தான உரிமைகளைத் துய்க்கின்றார்கள் என்பதாம்"

என்று கூறியிருப்பதன் மூலம் இதனை அறியலாம். மேலும், சமத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து ரூஸோ.

"அமைதி, இசைவு, சமத்துவம் ஆகிய பண்புகளின் முன் அரசியல் சூழ்ச்சிகளோ, மாய்மாலங்களோ தலைகாட்ட முடியாது" என்று கூறியிருப்பதன் மூலம் சமத்துவ உலகில் சூழ்ச்சிகளுக்கோ, பேதங்களுக்கோ இடமில்லை என்பதைப் புலப்படுத்தியுள்ளார்.

## ரூசோ-வலியுறுத்தும் மூன்று சமத்துவங்கள் :

ரூசோ 'சமூக ஒப்பு நெறி' என்னும் நூலில் மூன்று விதமான சமத்துவங்களை வலியுறுத்துகின்றார். அவை வருமாறு:

1. அரசியல் சமத்துவம்
2. சமூகச் சமத்துவம்
3. பொருளாதாரச் சமத்துவம்

இம்மூன்று சமத்துவங்களும் ஒரு நாட்டில் நிலவும் போதுதான் மக்கள் நல்வாழ்வு பெறுவார்கள் என்பது ரூசோவின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

அரசியல் சமத்துவங்களாக ரூசோ கூறுபவை :

அரசியல் சமத்துவத்தில் ரூசோ பின்வரும் நிலைகளைக் கூறுகின்றார்.

மக்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கிடையே நிலவ வேண்டிய உறவு முறை

## மக்களும் - இறையாண்மையும்

தனி மனிதனுக்கும், சமத்துவத்துக்கும் இடையே உள்ள உறவு.
சமத்துவத்திற்கு எதிரான அரசை மாற்றும் அதிகாரம்
அடிமை ஆட்சியும் – மக்களும்.
மன்னர்களின் அதிகாரக்குவிப்பை எதிர்த்தல்
ஆட்சித்தலைமையின் இயல்பு

ஆட்சித் தலைமை பின்பற்ற வேண்டிய நடுவு நிலைமை

சமத்துவமும் – சட்ட ரீதியான பாதுகாப்பும்

சமத்துவம் குலைதல்

குடியரசு ஆட்சியில் சமத்துவம்

சட்டமியற்றும் அவைகளில் சமத்துவம்.

இவ்வாறு அரசியல் சமத்துவத்துவத்தில் நிலவ வேண்டிய நிலைகள் குறித்துக் கூறுகின்றார் ரூசோ.

## பாரதிதாசனும் - சமத்துவமும் :

பாரதிதாசனுக்குச் சமத்துவக் கொள்கையில் இயல்பாகவே ஈடுபாடு உண்டு.

**"எல்லோரும் ஓர்குலம் எனப்பாடல் வேண்டும்;**
**எல்லோரும் பொதுவாய் இன்புறல் வேண்டும்;**
**உயர்வு தாழ்வுகள் ஒழிந்திட வேண்டும்.**

**.................................**

**யார்க்கும் கல்வி ஈந்திடல் வேண்டும்**
**தொழிற்கல்வி எங்கும் தோன்றிடல் வேண்டும்.**
**சுதந்திரம் சமத்துவம் சகோதரத்துவமெனும்**
**இதந்தரு பதவி எவர்க்கும் வேண்டும்"**

என்று தன்மான இயக்கக் கொள்கைகளை மக்களுக்குக் கூறும் போது கூட பிரெஞ்சுக் கோட்பாடுகளை முன்னிறுத்திப் பாடுவதன் மூலம் சமத்துவக் கோட்பாட்டின் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாடு புலப்படும். பாரதிதாசன் தந்தை பெரியார் நடத்திய தன்மான இயக்கத்திற்கு வருவதற்கு முக்கியக் காரணமாய் இருந்தது சமதர்மக் கோட்பாடே. இது குறித்து மன்னர் மன்னர் ஒரு பேட்டியில்,

"அந்நாளில் பாண்டியில் கிருஸ்துவக் குருமார்களின் ஆதிக்கம் இருந்தது. பாண்டிச்சேரி ஒரு பிரெஞ்சுக்காலனியாக இருந்தது. தனி வாக்காளர்பட்டியல் இருந்தது. முதல் பட்டியலில் உள்ளவர்கள் கூடுதலான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கலாம். இதரர்களுக்கோ அந்த உரிமையில்லை. அவர்கள் குறைவான பிரதிநிதிகளையே தேர்ந்தெடுக்க முடியும். இந்தப் பேதத்தை எதிர்த்து பாரதிதாசன் அவர்கள் கிளர்ச்சி செய்தார்கள். இந்தக் கிளர்ச்சிக் காலத்தில் தான் தந்தை பெரியார் அவர்கள் சேரன் மகாதேவி கிளர்ச்சியை நடத்தி வந்தார்.

அதே போல, பாண்டியில் தமிழ் ஆசிரியர்களின் பணி ஒய்வு வயது 58 என்றும், பிரெஞ்சு ஆசிரியர்களின் பணி ஒய்வு வயது 60 என்றும் இருந்தது. இதை எதிர்த்து சங்கம் வைத்துக் கவிஞர் போராடினார். அரசு ஆசிரியர் சங்கத்திற்கு தடை விதித்தது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற முழக்கங்களின் கீழ் புரட்சி கண்ட பிரான்சின் ஆட்சிக்குட்பட்டப் பாண்டிச்சேரியில் இத்தகைய பேதங்களை மட்டுமல்ல, அனைத்து ஆதிக்கங்களையும் எதிர்க்கும் மனோபாவம் கொண்டவர் பாரதிதாசன். எனவே, தந்தை பெரியாரின் சுயமரியாதை

இயக்கத்தால் ஈர்க்கப்பட்டதில் ஆச்சரியமில்லை" என்று கூறியிருப்பதன் மூலம் இதனை அறியலாம்.

பாரதிதாசனிடம் பிரெஞ்சுப் புரட்சியின் முழக்கங்களான முக்கொள்கையின் தாக்கம் பின்வருமாறு அமைந்து இருப்பதாகக் கூறலாம்.

"பிரெஞ்சு மக்களைப் பொறுத்தவரையில் சுதந்திரம் என்பது அரசியல் விடுதலை. சகோதரத்துவம் என்பது சமூகச் சமத்துவம், பாரதிதாசனைப் பொறுத்தவரையில் சுதந்திரம் என்பது மக்கள் குடியரசை நிறுவுதல், சமத்துவம் என்பது சமூகப் பொருளியல் சமத்துவமாகும். சகோதரத்துவம் என்பது மனிதநேயத்தை உள்ளடக்கிய சாதிமுறையற்ற சமுதாயத்தைக் காணலாகும்"

இனி, ரூசோ வலியுறுத்திய மூன்று சமத்துவங்களில் அரசியல் சமத்துவம் பாரதிதாசனின் கதைக் காவியங்களில் பெற்றுள்ள பரிணாமங்களைக் காண்போம்.

**அரசியல் சமத்துவம் :**

அரசியல் சமத்துவம் பற்றி சுபாஷ் கஷ்யப்,

"குடிமக்கள் அனைவரும் எவ்வித வேறுபாடும் இன்றி அரசியல் உரிமைகளை அனுபவிக்கவும், அரசாங்க நடைமுறைகளில் பங்கேற்கவும் சமஉரிமை உண்டு" என்று கூறுகின்றார்.

பாரதிதாசன் படைத்த கதைக் காவியங்களில் அரசியல் சமத்துவத்தை வலியுறுத்தும் காவியங்களாகப்

**புரட்சிக்கவி**
**வீரத்தாய்**
**கடல்மேற்குமிழிகள்**
**குறிஞ்சித்திட்டு**
**காதலா? கடமையா?**
**பாண்டியன் பரிசு**
**தமிழச்சியின் கத்தி**

ஆகியவற்றைக் கூறலாம். அரசியல் சமத்துவ நிலைகளாக ரூசோ கூறியவைகள் கதைக் காவியங்களில் இடம் பெற்றுள்ள பாங்கை இனிக் காண்போம்.

மக்கள் மற்றும் ஆட்சியாளர்களுக்கிடையே நிலவ வேண்டிய உறவு முறை :

ரூசோ ஒரு நாட்டு மக்களுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இடையே நிலவ வேண்டிய உறவு நிலை பற்றி

"பண்பு வாய்ந்த ஒரு சமூகத்தின்மீது ஆட்சி செலுத்துவதென்பதும் எப்போதும் பேரளவு மாறுபட்டேயிருக்குமன்றோ? சிதறிக்கிடந்த எண்ணிறந்த மக்களை தொடர்ந்து ஒருவன் தொழும்பர்களாய் நடத்தவியலும் என்றாலுமே, இது ஒரு

தலைவன், அவனுடைய அடிமைகள் என்ற நிலையைத்தான் குறிக்கும். ஒரு நாட்டு மக்கள், அவர்களை ஆள்பவன் என்ற உறவைச் சுட்டவே சுட்டாது. வெறும் ஒரு சந்தைக்கூட்டம் போன்றதேயாகும்; ஒப்புறவு கொண்ட சேர்க்கைக் குழுவாகாது. பொதுநலம் என்ற நோக்கத்திற்கு இடமில்லை. அரசியல் உருவமும் அங்குக் காண்பதற்கில்லை" என்று கூறியிருப்பதன் மூலம் அரசியலில் மக்களுக்கும், அதிகார வர்க்கத்திற்கும் இடையே எழும் ஆண்டான்–அடிமை மனப்பான்மையால் ஒரு நாடு சிதைவடையும் என்பதை உணர்த்துகின்றார். மேலும், இந்தச் சமமின்மையை நீக்கி பொதுநல நோக்கோடு மன்னன், மக்களை காப்பாற்றி வழிநடத்திச் செல்ல வேண்டும். இந்நோக்கு இன்றி ஆட்சியாளர்கள் அதிகாரம் கொண்டு மக்களை அடக்கி ஆண்டால் புரட்சி ஏற்பட்டு அவனுடைய சாம்ராஜ்யம் சரிய நேரும் என்பதே மேற்கூறிய கருத்தின் சாரம்.

பாரதிதாசன் படைத்த "புரட்சிக்கவி" யில் மன்னன் சுயநலநோக்கு கொண்டு மக்களை அடக்கி ஆள்வதை உதாரன் வழியாக

**"மாமயில் கண்டு மகிழ்ந்தாடும் முகில்**
**வார்க்கும் மழைநாடா! - குற்றம்**
**ஆம் என்று நீயுரைத்தால் குற்றமே! குற்றம்**
**அன்றெனில் அவ்விதமே"**

**"..............**
**ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்**
**புலி வேஷம் போடுகின்றான்! பொது மக்கட்குப்**
**புல்லளவு மதிப் பேனும் தருகின்றானா?"**

**"ஒரு மனிதன் தேவைக்கே இந்தத்தேசம்**
**உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்றாம்!"**

***"..................சிரம் அறுத்தல் வேந்தனுக்குப் பொழுது போக்கும்***
***சிறிய கதை; நமக்கெல்லாம் உயிரின் வாதை!"***

என்று மன்னனின் சுயநல ஆட்சியைக் காட்டுகின்றார். இத்தகைய சுயநல ஆட்சிக்கு உதாரன் மூலம் தூண்டப்பட்ட மக்கள் முடிவு கட்டி அரசியல் சமத்துவத்தைப் பெறுகின்றனர்.

"வீரத்தாயில்" சுதர்மன் அடிமைப்பட்ட மக்கள் ஒருநாள் பொங்கி எழுவார்கள் என்பதை

**"அக்கிரமம் சூழ்ச்சி அதிகாரப் பேராசை**
**கொக்கரிக்க கண்ட குடிகள் இதயந்தான்**
**மானம் உணர்ந்து, வளர்ந்து, எழுச்சியுற்றுக்**
**கானப் புலிபோல் கடும் பகைவர் மேற் பாயும்!"**

என்ற கவிதை வரிகள் மூலம் சொல்லுகின்றான். இக்காவியத்தின் இறுதியில், சுதர்மனால் நாட்டு மக்களுக்கு அரசியல் சமத்துவம் தரப்படுகின்றது.

"கடற்மேற் குமிழிகள்" காவியம் முழுவதும் மக்களின் சமத்துவ உரிமைக்கு முக்கியத்துவம் தந்து படைக்கப்பட்டுள்ளது. புலித்திறலும், அவன் மனைவி மன்னியும் வருணபேத ஆட்சி மூலம் மக்களை அடிமைகளாக நடத்துகின்றனர். இத்தகைய வருணபேத ஆட்சிக்கு எதிராகப் போராடும் மன்னனின் தம்பி செம்மறித்திறல் மூலம்

"ஆள்பவர் சிற்சிலர்! ஆட்பட்டிருப்பவர் பல்லோர் - எனில்
அல்லல் அடைபவர் அப்படியே என்றும் நில்லார்"
"இந்த நாடு பொதுமக்கள் சிறையே!
எவரும் நிகரென்ற பொதுவுரிமை தனைப்
பொந்தில் ஆந்தைநிகர் மன்னன் பறித்தான்
போரின் மறவரே உங்களின் துணை யினால்
கந்தையின்றி உணர்வின்றிப் பொதுவினர்
காலந் தள்ளி வருவது கண்டிரோ?
இந்த நாடு பொதுமக்கள் நாடன்றோ?
நீவிரெல் லீரும் இந்நாட்டு மன்னரே?
மன்னராகப் பிறந் திட்டோம் என்கின்றார்
மக்கள் ஆட்படப் பிறந்தவர் என் கின்றார்
இன்னவர்க்கு நுந்துணை இல்லையேல்
மன்னர் எங்கே, பெரும் படை மறவரே?
இந் நிலத்துப் பெருமக்கள் ஓர் கடல்
இடர் செய் மன்னவர் அக்கடற் மேற் குமிழிகள்"

என்ற புலித்திறலின் வருணபேத அடிமை ஆட்சிக் காட்டப்படுகின்றது. இறுதியாகப் புலித்திறல், மற்றும் வருணபேத ஆட்சி நிலைக்கத் திறல் நாட்டைக் கைப்பற்றியப் பெருநாட்டு மன்னனின் ஆட்சி ஆகியவை மக்களால் வீழ்த்தப்படுகின்றது.

"குறிஞ்சித்திட்டில்" மக்கள் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும் வாழ்கின்றனர். ஆரிய மங்கை விநோதையின் வரவால் குறிஞ்சித் திட்டில் மதமும், சாதியும் பரப்பப்படுகின்றது. இதனால், குறிஞ்சித்திட்டில் வாழும் மக்களின் சுதந்திரமும், சமத்துவமும் பாதிக்கப்படுகின்றது. சேந்தன் இதனை

"தோழர்களே! மன்னவனும் விநோதை தானும்
தூய்மையிலா மற்றவரும் குறிஞ்சித்திட்டு
வாழாத வகைபுரிந்து வரு கின்றார்கள்;
மாற்றியமைத் திடவேண்டும் ஆட்சி தன்னை;
ஏழைமுதல் எவருமுணர்ந்தி டுதல் வேண்டும்;
பெரும்பாலோர் நம்கருத்தை ஏற்க வேண்டும்"
– என்று கூறியிருப்பதன் மூலம் அறியலாம்.

காதலா? கடமையா? என்னும் காவியத்தில் கொன்றை நாட்டின் அடிமை நிலை பேசப்படுகின்றது. கொன்றை நாட்டை அடிமைப்படுத்திய மாழைநாட்டு மாப்பேரரசன், மகிணன், வாட்பொறை, தாரோன், கிள்ளை, தங்கவேல் முதலிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அடிமை நிலையில் இருக்கும் கொன்றை நாட்டை மீட்கப் புரியும் தியாகத்தால் மனம்மாறி விடுதலை தருகின்றான். இதனை மாப்பேரரசன்

**"நாங்கள் நல்கிய தல்ல அவ் விடுதலை**
**நீங்கள் பெற்றீர் என்று நிகழ்த்தினான்**
**......**
**விடுதலை தந்தவன் வேந்தன் நானோ?**
**விடுதலை உள்ளமே விடுதலை விளைக்கும்"**

என்று கூறுவதன் மூலம் விடுதலை வேட்கை உள்ளம் படைத்த மக்களே போராடி விடுதலை உரிமையைப் பெற்றனர் என்கின்றான். இறுதியாகக் கொன்றை நாட்டில் சமத்துவம் நிலைநாட்டப்படுகின்றது.

'பாண்டியன் பரிசில்' வேழ நாட்டு மன்னன் கதிர் நாட்டின் மீது படையெடுத்து வருகின்றான். இப்படையெடுப்பிற்கு கதிர்நாட்டின் படைத் தலைவன் நரிக்கண்ணன் காரணமாக இருக்கின்றான். கதிர்நாட்டின் அரசனும், அரசியும் நரிக்கண்ணனால் சூழ்ச்சியால் கொல்லப்படுகின்றனர்.

இதனால் கதிர் நாட்டு இளவரசி அன்னம் அனாதையாகின்றாள். வேழநாட்டு அரசனோ பாண்டிய மன்னன் கதிர்நாட்டுக்குக் கொடுத்த பேழையைக் கொண்டு வருபவர்களுக்கு கதிர் நாட்டை ஆளும் உரிமையை அளிப்பதாக அன்னத்திடம் உறுதிமொழி கூறுகின்றான். அன்னத்தை அடையவும், ஆட்சி உரிமையைப் பெறவும் நரிக்கண்ணன் காணாமல் போன பேழையைத் தேடும் சாக்கில் மக்கள் மத்தியில் அடக்குமுறைகளைக் கையாள்வதோடு மூடநம்பிக்கைகளையும் பரப்புகின்றான். இறுதியாகத் திருடர் தலைவன் வீரப்பனால் பேழை நரிக்கண்ணனை எதிர்த்துப் போராடும் வேலனுக்கு தரப்படுகின்றது. இதனால் வேலன் அன்னத்தை மணந்து மீண்டும் தமிழர்களின் ஆட்சியை மலரச் செய்கின்றான். வேடமணிந்து வந்த நரிக்கண்ணனும் அவன் கூட்டமும் கொல்லப்படுகின்றது. வேலனால் மக்களுக்கும், அன்னத்திற்கும் மீட்சி கிடைக்கின்றது. இதனை

**"மீட்படையா மக்கட்கு மீட்பும் சற்றும்**
**விழிப்படையா மக்கட்கு விழிப்பும் நல்கத்**
**தோட்படையால் வையத்தை வெல்லும் வேலன்**
**துணைப்படையால் அன்னத்துக் கமைந்தான்"**

என்ற கவிதை வரிகள் மூலம் அறியலாம்.

"தமிழச்சியின் கத்தி" என்னும் கதைக் காவியத்தில் செஞ்சித் தேசிங்கின் வரம்பற்ற வடவர் ஆட்சியின் வீழ்ச்சி காட்டப்படுகின்றது. இந்த ஆட்சியின்

வீழ்ச்சிக்கு தேசிங்கின் படைத்தலைவன் சுதரிசனால் கற்பு சூறையாடப்பட்ட சுப்பம்மா காரணமாக அமைகின்றாள். ஒழுக்க கேடுகள் நிறைந்துள்ள தேசிங்கின் ஆட்சியைப் பற்றி மக்களிடையே எடுத்துரைத்து "விழிப்புணர்வை உண்டாக்குகின்றாள் சுப்பம்மா. இதனை,

**"ஆட்சி எனில் ஐம்பொறியை ஆள்வ தாகும்!**
**அடுக்காத செயல் செய்தோன் ஆளக்கூடும்;**
**காட்சியிலே காணு முகில் ஒவி யந்தான்**
**கலைந்துவிடும் ஒரு நொடிக்குள்; நிலைப்பதில்லை!"**

என்று கூறுவதன் மூலம் ஒழுக்ககேடுகள் மலிந்துள்ள கொடுமையான ஆட்சியை மக்கள் அழித்தொழிப்பார்கள் என்கிறாள்.

மேற்கூறியக் கதைக்காவியங்களில் மக்களை மன்னர்கள் அடிமைகளாக வைத்திருப்பது காட்டப்படுகின்றது. ரூசோ கூறிய பொதுநலத்தை நாட விரும்பிய மக்கள் இந்த அடிமைத் தளைகளை முறித்து இறுதியாக நல்வாழ்வு பெறுவதாக பாரதிதாசன் கதைக்காவியங்களின் முடிவுகளை அமைத்துள்ளார்.

**மக்களும் - இறையாண்மையும் :**

அரசியலில் முடிவெடுக்கும் அதிகாரம் மக்களின் கைகளில் தான் உள்ளது. இதனைக் கட்டுப்படுத்தும் எந்தத்தளைகளுக்கும் சமூக ஒப்பு நெறியில் இடம் இல்லை என்கிறார் ரூசோ. இது குறித்து அவர்

"மக்கட்குழு அனைவரையும் கட்டுப்படுத்தும் வகையில் ஒரு மூலாதாரமான நியதி இருக்கமுடியாது என்பதே" அத்தகைய நியதி இல்லவுமில்லை. சமூக ஒப்பு நெறியும் அதற்கு இடந்தரவில்லை" என்று கூறியிருப்பதன் மூலம் அறியலாம்.

பாரதிதாசன் இறையாண்மை மக்களிடம் தான் உள்ளதென்பதைப் புரட்சிக்கவி, கடல்மேற்குமிழிகள், வீரத்தாய், காதலா ? கடமையா ? குறிஞ்சித்திட்டு ஆகிய காவியங்களில் வெளிப்படுத்துக்கின்றார்.

"புரட்சிக்கவியில்" மன்னனால் தண்டனை அளிக்கப்பட்ட உதாரன் தன்னை விசாரித்துத் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் பொதுமக்களிடம் தான் உள்ளது என்றும், மன்னனுக்கு என்னை விசாரிக்கும் அதிகாரம் இல்லை என்றும் கூறுகின்றான். இதனை

**"அரசனுக்கும் எனக்குமொரு வழக்குண்டாக**
**அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்பதே தான்**
**சரியென்றேன், ஒப்பவில்லை! இவளும் நானும்**
**சாவதென்றே தீர்ப்பளித்தான்; சாக வந்தோம்!"**

என்ற வரிகள் மூலம் இறையாண்மை அதிகாரம் மக்களிடம் தான் உள்ளது என்பதைப் புலப்படுத்துகின்றான்.

"கடல் மேற்குமிழிகளில்" மாளாப்பெருங்கடலான மக்களிடம்தான் இறையாண்மை உள்ளது என்றும், கடல்குமிழிகள் ஆன மன்னர்களிடம் இல்லை என்றும் கூறப்படுகின்றது. திறல் நாட்டின் வருணபேத ஆட்சி வீழ்த்தப்பட்டப் பிறகு செம்மறித்திறல் மக்களை நோக்கி

"................................
**திருக்கோயில் தொழிற்சாலை! பார்ப்பனரும், கையில்**
**செங் கோலேந்தும் பிறரும் மக்களைச் சார்ந்தோரே!**
**பெருவாழ்வுக் கிவையெல்லாம் அடிப்படைத் திட்டங்கள்**
**பிறிதுள்ள சட்டங்கள் அறிஞர்கள் அமைப்பார்கள்**
**வருநாளில் குடிமக்கள் படியினரின் தேர்தல்;**
**வகுப்பதற்கே இன்று சிறு குழு அமைப்பீர்**" என்றான்

என்று கூறியிருப்பதன் மூலம் இறையாண்மை அதிகாரம் மக்களிடம் வழங்கப்பட்டதை அறியலாம்.

'வீரத்தாயில்' காங்கேயனின் அக்கிரம ஆட்சி சுதர்மனால் வீழ்த்தப்பட்ட பிறகு மக்களிடம் இறையாண்மை அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இதனை,

"**எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமை எலாம்**
**எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!**"

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

காதலா ? கடமையா ? என்றும் காவியத்தில் மாப்பேரரசனிடம் அடிமைப்பட்டுக் கிடந்த கொன்றை நாட்டு மக்களிடமே இறையாண்மை அதிகாரம் சேர வேண்டுமென்று மகிணன், வாட்பொறை, தாரோன், தங்கவேல், கிள்ளை ஆகியோர் போராடுகின்றனர். மகிணன் தங்கவேலிடம் இறையாண்மையுடைய மக்களாட்சி கொன்றை நாட்டில் மலர வேண்டும் என்கின்றான். இதனை

"**ஓர்உளம் பெருநாட்டை ஓம்புதல் ஒண்ணமோ?**
**சீருளம் ஒருநாள் தீயுளம் ஆகும்**
**ஆதலால்**
**பல்லார் கூடி நல்லன நாடி**
**அல்லவை நீக்கும் ஆட்சியே ஆட்சியாம்**"

என்று கூறியிருப்பதன் மூலம் மக்கள் கையில் அதிகாரம் உள்ள இறையாண்மை ஆட்சியை வரவேற்பதை அறியலாம்.

"குறிஞ்சித்திட்டில்" ஆரிய மங்கை விநோதையிடம் சில்லிமூக்கன் மக்களிடமே இறையாண்மை உள்ளது என்பதை

"**அரசனின் அதிகா ரந்தான்**
**அரைநாளில் மாறக்கூடும்;**
**அரசனாய் இருப்போன் நாளை**
**ஆண்டியாய் அலையக் கூடும்;**

**அரசனின் அதிகாரத்தை**
**அறத்தொடும் ஒத்துப் பார்த்துச்**
**'சரி இரு; கீழி றங்கு**
**சடுதியில்' என்பார் மக்கள்"**

என்ற கவிதை வரிகள் மூலம் ஆட்சியதிகாரத்தை மாற்றும் அதிகாரம் மக்களுக்கு உண்டு என்பதை தெரிவிக்கின்றார்.

## தனிமனிதனுக்கும், சமத்துவத்திற்கும் இடையே உள்ள உறவு

மக்கட் சமுதாயம் என்பது தனி மனிதர்கள் இணைவதால் உருவாக்கப் படுவது. இந்த மக்கட் சமுதாயத்தில் தனிமனிதன் ஒருவனுக்குத் தீங்கிழைப்பது மக்கட்குழு அனைத்திற்கும் தீங்குழைப்பதற்கு ஒப்பாகும். இதனால், சமத்துவம் பாதிக்கப்படுவதுடன் ஆட்சி முறையும் கேள்விக்கு உள்ளாக்கப்படுவதாக ரூசோ கூறுகின்றார். இதனைப் பற்றி "ஒழுங்குபாடற்றுச் சிதறிய கூட்டமாயிருந்த மக்கள் இவ்வகையில் ஒன்றித்து ஓர் அரசியல் குழுவாய் உருவாகிய போது அதைச் சார்ந்த தனியொருவனுக்குத் தீங்கிழைப்பதும் அந்த குழு அனைத்திற்குமே தீங்கிழைப்பதாகும். அவ்வாறு தீங்கிழைக்கப் புகுமொருவன் அதன் அங்கத்தினரின் சீற்றத்துக்கு உள்ளாவது இயல்பேயன்றோ? இருபாலர்க்கிடையே அமைந்த ஓர் உடன்பாட்டைத் தழுவி ஒருவருக்கொருவர் உதவிபுரியும் வகையில் கடமையுணர்ச்சியும் நன்னல ஆர்வமும் திகழ வேண்டும். அப்போதுதான், தனிமனிதன், குழுமை வாழ்க்கையிலொருவன் என்ற இருவகைப் பொறுப்புக்களும் இணைந்து ஒருமுகப்பட்டு இயங்குவதினால் விளையும் நலன்கள் யாவும் கைகூடும். தனிமனிதர்களைக் கொண்டே ஆட்சித் தலைமை உருவாகியிருப் பதால் இவ்விருபாலருடைய நலனுக்கு முரணான ஒன்று செயற்படாது; செயற்படவும் இயலாது" என்று கூறியிருப்பதன் மூலம் அறியலாம்.

பாரதிதாசன் புரட்சிக்கவி, தமிழச்சியின் கத்தி ஆகிய இரு காவியங்களில் தனி நபர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் குறித்துப் பேசுகின்றார்.

"புரட்சிக்கவியில்" மன்னன் மகள் அமுதவல்லியைக் காதலித்த குற்றத்தால் உதாரனுக்கு கொலைத்தண்டனை விதிக்கப்படுகின்றது. நியாயம் அற்ற மன்னனின் தீர்ப்பை எதிர்த்து அமுதவல்லி பொதுமக்களிடம் நீதிக் கேட்கின்றாள். இதனால், மன்னனின் ஆட்சிமுறை குறித்து மக்களிடம் சந்தேகம் எழுகின்றது. தனியொருவனுக்கு இழைக்கப்படும் தீங்கு பின்பு சமுதாயத்திற்கே இழைக்கப்படும் என்பது உதாரன் மூலம் இக்காவியத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது. இதனை,

**"ஒரு மனிதன் தேவைக்கே இந்தத் தேசம்**
**உண்டென்றால் அத்தேசம் ஒழிதல் நன்றாம்!**
**இருவர் இதோ சாகின்றோம்! நாளை நீங்கள்**
**இருப்பது மெய் என்றெண்ணியிருக்கின்றீர்கள்"**

என்று கூறுவதன் மூலம் அறியலாம். உதாரனுக்கு இழைக்கப்பட்டத் தீங்கு

மன்னராட்சி வீழ்த்தப்படுவதன் மூலம் சரிசெய்யப்படுகின்றது. இதனால் சமுதாயப் பொதுநலம் கட்டிக் காக்கப்படுகின்றது.

"தமிழச்சியின் கத்தி"யில் சுப்பம்மா என்ற பெண்ணின் கற்பு வடநாட்டு அரசனான தேசிங்கின் படைத்தலைவன் சுதரிசனால் சூறையாடப்படுகின்றது. இதனால், சுப்பம்மாவின் சத்திக்கு இரையாகின்றான் சுதரிசன். "நீதிக் கேட்ட சுப்பம்மாவுக்கு நீதி மறுக்கப்படுகின்றது. இதனால் சுப்பம்மாவின் கணவன் திம்மன் தேசிங்கைக் கொல்ல நினைத்து ஓர் படை அதிகாரியைக் கொன்று சாகின்றான். அநீதி இழைக்கப்பட்ட சுப்பம்மாவின் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டுத் தேசிங்கின் அரண்மனைக்கு இழுத்து வரப்படுகின்றாள். அங்கே அவளை சித்திரவதை செய்து கொல்லுமாறு தேசிங்கு ஆணை இடுகின்றான். இது கேட்டச் சுப்பம்மா அங்கேயே உயிரை விடுகின்றாள். தனி மனிதப் பெண்ணுக்கு இழைக்கப்பட்ட இத்தீங்கை சரி செய்ய மக்கட் குழுப் பொங்கி எழுகின்றது. தனிமனிதப் பெண்ணின் நலத்திற்கு பாதுகாப்பு அளிக்காத தேசிங்கின் ஆட்சி வீழ்த்தப்படுகின்றது. இதனை

**"பேச்சில்லை! கேட்கவில்லை எதையும் யாரும்**
**பெருமன்னன் நடுக்கமுறும் புதுமை கண்டார்!**
**ஏச்சுகள், கொடுஞ்செயல்கள் எனக்கேன் என்றார்.**
**இரக்கத்தை 'வா' என்றான். அன்பை நோக்கி**
**ஆச்சியே எனக்கருள்வாய் என்று கேட்டான்**
**'அறமேவா' என அழைத்தான்! அங்கே வேறு**
**பேச்சில்லை கேட்கவில்லை எதையும் யாரும்!**
**பிறகென்ன! தேசிங்கு தேசிங் கேதான்!"**

என்ற கவிதை வரிகளில் உணர்த்துகின்றார் பாரதிதாசன். இவ்விரு காவியங்களில் 'தனி மனிதனுக்கு தீங்கிழைப்பது சமுதாயத்திற்கே தீங்கிழைப்பதற்கு ஒப்பாகும்' என்ற ரூசோவின் கருத்து புலப்படுத்தப் படுகின்றது.

## சமத்துவத்திற்கு எதிரான அரசை மாற்றும் அதிகாரம் :

சமத்துவச் சமூகத்தில் வாழும் குடிமகன் ஒருவன் பொதுநலத்திற்கு மாறாகச் செயற்படும் போது அவனை வற்புறுத்தி பணிய வைக்கும் உரிமை சமூகத்திற்கு உண்டு. ஆட்சித் தலைவனே பொதுநல சமத்துவத்திற்கு எதிராகச் செயற்படும்போது அவனை மாற்றும் அதிகாரம் மக்களுக்கு உண்டு என்று ரூசோ மொழிகின்றார். இதனை

"பொது நலத்தின் பொருட்டு முடிவாகத் தேர்ந்த ஒரு தீர்மானத்தைப் புறக்கணிக்கும் ஒருவனை வற்புறுத்திப் பணிய வைக்க வேண்டியது சமூகத்தின் பொறுப்பாகும் என்ற குறிப்பு ஒப்பு நெறியில் கரந்து நிற்கின்றது. அவ்வாறின்றேல் "சமூக ஒப்புநெறி என்பது ஒரு பத்ததியைச் சுட்டுவதோடு நிற்கும்" என்று கூறுவது மேற்சொன்னக் கருத்தை புலப்படுத்தும்.

"புரட்சிக்கவியில்" பொதுநலத்திற்கு எதிராகச் செயற்படும் மன்னனை பொதுமக்கள் ஆட்சி பீடத்தில் இருந்து அகற்றுகின்றனர். இதனால் பொதுமக்களின் தனித்த நலன்கள் பாதுகாக்கப்பட்டு சமத்துவம் நிலைநாட்டப்படுகின்றது.

**"புவியாட்சி தனி உனக்குத் தாரோம் என்று**
**போயுரைப்பாய்!" என்றார்கள்! போகா முன்பே,**
**செவியினிலே ஏறிற்றுப் போனான் வேந்தன்!"**

என்ற வரிகள் மூலம் இதனை அறியலாம்.

"வீரத்தாயில்" மக்கள் நலத்திற்கு எதிராகச் செயற்பட்ட கொடுங்கோலன் காங்கேயனின் ஆட்சி வீழ்த்தப்படுகின்றது. மக்கள் எல்லா நலங்களும் பெற்றுச் சமத்துவக் குடியரசை அமைக்கின்றனர். இதனை,

**"எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும் உடைமை எலாம்**
**எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே!**
**எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்த்திடுக!**
**எல்லார்க்கும் நல்ல இதயம் பொருந்திடுக!**
**வல்லார்க்கும் மற்றுள்ள செல்வர்க்கும் நாட்டுரிமை**
**வாய்க்கரிசி என்னும் மனப்பான்மை போயொழிக"**

என்ற கவிதை வரிகள் மூலம் 'சமூக ஒப்புநெறி' நிலை நாட்டப்பட்டதைக் காட்டுகின்றார் பாரதிதாசன்.

'கடற்மேற் குமிழிகளில்' மக்களை வருணபேதத்தால் பிரித்து ஆண்டு வந்த புலித்திறலின் ஆட்சியும், மனு வகுத்த வருணத்தைக் காப்பாற்றத் திறல் நாட்டின் மீது படையெடுத்து வந்த பெருநாட்டனின் ஆட்சியும், சமத்துவச் சமுதாயம் அமையப் போராடும் செம்மறித்திறல், மற்றும் வையத்திறலால் மக்கள் துணையோடு அகற்றப்படுகின்றது. திறல் நாட்டு மறவர்கள் கொதித்து எழுந்து பேதமுற்ற மன்னராட்சியை வீழ்த்திச் சமூக ஒப்புநெறியை நிலைநாட்டுவதை,

**"மக்கட் கடலில் மறுப்பவர் மறைக் குமிழிகள்**
**மறுப்பவர் மாள்க மாள்கவே - நாட்டு**
**மக்கள் உரிமைக்கு....**
**தக்கதோர் ஆட்சி மக்களின் மன்றம்**
**சரிநிகர் எல்லோரும் என்றோம்**
**பொய்க்கதை மறையெனல் புரட்டே**
**புரட்சியில் மலர்க இன்ப வாழ்வே!"**

என்ற கவிதை வரிகள் மூலம் மக்கள் நலம் காக்கப்பட்டதை அறியலாம்.

'குறிஞ்சித்திட்டில்' ஆரிய மங்கை விநோதையினால் புகுத்தப்பட்ட மக்கள் விரோத மத ஆட்சியும், வருணபேத ஆட்சியும் சேந்தன், நெடுமாறன், செழியன்

போன்ற நாட்டு விடுதலைக்காகப் பாடுபடும் போராட்ட வீரர்களால் துடைத்தெறியப்படுகின்றது. இதனை,

**“நல்லதோர் திட்டம் அமைத்தல் நம்கடன்,**
**அல்லன அனைத்தும் அழித்தல் நம்கடன்,**
**செல்வம் நாட்டிற் சேர்ப்பது நம்கடன்,**
**செந்தமிழ் காத்தல் சிறந்த கடன் நமக்கு.**
**மதம் அகன்ற சாதி மறைந்த**
**அரசு கடந்ததோர் வாழ்க்கை அமைப்பது**
**நம் கடன்! குறிஞ்சித்திட்டு**
**செம்மை எய்துக! என்றான்**
**மெய்மை வெல்க! என்றார் மக்களே”**

என்ற கவிதை வரிகள் மூலம் சொல்லியுள்ளார் பாரதிதாசன்.

காதலா ? கடமையா ? என்னும் கதைக்காவியத்தில் சுதந்திரமும், சமத்துவமும் அற்ற கொன்றை நாட்டு மக்கள் மாழைநாட்டு மாப்பேரரசனை எதிர்த்துப் போராடுகின்றனர். இதனை,

**“விரைவில் விடுதலை வேண்டும் எமக்கே**
**கற்றனர் நாட்டினர் கண்டீர் அன்றோ!**
**ஒற்றுமை உடையேயாம் உணர்ந்தீர் அன்றோ!**
**வேற்றுமைக்குள்ள வித்தும் அங் குளதோ!**
**ஆற்றுந் தொண்டெலாம் அறத்தொண் டல்லவோ?**
**மாழை நாட்டினர் வந்தபின் அன்றோ**
**ஏழைமை தன்மை எய்திற்றுக் கொன்றை”**

என்ற வரிகள் மூலம் அடிமை வாழ்க்கையில் தங்கள் நலங்கள் எல்லாம் பறி போய் விட்டதை உணர்த்துகின்றனர். இத்தகைய அடிமை வாழ்வை உடைத்து தங்கள் நலங்களை திரும்ப பெறுவதற்காகப் போராடுகின்றனர். இறுதியாக வெற்றி பெறுகின்றனர். கொன்றை நாடு அடிமை வாழ்வில் இருந்து மீட்சி பெறுகின்றது.

“பாண்டியன் பரிசில்” நரிக்கண்ணனின் வஞ்சக மற்றும் மூடநம்பிக்கை ஆட்சி அன்னம், வேலன், திருடர், தலைவன் வீரப்பன் ஆகியோரால் அகற்றப்படுகின்றது. மக்கள் விழிப்புணர்வு பெற்று தங்களுடைய நலன்களைப் பற்றிச் சிந்திக்கின்றனர். புதிய பகுத்தறிவுடன் கூடிய சமத்துவ உலகம் நிறுவப்படுகின்றது.

**“எல்லார்க்கும் எல்லாம்என் றிருப்ப தான**
**இடம் நோக்கி நடக்கின்ற திந்த வையம்;**
**கல்லாரைக் காணுங்கால் கல்வி நல்காக்**
**கசடர்க்குத் தூக்குமரம் அங்கே உண்டாம்**

**இல்லாரும் அங்கில்லை; பிறன் நலத்தை**
**எனதென்று தனியொருவன் சொல்லான் அங்கே!**
**நல்லாரே எல்லாரே அவ்வை யத்தில்**
**நமக்கென்ன கிழியட்டும் பழம்பஞ் சாங்கம்!"**

என்று கூறுவதன் மூலம் புதிய சமத்துவ உலகம் கதிர் நாட்டில் மலருகின்றதைக் காட்டுகின்றார் பாரதிதாசன்.

'தமிழச்சியின் கத்தி'யில் வடவர் எதிர்ப்பு, மத எதிர்ப்பு ஆகியவை பேசப்படுவதுடன் தமிழர்கள் போற்றிய கற்பின் சிறப்பும் போற்றப்படுகின்றது. தமிழர்களை அடிமைகளாகக் கருதி ஆட்சி செய்யும் செஞ்சியைத் தேசிங்கின் ஆட்சி சுப்பம்மா என்ற பெண்ணால் விழிப்புணர்வு பெற்ற மக்கள் வீழ்த்துகின்றனர். குடிமக்களுக்குத் துன்பம் விளைவிக்கும் ஆட்சி நிலைக்காது என்பதைச் சுப்பம்மா

**"..................**
**அறமறியான் சுபேதர் என்னைத்**
**தீண்டினான் தேசிங்க தமிழர் தங்கள்**
**மெய்யுரிமை தீண்டினான், மாய்ந்தான், மாய்வான்**
**விதிகிழித்து போயிற்று மீள் வதில்லை**

என்ற கவிதை வரிகள் மூலம் உணர்த்துகின்றாள்.

இவ்வாறு, பாரதிதாசன் மேற்கூறிய கதைக் காவியங்களில் பொதுநலச் சமத்துவத்திற்கு எதிரான அரசுகள் மக்கள் எழுச்சியால் மாற்றப்படுவதாகக் காட்டுகின்றார்.

## அடிமை ஆட்சியும் - மக்களும் :

அடிமை நிலையில் வாழ்பவர்கள் எல்லா உரிமைகளையும் இழக்கும் அவல நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இத்தகைய அடிமை வாழ்வில் அவர்கள் காண்பது வறுமையே ஆகும். எனவே, எந்நாட்டு மக்களும் என்ன விலை கொடுத்தேனும் தங்கள் சுதந்திரத்தையும், சமத்துவத்தையும் காப்பாற்றிக் கொள்ளப் பாடுபட வேண்டும். இத்தகைய அடிமை வாழ்வு குறித்து ரூசோ,

"பணிந்து நடப்பதற்கு மக்கள் வாக்குறுதியளிப்பராயின் ஒரு நாட்டுக் குடிமக்கள் என்ற சிறப்பு அவிந்துவிடும். பணியவைக்க முற்படும் ஒரு தலைவன் தோன்றுவனாயின் அக்கணமே பொதுநலத்தையே உருக்கொண்ட ஆட்சி மலையேறிவிடும். அரசியல் என்ற சிறப்பு மாய்ந்து விடும்"

என்று கூறுவதன் மூலம் அடிமை வாழ்வுக்கு இடம் கொடுப்பவர்கள் குடிமக்கள் என்னும் சிறப்பை இழக்க நேரிடும் என்று எச்சரிக்கின்றார்.

பாரதிதாசன் காதலா? கடமையா? என்னும் காவியத்தில் கொன்றை நாட்டின் அடிமை வாழ்வைக் காட்டுகின்றார். அடிமைப்பட்ட கொன்றை நாடு எப்படி வறுமையில் வாடுகின்றது என்பதை,

"அன்புடை அரசே,
நிலத்தின் வருவாய் நிறைய உண் டெனினும்
உலைக்கரிசி மக்கள் உணவுக்குப் போதா
பாலின் நுரைநிகர் பருத்தி உண்டெனினும்
மேலுக்கோர் கந்தை மிஞ்ச வில்லை
மூக்கு முனை தரையில் முட்டக் குனிந்து
புகும்குடி சைகள் நகும்படி உள்ளன
ஆதலின்
பிணிகள் பெருகின"

என்ற கவிதை வரிகள் மூலம் கொன்றை நாட்டின் அவல வாழ்வைச் சித்தரித்துள்ளார். கிள்ளை, மாப்பேரரசனை மணம் முடிக்க முன் வராத நிலையில் மாப்பேரரசன் கொன்றை நாட்டுக்கு விடுதலைப் பட்டயம் அளிக்க மறுக்கின்றான். இவனுடைய அடக்குமுறையால் கொன்றையின் சமத்துவ வாழ்வு பாதிக்கப்படுகின்றது. விடுதலை வீரர்களும் சிறையில் அடைக்கப்படுகின்றனர். மாப்பேரரசனும், ஒள்ளியோனும் கொன்றை நாட்டு மக்கள் மீது அடக்கு முறைகளை ஏவி மக்களைக் கொடுமைப்படுத்துகின்றனர். இதனை

"ஒள்ளியோய் நேற்றுமுன் உன்னை எதிர்த்துத்
துள்ளிய பலரையும் சுட்டிக் காட்டுக
படையின் தலைவனே கடிதே அவர்களை
அடைக்கச் சிறையில் அதுவும் அன்றி
வீட்டினின்று மக்கள் வெளிவரா மற்செய்
கூட்டம் எங்கும் கூடா வகைசெய்
கடைகள், தொழிலகம் கதவடைக்கச் செய்
தடவயல் உழவும் நடவா மைசெய்
ஒரு வீட்டினின்றும் மற்றொரு வீட்டுக்கொருவன்
வருத லின்றி வழுவாது பார்த்திடு
மன்னனின் ஆணை மறவேல் என்றான்"

என்று கூறியிருப்பதன் மூலம் அடிமை நாடான கொன்றையில் பொதுநல ஆட்சி துறந்த அடக்குமுறை ஆட்சி நிலவுவதையும், மக்கள் குடிமக்கள் என்னும் சிறப்பை இழந்து துயரப்படுவதையும் காட்டுகின்றார் பாரதிதாசன்.

## மன்னர்களின் அதிகாரக் குவிப்பை எதிர்த்தல்:

எல்லா உரிமைகளும் மன்னனுக்கே. மக்கள் துய்ப்பதற்கு உரிமைகளே கிடையாது என்னும் வாதத்தை ரூசோ கண்டிக்கின்றார். இதனை பல்வேறு வரலாற்றுச் சான்றுகளுடன் பின்வருமாறு விளக்கிக் காட்டுகின்றார்.

"நம் நாட்டில் மன அமைதி பெறாத 'க்ரோஷியஸ்', பிரெஞ்சு நாட்டில் தஞ்சம் புகுந்து, பதின்மூன்றாம் லூயி மன்னனுக்குப் புகழ்மாலை சூட்டி அவரது

தயவைப் பெற தம் நூலை அவருக்கு அர்ப்பணம் செய்தார். எல்லா உரிமைகளும் வேந்தனைச் சார்ந்தவையன்றி மக்களையல்ல என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பல தந்திரங்களைத் தம் நூலில் கையாண்டிருக்கிறார். இவர் நூலை மொழிபெயர்த்த பார்போராக் அவர்களும் இதே கருத்துக்கு இசை பாடியவராய் அந்நூலை இங்கிலாந்து முதலாம் ஜார்ஜ் மன்னனுக்கு அர்ப்பணம் செய்ததை அறிவோம். எல்லா உரிமைகளும், அரசனையே சார்ந்தது என்று இவர் கூறியபோது, ஜார்ஜ் ஆட்சிக்கு 150 ஆண்டுகளுக்குமுன் அங்குச் செங்கோல் செலுத்திய இரண்டாம் ஜேம்ஸ், முறைபிறழ்ந்து நடந்ததின் விளைவாக மக்களால் நாடு கடத்தப்பட்டதற்கு விளக்கம் தர வேண்டுமே! ஜேம்ஸ் மன்னன் அரச பதவியிலிருந்து தானே விரும்பு விலகினார் என்று மழுப்பினார். அப்படிச் சொல்லாவிடின் ஜேம்ஸ்க்குப்பின் பட்டத்துக்கு வந்த வில்லியம் என்பார் அந்த அரச பதவியை அடாத வழியில் பறித்தான் என்றாய் விடுமன்றோ? நடந்ததை நடந்தவாறு, உண்மைக்கு முரணன்றி இவ்விரு நூலாசிரியர்களும் கூறியிருப்பர்களாயின் அது அவர்களுக்கு நன்மதிப்பை நல்கியிருக்கும். ஆனாலோ வேந்தர்களுக்கு இழிவு தரும் உண்மையைக் கூறத் துணிவரோ? பொது மக்களையே நம்பி நாடும் நிலைமை ஏற்படுமன்றோ? இது சீர்செல்வத்தில் இட்டுச் செல்லுமோ? இராச்சியத் தூதுவர்களாகவோ, பேராசிரியர்களாகவோ பதவியளிக்கும் திறன் மக்களுக்கேது? ஓய்வுச் சம்பளம் அளிக்கும் வாய்ப்பு அவர்களுக்குக் கிடையாதே?"

என்று கூறுவதன் மூலம் சலுகைகளுக்கு ஆசைப்பட்டு வேந்தர்களுக்கே எல்லா உரிமைகளும் என்று வலியுறுத்து கின்றவர்களைச் சாடுகின்றார் ரூசோ.

பாரதிதாசன் படைத்த கதைக் காவியங்களான புரட்சிக்கவி, வீரத்தாய், கடல்மேற்குமிழிகள், குறிஞ்சித் திட்டு, காதலா? கடமையா? பாண்டியன் பரிசு, தமிழச்சியின் கத்தி ஆகிய அனைத்திலும் எல்லா உரிமைகளும் தனக்கே என்று கருதிக்கொண்டு ஆட்சி புரியம் மன்னர்களின் ஆட்சிகள் அகற்றப்பட்டு மக்களின் கையில் அதிகாரம் உள்ள அரசுகள் ஏற்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் மக்களுக்குத்தான் எல்லா உரிமைகளும் என்று கூறிய ரூசோவின் கருத்தை இக்கதைக் காவியங்கள் நிரூபிக்கின்றன.

## ஆட்சித் தலைமையின் இயல்பு:

ஆட்சி தலைமையின் இயல்பாக ரூசோ

"ஆட்சித் தலைமையின் ஒவ்வொரு செயலும், அதாவது, பொது நலத்தின் பொருட்டுத் திண்மையாகத் தேர்ந்த ஒவ்வொரு முடிபும், மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்துகிறது. மக்கள் அனைவருக்கும் சரி சமமான வாய்ப்புக்களை நல்குகின்றது. ஆட்சித் தலைவன் நாட்டுக் குடிகள் யாவரையும் முழுமொத்தமான நோக்கில் கருதுகின்றானேயல்லாது தனிப்படுத்தி எண்ணுவதில்லை. இந்தப் பல உண்மைகள் சமூக ஒப்பு நெறியின் இயல்பிலேயே அமைந்தவையாம்" என்று கூறியிருப்பதன் மூலம், மக்கள் அனைவருக்கும் சரிசமமான வாய்ப்புக்களை

வழங்குவதே ஆட்சித் தலைமையின் இயல்பாகும் என்பது தெள்ளென புலப்படுத்தப்படுகின்றது.

பாரதிதாசன் புரட்சி கவி, கடல்மேற் குமிழிகள், குறிஞ்சித்திட்டு ஆகிய மூன்று காவியங்களில் உழைக்கும் அடித்தட்டு மக்களுக்கு சரிசமமான வாய்ப்புகள் வழங்கப்படாத நிலைகள் குறித்துப் பேசுகின்றார்.

'புரட்சிக் கவியில்' உதாரன் கொலைக்களத்தில் மக்களுக்காக ஆற்றும் உரையில் உழைக்கும் மக்களுக்கு சரிசமமான வாய்ப்புகள் வழங்கப்படாததை கண்டித்துப் பேசுகின்றான். இதனை,

"..............................................................................

கக்கும் விஷம் பாம்பினுக்கும் பிலத்தினுக்கும்
கடும் பசிக்கும் இடையறா நோய்களுக்கும்,
பலியாகிக் கால் கைகள் உடல்கள் சிந்தும்
பச்சை ரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடையதாகத்
தந்ததெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின்றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலி வேஷம் போடுகின்றான்! பொதுமக்களுக்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின்றானா?"

என்பதன் மூலம் உழைப்பவர்களுக்கு சேர வேண்டிய உரிமைகளை மறுக்கும் ஆட்சித் தலைமையை விமர்சனத்துக்கு ஆளாக்குகின்றான்.

'கடல்மேற்குமிழிகளில்' செம்மறித்திறல் வயலில் உழைக்கும் உழவர்களை பார்த்து அவர்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகளை எண்ணி பாடுவதாக

"ஆளுவோர் என்ற சிலரை
அமைத்த துண்டோ நீ உலகே?
மீளு மாறின்றி மிகு பெரு மக்களைக்
கருவினில் விளைத்ததும் உண்டோ?
வாளொடு பெற்ற துண்டோ சிலரை?
வடுவொடு பெற்றாயோ பலரை?
நாளும் உழைப்பவர் தமைப் பெற்ற தாயே,
நய வஞ்சகரைப் பெற்று ளாயோ?
மேலவர் என்றொரு சாதியையும்,
வீழந்தவர் என்றொரு சாதியையும்,
தோலில் குருதியில் அமைந்திடுமாறு
தோற்று வித்தாயோ கூறு!"

என்று படைத்துள்ளார் பாரதிதாசன். உரிமைகள் ஏதுமின்றி சமுதாயத் துன்பச் சேற்றில் உழன்று கொண்டிருக்கும் ஏழை மக்களைப் பற்றி மின்னொளி

"ஏழையர் கற்றதுமில்லை - கல்வி
எய்திடவும் வழி இல்லை
கூழை அருந்திக் கிடப்பார் - தம்
கூரையில் தூங்கி எழுந்தே
பாழும் உழைப்பினில் ஆழ்வார் - நல்ல
பாங்கினில் பேசுதல் எங்கே?
வீழும் நிலை கொண்ட மக்கள் எந்நாள்
மீளுவர்?"

என்று சமவாய்ப்புகள் வழங்கப்படததால் அறியாமை மற்றும் வறுமையில் மக்கள் உழல்வதாக வையத்திறலிடம் கூறுகின்றாள்.

குறிஞ்சித் திட்டில் ஆரிய மங்கையான விநோதை மீது கொண்ட மோகத்தால் நாட்டை சரியாக நிர்வகிக்கத் தவறுகின்றான் மன்னன். இதனால் நாட்டில் பஞ்சமும், பட்டினியும் தலைதூக்குகின்றன. உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படாததால், தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பெறப் போராடுகின்றனர். இதனைச் சேந்தன் வாயிலாகப்

"பயிர்த்தொழிலா ளிகள்செய்தி பொத்தற் கூடைப்
பயறாகும். நிலைமையிலே சிறிது பார்த்து,
வயல்வரப்பில் குடைபிடித்து நின்று கொண்டு
வசைபாட்டுப் பாடிடுவார் தொழிற்கூட் டத்தை
வெயில்தனிலே துடிக்கின்ற குறிஞ்சித் திட்டை
விடுதலை செய் வோம்: உடைமை பொதுவாய்ச் செய்வோம்"

என்று கூறியிருப்பதன் மூலம் அறியலாம்.

இவ்வாறு ஆட்சித் தலைமையில் சம வாய்ப்புகள் மறுக்கப்பட்டதால் உழைப்பாளிகள் அடையும் துன்பநிலைகள் குறித்து மேற்கூறிய மூன்று காவியங்கள் பேசுகின்றன.

## ஆட்சித் தலைமை பின்பற்ற வேண்டிய நடுவுநிலைமை:

ஆட்சித் தலைமையானது எத்தகைய பாரபட்சங்கள் இன்றி நடத்து கொள்ள வேண்டும். இது குறித்து ரூசோ

"கடமையைச் சார்ந்து பொறுப்புக்களை மக்கள் மீது ஏற்றத் தாழ்வாகச் சுமத்தும் அதிகாரம் ஆட்சித் தலைவனுக்குப் பொருந்தாது. அப்படிச் சுமத்தப் படுவது ஆரவாரத்தைக் காட்டும்; பொதுத் தன்மையை இழக்கும்; ஆட்சித் தலைவனின் அதிகாரத் தகைமைக்கு ஊறு விளையும்" என்று ஆட்சித் தலைமையானது கடமைப் பொறுப்புக்களை நடுவு நிலைமையோடு கையாள வேண்டுமென்கிறார் ரூசோ.

மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமை பொறுப்புக்களில் இருந்து வழுவி வருணபேத ஆட்சியைக் காப்பாற்றுவதில் கண்ணுங்கருத்துமாய் இருப்பதால் புரட்சிக்கவி, கடல்மேற்குமிழிகள், குறிஞ்சித்திட்டு, தமிழச்சியின் கத்தி ஆகிய காவியங்களில் ஆட்சித் தலைமைக்கு மக்களால் ஊறு ஏற்படுவதாகப் பாரதிதாசன் காட்டுகின்றார். இதன் மூலம் ரூசோ கூறிய கடமைப் பொறுப்பிலிருந்து தவறாத நடுவு நிலைமை ஆட்சியின் சிறப்பு பாரதிதாசனால் மேற்கூறிய காவியங்களில் வலியுறுத்தப்படுவதைக் காணலாம்.

## சமத்துவமும் - சட்டரீதியான பாதுகாப்பும்:

சமத்துவம் ஒரு நாட்டில் நிலைநாட்டப்பட்டாலும் அடிக்கடி அதற்கு ஆபத்தை உண்டாக்கும் சூழல்கள் எழுவது இயல்பாகும். எனவே, சமத்துவக் கோட்பாடு நிலைகுறையாமல் இருக்க அடிக்கடி சட்ட ஆணைகள் வழங்கப்பட வேண்டும் என்கின்றார் ரூசோ. இதனைப் பற்றி

"சமத்துவப் பான்மையைச் சிதைக்கும் சூழ்நிலைகள் இடையறாது தோன்றிக் கொண்டிருப்பது பற்றியே அதை நிலைநிறுத்துவதற்குற்ற சட்ட ஆணைகள் இயங்கிக் கொண்டேயிருத்தல் அத்தியாவசியமாகிறது"

என்று சமத்துவத்திற்கு சட்டரீதியான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார் ரூசோ.

'புரட்சிக் கவியில்' பாரதிதாசன் சமத்துவ உரிமை நிலைகுலையாமல் காக்க மக்கள் சட்டம் செய்வதாக

> **"செல்லவ மெலாம் உரிமையெல்லாம் நாட்டாருக்கே**
> **நவையின்றி யெய்துதற்குச் சட்டம் செய்தார்**
> **நலிவில்லை! நலமெல்லாம் வாய்ந்த தங்கே!"**

என்று படைத்திருப்பதன் மூலம் அறியலாம்.

'கடல்மேற் குமிழிகளில்' செம்மறித்திறல் குடியரசு ஆட்சிக்கு உட்பட்ட திறல் நாட்டில் சமத்துவ உரிமைக்காக அறிஞர்கள் சட்டங்கள் இயற்றுவதாகக் கூறுகின்றான். இதனை,

> **"................................ சாதி**
> **கீழ் மேல் என்று ரைப்பவர்கள் வாழுவது சிறையே!**
> **ஒரு கடவுள் சண்டையெல்லாம் ஒழியும் மதம் ஒழிந்தால்!**
> **திருகோயில் தொழிற்சாலை! பார்ப்பனரும், கையில்**
> **செங்கோலேந்தும் பிறரும் மக்களைச் சார்ந்தோரே!**
> **பெருவாழ்வுக் கிவையெல்லாம் அடிப்படைத் திட்டங்கள்**
> **பிறிதுள்ள சட்டங்கள் அறிஞர்கள் அமைப்பார்கள்"**

என்று கூறுவதன் மூலம் அறியலாம்.

காதலா கடமையா என்னும் காவியத்தில் கிள்ளைச் சமத்துவ உரிமைகள் நிலைக்க சட்டம் செய்ய வேண்டும்' என்கிறாள் இதனை,

"பொருளிலார் இழிந்தோர் என்று புகலும்
இருளுளம் படைத்தோர் இருக்கின் றாரே
அயர்ந்தார் அயர அகப் பட்டது சுருட்டப்
பயின்றார் கையிற் பட்ட பழிப்பொருள்
இழிஞன் என் றொருவனை இயம்புமாயின்
அழிபொருள் இன்றே அழிதல் வேண்டும்
அழிபடத் தக்க வழிதான் என்னெனில்
உண்ண உடுக்க உறைய நுகர ஆம்
மண்பொருள் சரிநிகர் மக்கட் பொதுவெனச்
சட்டம் செய்வதாம்"

என்று சமத்துவ உரிமைகளைக் காக்கச் சட்டம் இயற்றப்படுவதை வரவேற்கின்றாள். ரூசோ கூறிய சமத்துவதிற்கான சட்டப் பாதுகாப்பை மேற்கூறிய மூன்று காவியங்கள் மூலம் சொல்லியுள்ளார் பாரதிதாசன்.

**சமத்துவம் குலைதல்:**

சமத்துமம் என்பது ஆட்சித்தலைமை, அரசாங்கம், குடிமக்கள் என்னும் மூன்று பிரிவுகளிடையே சமமாக இருக்க வேண்டும். இல்லையெனில் சமத்துவக் கோட்பாடு குலைய நேரிடும். இதனைப் பற்றி ரூசோ

"ஆட்சி தலைமை, அரசாங்கம், குடிமக்கள் என்ற இம்முப்பிரிகளுக்கிடையே நிலவும் உறவுபாட்டு முறையில் மாறுதல் ஏற்படுமாயினும் சமத்துவம் என்பது அக்கணமே மாய்ந்து விடும்"

என்று கூறுகின்றார். மேலும், இந்தச் சமத்துவக் குலைவினால் மக்களின் இயல்புக்கேற்ற பல்வேறு வகையான அரசாங்கங்கள் ஏற்படும் என்கிறார் ரூசோ.

பாரதிதாசன் படைத்தக் கதைக் காவியங்களில் பெரும்பாலும் மன்னனுக்கும், மக்களுக்கும் இடையே சமத்துவச் சீர்குலைவு ஏற்படுவதைக் காணலாம். இதற்குக் காரணமாக மன்னர்கள் தம் இஷ்டப்படி அரசோச்ச விழைவதைக் கூறலாம். இதனால் மன்னர்களுக்கும், மக்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டு மன்னராட்சி வீழ்த்தப்பட்டு மக்கள் விரும்பும் அரசாங்கங்கள் அமைக்கப்படுவதைக் இக்காவியங்கள் பரக்கப் பேசுகின்றன. புரட்சிக்கவி, வீரத்தாய், கடல்மேற்குமிழிகள், குறிஞ்சித்திட்டு, காதலா? கடமையா? தமிழச்சியின் கத்தி ஆகிய கதைக் காவியங்கள் மன்னர் மற்றும் மக்களுக்கு இடையே எழுந்த சமத்துவ முரண்பாடுகளால் மன்னராட்சி வீழ்த்தபட்டு மக்களின் விருப்பப்படி குடியாட்சி அமைக்கப்படுவதைக் காட்டுகின்றன. சமத்துவக் குலைவினால் மக்கள் விருப்பப்படி அரசாங்கங்கள் தோன்றும் என்ற ரூசோவின் கருத்து மேற்சொன்ன காவியங்கள் முலம் நிருபிக்கப்படுகின்றது.

குடியரசு ஆட்சியில்தான் உண்மையான சமத்துவத்தைக் காணமுடியும் என்கிறார் ரூசோ. இதுபற்றி

"உண்மையான ஒரு குடியரசாட்சியில் ஒழுக்கம், திறமை, கொள்கைகள், வாய்ப்பு வசதிகள் ஆகியவை சரிசமமான வகையில் அமைந்திருப்பதால் சீட்டுக் குலுக்கித் தேர்வு முறையில் குறைபாடுகளுக்கு இடம் அரிதே"

என்று கூறியிருப்பதன் வாயிலாக குடியரசு ஆட்சியில் எப்படிப்பட்ட சமத்துவ வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன என்பதை அறியலாம்.

புரட்சிக்கவியில் மன்னராட்சியை வீழ்த்திய மக்கள் அரசியல் விடுதலையையும் பொருளாதார சமத்துவத்தையும் ஒருங்கே பெற்றதாகப் பாரதிதாசன் கூறுகின்றார்

வீரத்தாயில் சுதர்மன் மணிபுரியைக் குடியரசு நாடாக மாற்றுகின்றான். மேலும் மக்களக்கு அரசியல் விடுதலையையும் சமத்துவ உரிமையையும் வழங்கவதாகக் காட்டுகின்றார்.

கடல்மேற்குமிழிகளில் செம்மறித்திறல் மற்றும் வையத்திறலால் திறல் நாடு குடியரசுக்கு உட்படுத்தப்படுகின்றது. இதனால் மக்கள் எல்லாம் சமுதாய விடுதலையுடன் சமத்துவ உரிமைகளையும் எய்துகின்றனர். இந்த உரிமைகளைப் பெற்ற மக்கள் உலகெங்கிலும் குடியாட்சி மலர வாழ்த்துகின்றனர். இதனை

நம்மருமை நாடன்றிப் பெரு நாட்டை இந்த
நன்னிலையில் சேர்ப்பதற்கும் திட்டமிட்டார் மக்கள்.
செம்மையுறத் திருநாட்டில் மணிக்கொடியும் ஏற்றித்
திகழ்ந்திடுக உலகமெலாம் குடியரசே என்றார்

என்ற வரிகளின் மூலம் இதனை அறியலாம்.

குறிஞ்சித்திட்டில் திரைய மன்னனின் ஆட்சியை வீழ்த்திய பிறகு மக்கள் குடியாட்சியை நிலைநாட்டுகின்றனர். இதனை

கோனாட்சி குடிக்கோ னாட்சி மற்றும்
குடியாட்சி என்று முறைபல கூறுவர்.
திரையன் செழியன் செல்வாக் குடைய
எல்லா ஆட்சியைப் பார்க்கிலும் இங்கே
அறிவும் ஆற்றலும் ஒழுக்கமும் ஆர்ந்த
மக்களின் உள்ளம் கவரத் தக்கோன்
இட்டதே சட்டம் என்னுமோர் ஆட்சியே
விழுந்த குறிஞ்சிக்கு வேண்டும் இந்நாள்"

என்ற கவிதை வரிகள் மூலம் காட்டுகின்றார் பாரதிதாசன்.

காதலா ? கடமையா ? என்னும் காவியத்தில் விடுதலை பெற்றக் கொன்றை

நாடு குடியரசக்கு உட்படுத்தப்படுகின்றது அந்தக் குடியரசு நாட்டில் மக்களுக்கு சமத்துவ உரிமைகள் வழங்கப்படுவதாகப் பாரதிதாசன்

ஏரி தோண்ட இல்லையே, என்றார்.
"இல்லை என்ப திராதென் றான்" மகன்
"திருக்கினர் நாட்டின் செல்வர் கட்கும்
இருக்க குடிசை இல்லை" என்றார்.
"இல்லை என்றசொல் இரா தினி" என்றான்
"கடல்நிகர் நாட்டில் கணக்கிலா மக்கள்
உடல்நல மில்லா தொழிந்தனா" என்றார்
"இல்லை என்பதே இராதினி" என்றான்
"எப்படி அரசியல்" என்றார் கிழவர்
"ஒப்பிட எவர்க்கும் ஒருவீ டொர நிலம்
ஒரு தொழில் ஓர்ஏர், உழவு மாடுகள்
விரைவிற் சென்றால் தருவார்" என்றான்

என்ற சமத்துவச் சமுதாயம் குடியரசு நாடாகிய கொன்றை நாட்டில் சமைக்கப்பட்டதைக் காட்டுகின்றார்.

## சட்டமியற்றும் அவைகளில் சமத்துவம்.

நாட்டிற்குச் சட்டங்கள் வகுக்கும் அவைகளில் எல்லா சாமானிய மக்களும் பங்கு பெற்றிருக்க என்கின்றார் ரூஸோ. இதைப் பற்றி

"'எல்லாவகை மக்களுக்கும் சமமான இடமில்லாத ஒரு சபை நிறைவேற்றும் ஆணைகளுக்கு எவ்வாறு மதிப்பளிக்க வியலும் ?" என்று கேட்பதன் மூலம் இதனை அறியலாம்.

பாரதிதாசன் 'புரட்சிக்கவி' யில் மக்கள் பங்கேற்காத ஆட்சி மன்றத்தில் அமர்ந்து கொண்டு மன்னன் இடும் ஆணைகளுக்கு உதாரன் பணிய மறுப்பதைக் காட்டுகின்றார். மேலும் அமுதவல்லி ஆளும் உரிமையை மக்களுக்கு தரநினைத்திருந்ததை

"அரசன் மகள் தன் நாளில் குடிகட் கெல்லாம்
ஆளுரிமை பொதுவாக்க நினைத்திருந்தாள்"

என்று உரைப்பதன் மூலம் சட்டமியற்றும் அவைகளில் சாமானிய மக்களும் இடம் பெறல் வேண்டும் என்ற ரூசோவின் கருத்த இவ்வரிகளில் பிரதிபலிக்கக் காணலாம்.

வீரத்தாயில் சதர்மன் ஆட்சியில் மக்கள் பங்கேற்கும் வகையில் மணிபுரி நாட்டில் குடியரசை அமைப்பதாக

"இந்த மணிபுரிதான் இங்குள்ள மக்களுக்கு
சொந்த' உடைமை! சுதந்தரர்கள் எல்லாரும்!

**ஆதலினால் இந்த அழகு மணி புரியை**
**ஓதும் குடியரசுக் குட்படுத்த வேண்டுகின்றேன்!**

என்று காட்டியிருப்பதன் மூலம் அறியலாம்.

'கடல்மேற் குமிழிகளில்' தனியாட்சி என்னும் முடியாட்சி போய் மக்கள் பங்கேற்கும் குடியாட்சி திறல் நாட்டில் அமையப் போவதை வையத்திறல் பெருநாட்டு மன்னனிடம்

**ஆள்வோர் என்றும் அடங்குவோர் என்றும்**
**பிறந்தார் என்பது சரடு!**
**தனி ஒரு மனிதன் தன் விருப்பப்படி**
**இனி நாட்டை ஆள்வ தென்ப தில்லை!**
**மக்கள் சரி நிகர்!**

**எல்லாத் துறையிலும் எவரும் நிகரே!**
**நெடு நாட்டு மக்களின் படியினர்**
**குடியரசு நாட்டல் எம் கொள்கையாகும்"**

என்று கூறுவதன் மூலம் இதனை அறியலாம்.

காதலா? கடமையா? என்னும் காவியத்தில் கொன்றை நாட்டுக்கு விடுதலை நல்கிய மாப்பேரரசன்

**"இன்று நானும் என்பெரும் மறவரும்**
**கொன்றை நாட்டி னின்று செல்வோம்**
**வாட்பொறை யுள்ளான் மாப்பே ரறிஞன்**
**தாரோன் உள்ளான் தகுதி யுள்ளான்**
**மகினனும் கிள்ளையும் மற்றும் பலரும்**
**இருக்கின்றார்கள் இவர்கள் கொன்றைக்குப்**
**பொருத்தமான புதுமுறை வகுப்பர்**
**நல்லதோர் ஆட்சியில் எல்லீ ருமாக**
**மல்கு சீரோடு வாழிய"** என்றான்.

என்று கூறியிருப்பதன் மூலம் மக்கள் ஆட்சி பீடம் ஏறும் புதுமுறை ஆட்சி கொன்றையில் மலரப் போவதைப் புலப்படுத்துகின்றான்.

## இக்கட்டுரைக்குப் பயன்பட்ட நூல்கள்


1. ரூஸோ — சமூக ஒப்பு நெறி (மொழி பெயர்ப்பு)
சாதித்ய அக்காதெமி
புதுதில்லி
பதிப்பு–1964

2. கொடுமுடி ராஜகோபலன் — ஆட்சிக் கலை (ரூஸோ)
ஸ்டார் பிரசுரம்
72, பெரிய தெரு
திருவல்லிக்கேணி, சென்னை–5
முதற்பதிப்பு–பிப்ரவரி–1981

3. சாமிநாத சர்மா — ரூஸோ (வாழ்க்கை வரலாறு)
சக்தி காரியாலயம்
சென்னை
முதற்பதிப்பு–ஜூன்–1943.

4. பாரதிதாசன் — பாரதிதாசன் பாடல்கள்
(நான்கு தொகுதிகள்)
நியூசெஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட்
லிமிடெட், அம்பத்தூர், சென்னை–98
முதற்பதிப்பு–டிசம்பர்–1993.

5. பாரதிதாசன் — காதலா ? கடமையா ?
மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு, சென்னை–1
முதற்பதிப்பு–டிசம்பர்–1992.

6. பாரதிதாசன் — பாண்டியன் பரிசு
மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு சென்னை–1
முதற்பதிப்பு–செப்டம்பர்–1995.

7. பாரதிதாசன் — குறிஞ்சித் திட்டு
மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு சென்னை–1
முதற்பதிப்பு–டிசம்பர்–1992.

8. பாரதிதாசன் — தமிழச்சியின் கத்தி
மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு சென்னை–1
முதற்பதிப்பு–டிசம்பர்–1992.

9. அறிவொளி — பாரதிதாசன் தனித்தன்மை
மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கித் தெரு சென்னை–1
முதற்பதிப்பு–டிசம்பர்–1990

10. மலர் — பாவேந்தர் பாரதிதாசன்
நூற்றாண்டு விழா மலர் – 1991
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி.

11. பி.ஆர்.குப்புசாமி — மக்கள் புரட்சியின் மாபெரும் கவிஞர்
எமரல்ட் நூல் வெளியீட்டாளர்,
சென்னை–2
முதற்பதிப்பு–1991.

12. சுபாஷ் கஷ்யப் — நமது அரசியலமைப்பு (மொழிபெயர்ப்பு)
நேஷனல் புக் டிரஸ்ட் வெளியீடு
புதுதில்லி
முதற்பதிப்பு–1997